# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 24 ஞாயிற்றுக்கிழமை (08-07-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:224


# புலிகளைத் தடை செய்ததான பிரகடனம் சட்ட வலுவற்றது!

## விளக்குகின்றார் விநாயகமூர்த்தி எம்.பி.

கொழும்பு,ஜூலை8

1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்கப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை வெறும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஜனாதிபதியால் தடை செய்யமுடியாது. நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் ஒரு சட்டத் திருத்தத்தின் மூலமே அதனைச் செய்ய முடியும்.

எனவே புலிகளைத் தடைசெய்வதாக ஜனாதிபதி இப்போது விடுத்திருக்கும் அறிவிப்பு சட்டரீதியான வலுவற்றது. இதனால் புலிகள் இயக்கம் இப்போது சட்ட ரீதியாகத் தடை செய்யப்பட்ட ஓர் இயக்கமல்ல.

- இவ்வாறு பத்திரிகைச் செய்திக் குறிப்பு ஒன்றின் மூலம் நிலைமையைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி.

1998இல் அவசரகாலச் சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்ட தடை கடந்த 4ஆம் திகதி - அந்த அவசரகாலச் சட்டம் காலாவதியானதுடன் - நீங்கி விட்டது தெரிந்ததே.

இதனையடுத்து பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் புலிகள் இயக்கம் தொடர்ந்து தடை செய்யப்பட்டிருப்பதாக ஜனாதிபதி அறிவித்திருக்கின்றார்.

அது குறித்தே விநாயகமூர்த்தி எம்.பி. கருத்துத் தெரிவித்திருக்கின்றார். அவர் குறிப்பிட்டிருப்பதாவது:-

1978இன் 16ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் முதலில் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடையை நீக்கக்கோரி கொழும்பில் வர்ணச் சுவரொட்டிகள்!

கொழும்பு,ஜூலை8

"புலிகள் மீதான தடையை நீக்கி சமாதானப் பேச்சுக்களை நடத்துங்கள்" என்று கோரும் - கண்ணைக் கவரும் - வர்ணச் சுவரொட்டிகள் நேற்று கொழும்பில் பல இடங்களிலும் ஒட்டப்பட்டிருந்தன.

"எவர், எப்படிக் கூறினாலும் சமாதானத்துக்கு வழி பேச்சே!" என்றும் -

"தடை புலிகளுக்கு மட்டுமா? அல்லது அதன் மூலம் சமாதானப் பேச்சுக்களுக்குமா?"- என்றும்

அந்தச் சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மூன்று மொழிகளிலும் அமைந்த இந்தச் சுவரொட்டிகள் ஒரே இரவில் கொழும்பிலும், புறநகர்ப் பகுதிகளிலும் ஸ்ரீஜெயவர்த்தனபுரவிலும் ஒட்டப்பட்டுவிட்டதால் இந்தச் சுவரொட்டிகளின் பின்னணியில் பலமான சக்திகள் இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

கோட்டை, புறக்கோட்டை, கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, பொரளை போன்ற இடங்களில் உள்ள முக்கிய இடங்களிலும் அரச கட்டடங்களுக்கு அருகிலும், நாடாளுமன்றத்துக்குச் செல்லும் வீதிகளின் இரு மருங்கிலும் பெருமளவில் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இவற்றை யார் ஒட்டினார்கள் என்பதைக் கண்டறிவதற்கான புலன் விசாரணைகள் நடைபெற்று வருவதாகப் பொலீஸார் தெரிவித்தனர். (உ-6)

## ஜனாதிபதியின் பிரகடனம் சட்டப் பெறுமதி ஏதுமற்றது

### ஓய்வுபெற்ற நீதியரசர் கூறுகின்றார்

கொழும்பு,ஜூலை8

1979ஆம் ஆண்டின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஜனாதிபதி தடைசெய்ததாக அறிவித்திருப்பது சட்டவலுவற்றது என்று ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசரும் முன்னாள் பிரதி சொலிசிட்டர் ஜெனரலுமான கே.எம்.பி.குலதுங்க தெரிவித்திருக்கின்றார்.

இத்தகைய பிரகடனம் ஒன்றை விடுப்பதற்கு அந்தச் சட்டத்தில் இடமேதுமில்லை.

* புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதாயின் இப்போதைய நிலையில் அவசரச் சட்டமூலம் ஒன்றை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வருவது அல்லது அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தின் கீழ் ஏதேனும் வழிவகைகள் உள்ளதா என்பதை ஆராய்வதும்தான் வழிகளாகும்.

ஜனாதிபதியின் இந்தப் பிரகடனம் சட்டமாக்கும் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டது. அரசமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறும் நடவடிக்கையுமாகும்.

- இப்படி முன்னாள் நீதியரசர் குலதுங்க மேலும் தெரிவித்தார்.

கொழும்பு ஹல்ஸ்டோர்ப் சட்டத்துறை வட்டாரங்கள் பலவும் இதே போன்ற தகவல்களையே விடுத்தன.

ஜனாதிபதியின் பிரகடனத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடருவது குறித்து ஆராயப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## நெல்லியடி மோதல் சம்பவத்தில் பலியானவர் பயங்கரவாதியாம்!

யாழ்ப்பாணம்,ஜூலை8

நெல்லியடிப் பகுதியில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவத்தை அடுத்து அங்கு சுட்டுக் கொல்லப்பட்டவர் ஒரு 'பயங்கரவாதி' என்று விசேட ஊடகத் தகவல் மையம் நேற்று நண்பகல் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

*ஜூலை 5ஆம் திகதி இரவு 8.40 மணியளவில், பருத்தித்துறைக்குத் தென்கிழக்கே சுமார் 5 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள நெல்லியடிப் பிரதேசத்தில் நடைரோந்தில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படையினர் மீது பயங்கரவாதிகள் கைக்குண்டு ஒன்றை வீசினர். சிறியரக ஆயுதங்களைக் கொண்டு படையினர் திருப்பித் தாக்கினர்.*

*பயங்கரவாதிகள் அப்பிரதேசத்தில் இருந்து தப்பி ஓடினர்.*

*அப்பிரதேசத்தில் தேடுதல் நடத்திய படையினர் மோதலில் உயிரி*

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்டாலின் பிணையில் விடுதலை

சென்னை,ஜூலை8

சென்னை நகரில் மேம்பாலம் கட்டுவதில் ஊழல் இடம்பெற்றதாகத் தெரிவித்து கலைஞர் கருணாநிதியுடன் சேர்த்துக் கைது செய்யப்பட்ட சென்னை மேயர் மு.க.ஸ்டாலின், முன்னாள் தி.மு.க. அமைச்சர்கள் கோ.சி.மணி, பொன்முடி, முன்னாள் தலைமைச் செயலாளர் கே.ஏ.நம்பியார் உட்பட ஏழு பேர் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி அசோக்குமார் நேற்று முன்தினம் மாலையில் அவர்களுக்கு பிணை அனுமதி வழங்கியதை அடுத்து அவர்கள் நேற்றுப் பிணையில் வெளியில் வந்தனர்.

மதுரைச் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஸ்டாலினை வரவேற்க

(14ஆம் பக்கம் பார்க்க)

## அதியுயர் பாதுகாப்புப் பிரதேசமாக கொழும்பின் சில பகுதிகள் பிரகடனம்

### விசேட வர்த்தமானி மூலம் ஜனாதிபதி விடுத்தார்

கொழும்பு,ஜூலை8

தலைநகர் கொழும்பில் சில முக்கிய இடங்களை அதியுயர் பாதுகாப்புப் பிரதேசமாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரகடனப்படுத்தியுள்ளார்.

விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஜனாதிபதி இந்தப் பிரகடனத்தை வெளியிட்டுள்ளார்.

அரசுக்கு எதிராக ஐ.தே.கட்சி தலைநகரில் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தாமல் இருப்பதற்காகவும் -

தலைநகரில் நடைபெறும் எதிர்க்கட்சிகளின் ஆர்ப்பாட்டங்களுக்கு வெளியிடங்களில் இருந்து வாகனங்கள் மூலம் ஆள்களைக் கொண்டு வந்து குவிப்பதைத் தடுப்பதற்காகவுமே -

இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளதாக சுயாதீன வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் -

கொழும்பு மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள முக்கிய வீதிகள், வெள்ளவத்தைப் பாலம், கனத்தை மயானம், லிப்டன் சுற்று வட்டம், கொழும்புத் துறைமுகத்தில் இருந்து வெள்ளவத்தைப் பாலம் வரையிலான கரையோரப் பிரதேசம், புறக்கோட்டை மற்றும் வெள்ளவத்தை, கறுவாத்தோட்டம் ஆகிய பகுதிகளில் உள்ள முக்கிய வீதிகள் ஆகியனவே அதியுயர் பாதுகாப்புப் பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த அதியுயர் பாதுகாப்புப் பிரதேசங்களுள் கனரக வாகனங்கள் செல்வதும் அனுமதியற்ற நடமாட்டங்களும் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளன. இவற்றை அவதானிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கும் பொறுப்பாக பொலீஸ் மா அதிபர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கருணாநிதி கைது விவகாரம்: விசாரிக்க தனிநபர் ஆணையம்

சென்னை,ஜூலை8

தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி, மத்திய அமைச்சர்கள் முரசொலி மாறன், ரி.ஆர். பாலு ஆகியோர் கடந்த வாரம் கைது செய்யப்பட்ட போது தமிழகப் பொலீஸார் அத்துமீறி நடந்துகொண்டார்களா என்பதை விசாரிப்பதற்கு ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.ராமன் தலைமையிலான தனிநபர் ஆணையம் ஒன்றைத் தமிழக அரசு நியமித்திருக்கின்றது.

மூன்று மாதங்களுக்குள் இந்த ஆணையம் விசாரணை நடத்தித் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என தமிழக அரசின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.

இந்த விடயத்தில் தமிழகப் பொலீஸார் அத்துமீறி நடந்துகொண்டதாகத் தெரிவித்து, அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசை மத்திய அரசு எச்சரித்த பின்னரே இந்த ஆணையம் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ)

## சில அமைச்சர்களைக் கண்காணிக்க சி.ஐ.டியினருக்கு ஜனாதிபதி உத்தரவு

### சிங்கள வார இதழ் தகவல்

கொழும்பு,ஜூலை8

அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகளால் நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், சில அமைச்சர்கள் அரசில் இருந்து விலகி ஐ.தே.கட்சியுடன் இணையக்கூடும் என்று கருதப்படுவதால் அவர்களைத் தீவிரமாகக் கண்காணிக்கும்படி ஜனாதிபதி புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் இருந்து வெளியாகும் 'ராவய' பத்திரிகை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்ற விவகார அமைச்சரும் சமுர்த்தி அமைச்சருமான எஸ்.பி.திஸநாயக்க மற்றும் சுற்றுப்புறச் சூழல் அமைச்சர் மஹிந்த

(14ஆம் பக்கம் பார்க்க)



மக்கள் வங்கியின் 40 ஆவது ஆண்டு விழா மக்கள் வங்கியின் யாழ். நகரிலுள்ள வட பிரதேச அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா மற்றும் விழாவுக்குத் தலைமை வகித்த மக்கள் வங்கி வடபிரதேச உதவிப் பொது முகாமையாளர் கிங்ஸ்லி இராஜநாயகம் ஆகியோர் உரையாற்றுவதையும் -

விழா மேடையில் மக்கள் வங்கிப் பலாலிக் கிளையின் முகாமையாளர் மற்றும் சாவகச்சேரி கிளை முகாமையாளர் ரகு துரைசிங்கம், மக்கள் வங்கி வடபிரதேச முகாமையாளர் எஸ்.சிவபாதம், கன்னாதிட்டி கிளைமுகாமையாளர் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் சிறி கிருஷ்ணானந்தசர்மா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (ஜ-5) (படங்கள்:- றோய் மதிவதனன்)

# ஆசிரியர் நியமனம் வழங்குவதில் பட்டதாரிகள் புறக்கணிக்கப்படுவது ஏன்?

## அமைச்சர் டக்ளஸுக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,ஜுலை8

ஆசிரிய நியமனங்களில் பல தரப்பட்ட பிரிவின் உள்வாங்கப்படுகின்ற போதும் பட்டதாரிகள் புறக்கணிக்கப்படுவது ஏன்?

வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளது. வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரிலேயே சங்கம் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கல்வி கற்று பட்டம் பெற்றும் ஏறத்தாழ 3 வருட காலமாக எந்தவிதமான தொழில் வாய்ப்பும் இன்றி தொள்ளாயிரத்துக்கு மேற்பட்ட பட்டதாரிகள் எமது சங்கத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

எமது அவல நிலை தொடர்பாக நாம் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரச அதிகாரிகளுக்கும் எடுத்துக் கூறியபோதும் இதுவரை எந்தவிதமான பலன்களும் ஏற்படவில்லை.

அண்மையில் வடக்கு - கிழக்கு மாகாண சபையினால் வழங்கப்பட்ட ஆசிரிய நியமனங்களில் பாடத்துறைகள் ரீதியாகப் பாகுபாடு காட்டப்பட்டுள்ளது. இதனால் 1995ஆம் ஆண்டு பட்டம் பெற்று வெளியேறிய 25க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் ஆசிரிய நியமனங்களில் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகள், யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்குப் பல தடவைகள் எடுத்துக் கூறியும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ளாமல் இருப்பதற்குரிய காரணம் என்ன?

அண்மையில் விண்ணப்பம் கோரப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண நிர்வாக சேவை ஆள்சேர்ப்புக்கான வயதெல்லை 30ஆக வரையறுக்கப்பட்டுள்ளது.

ஆனால் வடக்கு - கிழக்கு மாணவர்கள் யுத்த சூழ்நிலைகள் காரணமாகப் பல்கலைக் கழகங்களிலிருந்து பட்டம் பெற்று வெளியேறும் போது 30 வயது கடந்து விடுகின்றது. இதனால் பெரும் எண்ணிக்கையான பட்டதாரிகள் நிர்வாக சேவைப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இதனால் அந்த வயதெல்லையை 35ஆக அதிகரிக்கவும் விண்ணப்ப முடிவு திகதியை நீடிக்கவும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரிய நடவடிக்கையை விரைந்து மேற்கொள்ளவேண்டும்.

பட்டம் பெற்று வெளியேறி வேலை வாய்ப்பு இன்றி பல வருடங்களாக அலைந்துகொண்டிருக்கும் யாழ். மாவட்டப் பட்டதாரிகளாகிய நாம் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

எமக்கு ஏற்பட்டுள்ள நிலையை நீக்குவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவில்லை என்றால் நாம் அகிம்சை வழியிலான போராட்டங்களில் ஈடுபடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவோம்.

எனவே மதிப்பிற்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் எமது நிலையை அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்து எமக்கு விமோசனம் கிடைக்க உதவ வேண்டும்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் யாழ்.அரச அதிபர், வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ம-4)

# அரியாலையில் மீளக்குடியமர விரும்பும் பொதுமக்களின் விவரங்கள் சேகரிப்பு

கோண்டாவில்,ஜுலை8

அரியாலைப் பகுதியில் மீளக்குடியமர விரும்புகின்ற மக்களின் விவரங்கள் கிராம அலுவலர்களினால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த கால வன்செயலைத் தொடர்ந்து இடம்பெயர்ந்து மீளக்குடியமர அனுமதிக்கப்படாத ஜே-94, ஜே-95, ஜே-96 ஆகிய பிரிவு மக்களின் விவரங்களே சேகரிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த வாரம் அரியாலைப் பகுதிக்கு விஜயம் செய்த 514ஆவது படையணியின் கட்டளை அதிகாரியின் பணிப்பின் பேரில் மக்கள் மீளக்குடியமர வசதியாக இவ்விவரங்கள் பெறப்படுகின்றன.

மீளக்குடியமர்வு சம்பந்தமாக இப்பகுதியைச் சேர்ந்த சிலர் இராணுவக் கட்டளை அதிகாரியிடம் சென்று கோரிக்கை விடுத்ததை அடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஜ-86)


## நீராவியடி ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்யநாதன் தேவஸ்தானம்

### கடையிற்சுவாமி கோயில்

### புனராவர்த்தன பிரதிஸ்டா மகா கும்பாபிஷேகம்

## திருக்குட முழுக்கு விழா

*கிரியா ஆரம்பம்*

09.07.2001 திங்கட்கிழமை காலை 6.15 முதல் 7.20 வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறும்.

*எண்ணெய்க் காப்பு*

10.07.2001 செவ்வாய் மதியம் 12.00 மணிமுதல் 11.07.2001 புதன் பி.ப. 2.00 மணிவரை அடியார்களின் எண்ணெய்க் காப்பு இடம்பெறும்.

12.07.2001 ஆனி 28 வியாழக்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு புண்ணியாக வாசனம், யாகபூஜை, மஹா பூர்ணாகுதி, வேதஸ்தோத்திர தேவார பாராயணம் நடைபெறும். அன்று 6.24 மணி முதல் 7.09 மணி வரை உள்ள சுப முகூர்த்தத்தில் பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து தசதர்சனம் ஆசார்ய சம்பாவனை மஹா அபிஷேகம் விஷேட பூஜை மதியம் 12.00 மஹேஸ்வர பூஜை இடம்பெறும்.

சர்வதேச இந்து மத குருபீடாதிபதி

**சிவஸ்ரீ ஜம்புகேஸ்வர மகேஸ்வர சிவாச்சார்யாரின்**

அருள் ஆசியுடன்

தர்மசாஸ்தா குருகுல அதிபர்

**சிவஸ்ரீ தானு மகாதேவக் குருக்கள்** ஆசியுடன்

பிரதிஸ்டா பிரதம குருவாக

வேத சிவாகம ஜோதிட சிகாமணி

**சிவப்பிரம்மஸ்ரீ நாகேந்திர பாலசுப்ரமணிய சிவாச்சார்யார்**

அவர்கள் நடத்திவைப்பார்.

*"ஸ்ரீ கடையிற் சுவாமியை அனுக வேண்டும் வரம் கிட்டும்"*

ஸ்ரீ கடையிற் சுவாமிகள் தேவஸ்தானம்.

*நீராவியடி.* (89866)


# கூட்டுறவுச் சங்கம் முடங்கிக் கிடப்பதாக முறையீடு

அச்சுவேலி,ஜுலை8

வலி.கிழக்கு பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம் உரிய முறையில் செயற்படாமல் முடங்கிக் கிடப்பதாக அதன் அங்கத்தவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சங்கத்துக்கு என அலுவலகம் ஒன்று கூட இல்லாமல் இருப்பதால் உறுப்பினர்கள் மற்றும் கால்நடை வளர்ப்போர் தமது தேவைகள், குறைகளை நிவர்த்தி செய்ய முடியாமல் இருப்பதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் கால்நடை வளர்ப்போருக்கும் உறுப்பினர்களுக்கும் பல்வேறு உதவிகள் ஆலோசனைகளை வழங்கிவரும் இந்தக்காலப்பகுதியில் வலி. கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம் உரிய முறையில் செயற்படாமல் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது (ம-11)

# கடைத்தொகுதி அமைக்க நிதி ஒதுக்கீடு

வடமராட்சி கிழக்கு,ஜுலை8

மணற்காட்டுச்சந்தையில் கடைத் தொகுதி ஒன்று அமைப்பதற்கென முதற்கட்டமாக ஒரு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபை இதற்கான நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது. (ம-182)

# அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி

வலி.தெற்கு பிரதேச சபைப் பிரிவில் இவ்வருடம் மேற்கொள்ளப்பட உள்ள அபிவிருத்திப் பணிகளுக்கென 17 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் க.கமலசேகரன் தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப் படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ம-152)


## வடகடல் (வ-து) நிறுவனம்

## NORTH SEA LTD.

வடகடல் (NORTH SEA LTD.) வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் மீன்பிடி வலைத் தொழிற்சாலை விரைவில் உற்பத்தியைத் தொடங்க இருப்பதால் இந்நிறுவனத்திற்கு ஊழியர்கள் தேர்வு நடைபெறவுள்ளது. முன்பு வரையறுக்கப்பட்ட சீ-நோர் (CEY-NOR) நிறுவனத்தில் கடமை புரிந்தோருக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளதால் அவர்களை எதிர்வரும் வியாழக்கிழமை (12-07-2001) அன்று காலை குருநகரில் உள்ள வடகடல் நிறுவனத்தின் வலைத் தொழிற்சாலைக்கு வந்து பிரதிப் பொதுமுகாமையாளரைச் சந்திக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

பிரதிப் பொது முகாமையாளர்,
*வடகடல்(வ/து),*
*குருநகர்.*

(C/17335)


## நீங்கா நினைவில் 31ஆம் நாள்

அன்னையிடம் 13 - 01 - 1938



ஆண்டவனிடம் 09 - 06 - 2001

## அமரர்

## ஞா.செபஸ்தியாம்பிள்ளை

## G.S.PILLAI

(ஓய்வுபெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர்)

*"உமது மீட்பை என் கண்கள் கண்டு கொண்டன"* (லூக். 2:31)

ஓட்டத்தை முடித்துக்கொண்ட உத்தமனே - உன் இழப்பால்
ஆட்டம் காணுதையா குடும்பத்து உறவெல்லாம்
வாட்டமுற்ற உந்தன் வண்ணமகன் நிஷாந்தன் - எதிலும்
நாட்டமின்றி நலிகின்றான் பாராயோ?
தேட்டம் விண்ணகத்தில் தேடிய அருள்மகனின்
தெய்வீகக் காட்சிதனைக் கண்ட உந்தன் கண்கள் இங்கே
பேறுபெற்றவையே! பெருமைக்குரியவையே!!
அருகில் இருந்த துணை அருள்மணிகளை இழக்க
அருமைப் புதல்வியவள் அலறித் துடிதுடிக்க
உன் அன்னையவள் முதுமையில் கதறியழ
ஜீ.எஸ்.பிள்ளையல்ல இனி நான் என்றென்றும்
ஜீசஸ் பிள்ளை யென்றோ பறந்தோடிப் போய்விட்டாய்?
செபிக்கின்றோம் உன் ஆன்மா இறைவனில் சாந்தி காண!

*இவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக நாளை (09.07.2001) திங்கள் மாலை 4.30 மணிக்கு ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.*

*பிரிவால் வாடும்:*
**மனைவி, பிள்ளைகள், தாய், அருள்திரு.எஸ்.ஏ.றொஷான்** (மகன்)

*54, 2/1, இராஜசிங்க வீதி, வெள்ளவத்தை.*

(89839)

# பலஸ்தீனத் தீவிரவாதிகளைத் தாக்கும் இஸ்ரேலின் முடிவுக்குக் கண்டனங்கள்

## சர்வதேச சமூகத்திடமிருந்து

பலஸ்தீனத் தீவிரவாதிகளை இலக்கு வைத்துத் தாக்குவது என்ற இஸ்ரேலிய அரசின் முடிவுக்கு ஐ.நா. செயலாளர் நாயகம் கோபிஅனான் உட்படப் பல தலைவர்கள் தமது கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் மேற்பார்வையில் மேற்குக்கரை மற்றும் காஸா பிரதேசங்களில் யுத்தநிறுத்தம் நடைமுறைப்படுத்தப்படும் இந்தச் சமயத்தில், பலஸ்தீனத் தீவிரவாதிகள் மீது தாக்குதலைத் தொடர இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சரவை முடிவு செய்ததற்கே கண்டனங்கள் எழுந்துள்ளன.

பலஸ்தீனத் தீவிரவாதிகள் இலக்கு வைத்துக் கொல்லப்படுவது சர்வதேச சட்டவிதிகளுக்கு மாறானது என்பதால் இஸ்ரேல் இந்த முடிவை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் கேட்டுள்ளார்.

இஸ்ரேலின் முடிவை அமெரிக்கா கடுமையாக எதிர்ப்பதாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் தெரிவித்தார்.

பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தைப் பலவீனப்படுத்தும் இஸ்ரேலின் முடிவு, எதிர்மாறான விளைவுகளையே ஏற்படுத்தும் என்று பிரெஞ்சு அதிபர் சிராக் கூறியுள்ளார்.

மேற்குக் கரையிலும் காஸாவிலும் உள்ள பலஸ்தீனப் பிரதேசங்களில் யூதக் குடியேற்றங்களை அமைக்கும் விடயத்தில் தளர்வான போக்கை இஸ்ரேல் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஜேர்மன் பிரதமர் ச்ரோடர் வலியுறுத்தியுள்ளார். (ஒ)

# பின்லேடன் தாக்குதல் நடத்தினால் தலிபான்கள் மீது நடவடிக்கை

## அமெரிக்கத் தூதுவர் எச்சரிக்கை

வாஷிங்ரன்,ஜூலை8

அமெரிக்காவின் நலன்களுக்கு எதிராக சர்வதேச இஸ்லாமியத் தீவிரவாதி ஒசமா பின்லேடன் கேடு விளைவித்தால், அவருக்கு ஆதரவளிப்பதாகக் கூறப்படும் ஆப்கானிஸ்தானின் ஆளும் தலிபான்களுக்கு எதிராக பதில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இந்த எச்சரிக்கையை பாகிஸ்தானுக்கான அமெரிக்கத் தூதர் வில்லியம் மெனம் சமீபத்தில் இஸ்லாமாபாத்தில் தலிபான் பிரதிநிதியைச் சந்தித்தபோது தெரிவித்தார்.

பின்லேடனுக்குத் தலிபான், புகலிடம் அளித்து வருவதாகவும் -

அவர் மூலம் அமெரிக்க நிலைகள் மீது எந்தவிதத் தாக்குதல் நடத்தப்பட்டாலும் அதற்கு தலிபான்களே பொறுப்பேற்க வேண்டும் என்றும் -

அப்போது மெனம் மேலும் தெரிவித்துள்ளார்.

பின்லேடனை விசாரணைகளுக்காக ஒப்படைக்கவோ அல்லது அவரைக் கட்டுக்குள் வைத்திருக்கவோ தலிபான்கள் மீது நெருக்குதலைத் தீவிரப்படுத்தும் அமெரிக்க அரசின் முயற்சிகளில் இந்த எச்சரிக்கையும் ஒன்று எனக் கருதப்படுகிறது. (ஒ)

# காதலி கமீலாவை மணம் முடிக்க இளவரசர் சார்ள்ஸ் முடிவு!

## பத்திரிகைப் பேட்டியில் சூசகத் தகவல்

லண்டன்,ஜூலை8




பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ், தனது நீண்ட நாள் காதலியான கமீலா பாக்கரை திருமணம் செய்யக் கூடும் என்று முதற்றடவையாகக் கூறியுள்ளார்.

பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் தனது மறுமணம் குறித்து சூசகமாகத் தெரிவித்தார்.

எவ்வளவு பணம், சொத்து இருந்தாலும், சிலர் தனிமையில், சந்தோஷமின்றி வாழ நேரிடுவதாக, தனது நிலைபற்றி சார்ள்ஸ் குறிப்பிட்டார்.

வயதாகிக் கொண்டே செல்வதால் திருமணத்தை முக்கியமானதாகக் கருதுவதாக அவர் தெரிவித்தார்.



இளவரசி டயனாவின் மறைவுக்குப் பின்னர் காதலி கமீலாவுடன் சார்ள்ஸ் ஒன்றாக பல விழாக்களுக்கு சமுகமளித்த போதே, அவர்கள் விரைவில் திருமணம் செய்ய இருப்பதாக செய்திகள் பரவின.

இதற்கிடையில் பாக்கர் என்பவரின் மனைவியான கமீலாவை காதலித்த போதும், அரச குடும்பத்தின் வற்புறுத்தலால் டயானாவைத் திருமணம் முடித்து, அவரது நிம்மதியையும் குலைத்து டயானாவின் அவலமான இறப்புக்குக் காரணமாக இருந்தவர் சார்ள்ஸ் என்று பிரிட்டிஷ் இளைய தலைமுறையினிடம் உள்ள மனக் கசப்பு, கமீலாவை மணப்பதால் மேலும் அதிகரிக்கும் என்று கருதப்படுகிறது.

### தொடரும் இனக் கலவரங்களைக் கட்டுப்படுத்த

# சிறுபான்மை இனத்தவர் குறித்து பிரிட்டனில் விரிவான விசாரணை

லண்டன்,ஜூலை8

பிரிட்டனில் குடியுரிமை பெற்று வாழும் சிறுபான்மை இனங்கள் குறித்து நாடுதழுவிய அளவில் விசாரணை ஆய்வு ஒன்றை நடத்தப் பிரதமர் ரொனி பிளேயர் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் வெள்ளை இனத்தவர்களுடன் ஒப்பிடும் போது தொழில் வாய்ப்பு, கல்வி, சுகாதாரம் ஆகியவற்றில் சிறுபான்மை இனத்தவர்கள் வகிக்கும் நிலைகள் குறித்து இந்த ஆய்வில் விரிவாக ஆராயப்படவுள்ளது.

ப்ரடபோர்ட், ஓல்ஹாம், லீட், மொண்டி ஆகிய பகுதிகளில் கடந்த மூன்று மாதங்களில் பல தடவைகள் பிரிட்டனில் வாழும் ஆசிய இனங்களைச் சேர்ந்தவர்களுக்கும் வெள்ளையர்களுக்கும் இடையே கலவரங்கள் நிகழ்ந்தன. இவற்றை நிரந்தரமாகக் கட்டுப்படுத்தவே இந்த ஆய்வு நடத்தப்படுகின்றது.

இரு தரப்பினரிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகள் காரணமாக உருவாகும் காழ்ப்புணர்ச்சிகளே கலவரங்கள் உருவாகக் காரணம் எனக் கருதப்படுவதால், இந்த ஆய்வின் பெறுபேறுகள் இருதரப்பினரிடையேயும் சுமுக நிலையை உருவாக்க உதவும் என பிரிட்டிஷ் அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ-4)

# துப்பாக்கி குறித்த உலக ஆய்வு

ஜெனிவா,ஜூலை8

உலகம் முழுவதிலும் சட்டபூர்வமான முறையில் 55 கோடி துப்பாக்கிகள் இருப்பதாக ஜெனிவாவில் இயங்கும் பொதுச் சேவை மன்றம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

இவற்றில் 30 கோடி 50 லட்சம் துப்பாக்கிகள் தனிப்பட்டவர்களிடம் உள்ளன. அரசபடைகளிடம் 22 கோடி 60 லட்சம் துப்பாக்கிகள் உள்ளன.

வருடந்தோறும் உலகில் 600 கோடி டொலர்கள் பெறுமதியான ஆயுத வர்த்தகம் நடைபெறுகின்றது சட்டவிரோத துப்பாக்கி வர்த்தகத்தின் பெறுமதி சுமார் 100 கோடி டொலர்களாகும். (ஒ-4)

## இந்தோனேசிய அதிபருக்கு நாடாளுமன்றம் எச்சரிக்கை!

ஜகார்த்தா,ஜூலை8

இந்தோனேசியாவில் பொலீஸ்மா அதிபர் பிடான் டோராவை பதவி நீக்கம் செய்ய அதிபர் அப்துல் ரஹ்மான் வாஹிட் மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு எதிராக இந்தோனேசிய நாடாளுமன்றம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதிபர் வாஹிட் மீதான ஊழல் முறைப்பாடுகள் தொடர்பான குற்றப் பிரேரணை விசாரணைகள் இடம் பெற உள்ள சமயத்தில் பொலீஸ்மா அதிபரை பதவி நீக்குவது தவறான நடவடிக்கையாகும் என்றும் -

இது ஜனாதிபதி அப்துல் ரஹ்மான் வாஹிட் பற்றிய பதிவுகளில் ஒரு கரும்புள்ளியை ஏற்படுத்தும் என்றும் -

நாடாளுமன்றம் கூறியுள்ளது.

ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு ஆளான தான் தொடர்ந்தும் இந்தோனேசிய ஜனாதிபதியாகப் பதவி வகிக்க, ஜெனரல் பிடான் டோரோ அச்சுறுத்தலாக இருப்பதாகக் கருதுவதாலேயே, டோரோவைப் பதவி நீக்க அதிபர் வாஹிட் முயற்சிப்பதாகக் கூறப்படுகிறது.

அதிபர் வாஹிட் மீதான குற்றப் பிரேரணை விசாரணைகள் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி இடம்பெற விருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## ஆசாத் காஷ்மீரில் பிராந்தியக் கட்சி வெற்றி

இஸ்லாமாபாத்,ஜூலை8

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள ஆசாத் காஷ்மீர் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சட்டசபைத் தேர்தலில் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சியைத் தோற்கடித்து பிராந்தியக் கட்சியான அனைத்துக் காஷ்மீர் முஸ்லீம் மாநாட்டுக் கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

இப்பகுதியில் நீண்டகாலமாக தேசியக் கட்சிகளே அரசமைத்து வந்தன. இந்தத் தடவை பிராந்தியக் கட்சி வெற்றி பெற்றதால் அமைதி முயற்சிகளில் சாதகமான நிலை தோன்றியுள்ளது. (ஒ)



உலகில் முதன்முதலாக ஒருவருக்கு சுயமாக இயங்கக் கூடிய செயற்கை இதயம் கடந்த திங்கட்கிழமை அமெரிக்காவில் மருத்துவ நிபுணர்களால் பொருத்தப்பட்டது. அந்தச் சத்திரசிகிச்சையின் போது செயற்கை இதயம் மார்புக் கூட்டுக்குள் வைக்கப்படும் சாதனை நிமிடத்தில் எடுக்கப்பட்ட படமே இது.



பிரிட்டனிலிருந்து பிரான்ஸுக்கு கல்விச் சுற்றுலாவுக்காகச் சென்ற போது, ஏரியொன்றில் மூழ்கி மரணமான பன்மி சாகயா என்ற பதினொரு வயதுச் சிறுமியையும், அவளின் இறப்பால் சோகத்தில் மூழ்கிய உறவினர்களையும் படங்களில் காணலாம்.

பன்மியின் உயிரிழப்பு, பாடசாலைச் சுற்றுலாக்கள் தொடர்பான விதிமுறைகளை மீளாய்வு செய்யவேண்டும் என்று கோரிக்கைகள் எழும் அளவுக்கு பிரான்ஸில் பரபரப்பை ஏற்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# சென்னையில் நடிகரின் வீடு மீது பெற்றோல்குண்டு வீச்சு!

சென்னை,ஜூலை8

தமிழக நகைச்சுவை நடிகரும், அ.தி.மு.க. பிரமுகருமான எஸ்எஸ்சந்திரனின் வீட்டின் மீது கடந்த வியாழக்கிழமை மாலை பெற்றோல் குண்டு வீசப்பட்டது. சென்னையில் உள்ள எஸ்.எஸ்.சந்திரனின் வீட்டுக்கு இனம் தெரியாத சிலர் குண்டு வீசிவிட்டு தப்பியோடியுள்ளனர்.

முன்னர் தி.மு.கவுக்கும் பின்னர் ம.தி.மு.கவுக்கும் கடந்த சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.கவுக்கும் ஆதரவாகத் தேர்தல் பிரசாரம் செய்த எஸ்.எஸ்.சந்திரனின் வீட்டின் மீது குண்டு வீசப்பட்டதுக்கு அரசியல் முன்விரோதம் காரணமாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இதேசமயம், நடிகை விஜயசாந்தியின் சென்னையிலுள்ள வீட்டின் மீதும் சில நாள்களுக்கு முன்னர் இதே போன்றதொரு தாக்குதல் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# கவனக்குறைவாக சிகிச்சை மேற்கொண்ட சிங்கப்பூர் மருத்துவர்களுக்கு அபராதம்

## தமிழ்ப் பெண் தொடர்ந்த வழக்கில் தீர்ப்பு

சிங்கப்பூர் சிற்றி,ஜூலை8

தனக்கு கதிரியக்கச் சிகிச்சை அளித்த சிங்கப்பூர் மருத்துவர்கள் இருவர் கவனக் குறைவாக நடந்து கொண்டதால் தனது நினைவாற்றலும் பேச்சுத்திறனும் பாதிக்கப்பட்டதாகத் தெரிவித்து சிங்கப்பூர் தமிழ்ப் பெண் ஒருவர் தாக்கல் செய்த வழக்கில் அவருக்கு 25 லட்சம் சிங்கப்பூர் டொலர்களை நஷ்டஈடாகக் கொடுக்குமாறு சிங்கப்பூர் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

'நியூரோஜிக்கல் சேர்ஜரி' மருத்துவமனை உரிமையாளரான நரம்பியல் நிபுணர் ஹைப் ஒஹுப் மற்றும் கதிரியக்க நிபுணர் ஹோடாங் ஹொங்கே ஆகியோருக்கு எதிராகவே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. குணவதி முனியாண்டி (வயது 41) என்ற தமிழ்ப் பெண்ணே வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதி குறிப்பிட்ட பெண்ணின் வருங்காலப் பொருளீட்டும் திறனைப் பாதித்ததற்காக 16 லட்சம் சிங்கப்பூர் டொலர்களையும் கவனக் குறைவாக நடந்து கொண்டதற்காக 9 லட்சம் சிங்கப்பூர் டொலர்களையும் நஷ்டஈடாகச் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

1997ஆம் ஆண்டு அளிக்கப்பட்ட கதிரியக்க சிகிச்சைக்குப் பிறகு தனது நினைவாற்றலும் பேச்சுத் திறனும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டதாக குணவதி தனது மனுவில் குற்றஞ்சாட்டி இருந்தார்.

உயர் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து இரு டாக்டர்களும் மேன்முறையீடு செய்ய உள்ளனர். (ம)

### மேம்பால ஊழலை விசாரிக்கும்

# சென்னை நீதிபதிக்கு பாதுகாப்புத் தர மத்திய அரசிடம் கோரிக்கை மனு

சென்னை நகரில் மேம்பாலங்கள் கட்டியதில் ஊழல் இடம்பெற்றதாகக் கூறப்படும் வழக்குகளை விசாரித்து வரும் சென்னை முதன்மை அமர்வு நீதிபதி அசோக்குமாரின் மகன் தமிழக ஆளுநருக்கு விடுத்துள்ள மனுவில், தனது தந்தைக்கும் குடும்பத்தினருக்கும், மத்திய அரசு பாதுகாப்புத் தர வேண்டும் என்று கேட்டுள்ளார்.

தமது தந்தை முக்கிய பிரமுகர்கள் தொடர்பான வழக்குகளைக் கையாள்வதால், அவருடைய உயிருக்கு ஆபத்திருப்பதாகவும் -

தொலைபேசி மிரட்டல்கள் வந்து கொண்டிருப்பதாகவும் -

அடையாளம் தெரியாத நபர்களால், தனது தந்தை பின்தொடரப்படுவதாகவும் -

எனவே மத்திய அரசுப் பாதுகாப்பு அவசியம் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

## போதைப்பொருள் கடத்தலின் கேந்திர நகரம்

இந்தியத் தலைநகர் புதுடில்லி போதைப் பொருள் கடத்தலின் முக்கிய கேந்திரமாக விளங்குவதாக ஐ.நாவின் சர்வதேசப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து புதுடில்லிக்கு கொண்டுவரப்படும் 'ஹெரோயின்' என்ற போதைப் பொருள், அங்கிருந்து அமெரிக்கா, பிரிட்டன், இலங்கை உட்பட பல நாடுகளுக்கும் கடத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவின் வடக்கு மற்றும் வடகிழக்கு மாநிலங்களின் எல்லைப்புறங்களில் நிலவும் பாதுகாப்புக் குறைபாடுகள், புவியியல் சாதகங்கள் ஆகியவையே போதைப் பொருள் கடத்தலுக்கு உதவுவதாக கூறப்படுகின்றது. (ஒ)

# காங்கேசன் சிமெந்து ஊழியர்கள்
# நஷ்டஈட்டுடன் ஓய்வுபெற வசதி

யாழ்ப்பாணம், ஜூலை 8

ஸ்ரீலங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனத்தில் கிடப்பு நிலையில் உள்ள சகல ஊழியர்களும் (Employees on Lay - by Basis) சுயவிருப்பின் பேரில் நஷ்டஈட்டுடன் ஓய்வு பெறுவதற்கான திட்டம் ஒன்றைக் கூட்டுத்தாபனம் அறிவித்திருக்கின்றது.

இது தொடர்பான சுற்றறிக்கை கூட்டுத்தாபனத் தலைவர் ஏ. ரி. கே. சந்திரதாஸாவினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி 'ஓய்வு பெறும் ஊழியர்கள் 1997 ஜனவரி 15 ஆம் திகதி 2/97 சுற்று நிருபத்துக்கமைவான சம்பளபடியில் கணிக்கப்பட்டு அவர்களுக்குரிய நஷ்டஈடு வழங்கப்படவிருக்கின்றது. நஷ்டஈடு தீர்மானிக்கப்படுவதற்கு சேவைக்காலம் பின்வரும் அடிப்படையில் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது:

5 வருடத்துக்குக் குறைந்த சேவை — 10 மாத வேதனம்; 5 முதல் 10 வருட சேவை — 25 மாத வேதனம்; 10 முதல் 15 வருட சேவை — 35 மாத வேதனம்; 15 முதல் 20 வருட சேவை — 45மாத வேதனம்; 20வருடத்துக்கு கூடிய சேவை — 50 மாத வேதனம்.

எனினும் நிறைவேற்று அதிகாரிகள் தரத்துக்கு (Executive Grades) மூன்றரை லட்சம் ரூபாவும், ஏனைய தரங்களுக்கு மூன்று லட்சம் ரூபாவும் நஷ்ட ஈட்டுக்கான உச்ச எல்லையாக இருக்கும்.

இது தவிர, இத்திட்டத்தின் கீழ் ஓய்வுபெறுவோருக்கு வழமையான ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவை தொடர்பான கொடுப்பனவுகளும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(உ)

## யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு விஜயம்

யாழ்ப்பாணம் வந்துள்ள அமலமரித் தியாகிகள் சபையின் உலகத் தலைவர் வில் ஹெய்ம் ஸ்ரெக்ளிங் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இன்று காலை 9.30மணிக்கு கொழும்புத்துறையில் உள்ள அமலமரித் தியாகிகள் சபையின் டி மசனற் குருமட புதிய கட்டடத்தைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கவுள்ள இவர் நாளை காலையில் மீண்டும் கொழும்பு செல்லவுள்ளார்.

(ம–6)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 8

சங்கானை தெற்கு ஓடக்கரை வீதி விஷாலாஷி சமேத ஸ்ரீ காசி விஸ்வநாத சிவன் கோயில் பிரமோற்சவம் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

19 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ரதோற்சவமும், மறு நாள் வெள்ளிக்கிழமை காலை தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

(ஓ)

★ ★ ★

குப்பிளான் சொக்க வளவு அருள்மிகு சோதி விநாயகப் பெருமான் ஆலய மணவாளக் கோல விழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

(ம-4)

★ ★ ★

நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் இன்று காலை 7-15மணிக்கு முதல்நன்மைத் திருப்பலி அருட்தந்தை றொசான் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

பிற்பகல் 5--30 மணிக்கு பஜனை வழிபாடும் நடைபெறவுள்ளதாக ஆலய பங்குத்தந்தை தெரிவித்தார்.

நாளை திங்கட்கிழமை பிற்பகல் 5-30 மணிக்கு அருட்தந்தை அன்பு தலைமையில் பாலர் சபையினரின் ஏற்பாட்டில் 'ஒன்றிணைந்து செபிக்க' என்ற கருப்பொருளில் வழிபாடு நடைபெறவுள்ளது.

(ம-6)

★ ★ ★

சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய அலங்கார உற்சவ நிறைவு நாள் மணவாளக் கோலத்தை நினைவு கூரும் வகையில் இன்று ஞாயிற்றுக்கிழமை அந்த ஆலயத்தில் பொங்கல் வைபவம் இடம் பெறுகின்றது.

(ம--72)

## நீதிமன்ற உத்தரவை மீறிய நபருக்கு கடும் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 8

வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலய வழக்கில் நீதிமன்ற உத்தரவினை உதாசீனம்செய்ததாதகக் கூறப்படும் ஒருவரை நீதிமன்றுக்கு அழைத்த நீதிவான் அவரைக் கடுமையாக எச்சரித்தார்.

இந்த ஆலய வழக்கு நீதிமன்றில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது நீதிமன்றுக்குத் தெரியாமல் மடம் மற்றும் சமையற் கூடத்துக்கான கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

ஆலயத்தில் கட்டடவேலைகள் எதையும் நீதிமன்றுக்குத் தெரியாமல் செய்யக்கூடாது என்று நீதிமன்றம் முன்னரே உத்தரவிட்டிருந்தது. அந்த உத்தரவை உதாசீனம்செய்து இக்கட்டட வேலைகளை செய்ததாகக் கூறப்படும் கே. சாமி என்பவரையே நீதிமன்ற அமர்வு முடியும் முன்னர் நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு நீதிவான் இ. த. விக்னராஜா பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்தார்.

பொலிஸாரால் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட சம்பந்தப்பட்ட நபரை எச்சரிக்கை செய்த நீதிவான் ஆலய வழக்கு என்ற காரணத்தினால் அவருக்குக் கருணை காட்டி வீடு செல்ல அனுமதித்தார்.

(உ-5)

## இயங்குகிறது

குருநகர் அரசினர் வைத்தியசாலையில் கடந்த 4 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் தாய் சேய் நல சிகிச்சை மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இங்கு இச்சிகிச்சை வழங்குவது இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இனிமேல் ஒவ்வொரு மாதமும் முதலாவது மற்றும் மூன்றாவது புதன்கிழமைகளில் தாய்மாருக்கான சிகிச்சைகள் இடம் பெறும். இரண்டாவது, நான்காவது புதன்கிழமைகளில் குழந்தைகளுக்கான தடுப்பூசி போடுதல், நிறைகுறைந்த பிள்ளைகளுக்கு திரிபோசா வழங்குவது போன்ற நடவடிக்கைகள் இடம்பெறும் என குருநகர் அரசினர் வைத்திய சாலைப் பொறுப்பதிகாரி வைத்தியர் ஆ. திருநாவுக்கரசு தெரிவித்தார்.

(ம-51)

## கோரிக்கை

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் கீழ் இயங்கிவரும் கல்வி அலுவலகங்களில் சேவையாற்றிவரும் இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த அலுவலர்கள் இவ்வருடத்தில் சேவையில் இருந்து இளைப்பாறினால் அதுதொடர்பான விவரங்களைத்தமக்குஅனுப்பி வைக்குமாறு சம்பந்தப்பட்ட கல்வி வலயங்களுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்களை வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் க. பரமேஸ்வரன் கேட்டுள்ளார்.

(ம-51)

### தொழில்நுட்பக் கல்லூரி ஊழியர்களுக்கு
## நிரந்தர நியமனம் வழங்கும் நேர்முகப்பரீட்சை இங்குநடக்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் அமைய ஊழியர்களாகக் கடமையாற்றுவோருக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை முதற்தடவையாக இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான அனுமதியை தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஜி. பிரேமசிறி வழங்கியுள்ளதாகத் தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் வடக்கு — கிழக்கு மாகாண பிரதிப் பிராந்தியப் பணிப்பாளர் என். யோகராஜன் தெரிவித்துள்ளார்.

நூலக உதவியாளர், ஆய்வு கூட உதவியாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, தொழிலாளி போன்ற பதவிகளில் உள்ளவர்களுக்கே இந்த நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

நீண்டகாலமாக நிரந்தர நியமனமின்றி இருந்த மேற்படி ஊழியர்களின் பிரச்சினைகள் பற்றி பணிப்பாளர் நாயகத்துக்கு முறையிட்டதை அடுத்து இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இங்கு நடைபெறவுள்ளது. நாட்டின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த ஊழியர்களுக்கான இந்த நேர்முகப் பரீட்சை கொழும்பில் மட்டுமே நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைகளை அடுத்த வாரம் நடத்துவதற்கென தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தினால் வடக்கு — கிழக்கு மாகாண பிரதிப் பிராந்திய பணிப்பாளர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

(ஐ–10)

## நெல்லியடிப் பகுதியில் தேடுதல்

யாழ்ப்பாணம், ஜூலை 8

நெல்லியடி சாமியன் அரசடிப் பகுதி நேற்றுக் காலை படையினரால் சுற்றி வளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது.

அதிகாலை முதல் இப்பகுதியைச் சுற்றிவளைத்த படையினர் வீடுகளுக்குச் சென்று பொதுமக்களின் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொண்டபின் அனைவரையும் அப்பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றுக்கு அழைத்தனர். அங்கு வைத்து அனைவரும் முகமூடி அணிந்தவர்கள் முன் நிறுத்தப்பட்டு சோதனை செய்யப்பட்டபின் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த வாரம் சனிக்கிழமையும் இப்பகுதியில் சுற்றிவளைப்புத் தேடுதல் இடம் பெற்றது.

(ஐ-15)

## உதைபந்தாட்டம்

வலி. வடக்கு, ஜூலை 8

நல்லூர் பிரதேச சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கும் சனசமூக நிலையங்களிடையே பிரதேச சபையினால் நடத்தப்பட்டு வரும்—9 வீரர்கள் பங்குபற்றும்]— உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3--15 மணி முதல் யாழ். கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில்கலந்துகொள்ளும் அணிகள் விவரம் வருமாறு:–

★ நல்லூர் வடக்கு சனசமூக நிலையம் எதிர் கோண்டாவில் அமரகவி சனசமூக நிலையம்.

★ திருநெல்வேலி முடமாவடி ஞானவைரவர் சனசமூக நிலையம் எதிர் கொக்குவில் சிவகுரு சனசமூக நிலையம்.

(உ-86)

## பாலர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 8

ஞானக்குழந்தை இல்ல பாலர் பாடசாலை ஒன்பதாவது ஆண்டு பாலர் விளையாட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறையைச் சேர்ந்த திருமதி ஜே. இராசநாயகம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ஐ)

★ ★ ★

பாலர் கல்விக் கழக நிர்வாகத்தின் கீழ் திருநெல்வேலியில் இயங்கும் ஞானக் குழந்தை இல்ல பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

மகப்பேற்று மருந்துவத் துறையைச் சேர்ந்த டாக்டர் பவானி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(ஐ)

## மோ. சைக்கிள் விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

அதிவேகமாக வந்த மோட்டார்சைக்கிள் ஒன்று வேகக் கட்டுப் பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகி அருகில் இருந்த மரமொன்றுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்தார்.

ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோயில் வீதிப்பகுதியில் நேற்று இடம்பெற்ற இந்த விபத்தில் வரணியைச் சேர்ந்த இ. சுகரதன் (வயது 34) என்பவரே படுகாயமடைந்தவராவார். அவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ம-15)


## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வேலணை

### லொறி உடற்கோப்பு அமைப்பதற்கான கூறுவிலை கோரல்

ஓர் அசோக் லேலெலன்ட் பாரவூர்தி உடற்கோப்பு அமைப்பதற்கு பின்வரும் விவரங்களின்படி கூறுவிலை கோரப்படுகின்றது. நேர்க்கூலி முறையில் நிறைவேற்றப்படவுள்ள உடற்கோப்பு அமைப்பதற்கான பொருள்கள் யாவும் சங்கத்தால் விநியோகிக்கப்படும்.

கூறுவிலைகள் எதிர்வரும் 11 - 7 - 2001 புதன்கிழமை பி. ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக ''பாரவூர்தி உடற்கோப்பு அமைப்பு'' என கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் எழுதி தலைவர், ''வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், வேலணை'' என முகவரியிடப்பட்டு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்புதல் வேண்டும்.

கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா 100/-(மீளளிக்கப்படாதது) செலுத்தி சங்கத்தால் வழங்கப்படுகின்ற விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் 11—07—2001 பி.ப. 4.00 மணிக்குத் திறக்கப்படும். விண்ணப்பதாரர்கள் நேரில் சமுகமளிக்கலாம்.

தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக ரூபா 5000/- செலுத்துதல் வேண்டும். கூறுவிலைகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ சங்கத்திற்கு உரிமையுண்டு.

பாரவூர்தியின் அடிச்சட்டத்தைப் பார்வையிட விரும்பின் சங்க வேலை நேரத்தில் தலைமைக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

மேலும் விவரங்கள் தேவைப்படின், சங்க வேலை நேரத்தில் தொடர்புகொண்டு அறிந்துகொள்ளலாம்.

**1) கூலிக்கான கூறு விலை**

(அ) உடற்கோப்பு அமைத்தல்
(ஆ) உடற் கோப்புக்கான ரிங்கர் வேலை
(இ) மின் இணைப்புப் பொருத்துதல்
(ஈ) தேவையான இரும்பு வேலை
(உ) பெயின்ற் வேலை
(ஊ) பெயர் எழுதுதல்

**2) மரங்கள் விநியோகம்**

(அ) தேக்கமரம் 04 அடி சுற்றுக்கு மேல் 21 அடி நீளம்
(ஆ) வாகைமரம் 05 அடி சுற்றுக்கு மேல் 08 அடி நீளம்
(இ) வாகைமரம் 05 அடி சுற்றுக்கு மேல் 16 அடி நீளம்
(ஈ) பலாமரம் 04 அடி சுற்றுக்கு மேல் 12 அடி நீளம்

தலைவர்,
வேலணை ப. நோ. கூ. சங்கம்"

(89865)

உதயன்

## சந்திரிகாவின் 25 நாள் கணக்கு

தென்னிலங்கை அரசியல் சூதாட்டத்தின் உச்சக் கட்டம் இப்போது அரங்கேறிக்கொண்டிருக்கின்றது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்துள்ள தனது அரசை, தொடர்ந்து ஆட்சிக் கட்டில் தக்கவைப்பதற்காக சகல 'தகிடுதத்தம்' வேலைகளையும் புரிகின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

அடுத்த 25 நாள்களுக்கு இந்த அரசைப் பதவியில் தக்க வைத்திருக்காவிட்டால் தமது அரசியல் எதிர்காலம் நெருக்கடிக்குள்ளாகும் என்பதைப் புரிந்துகொண்டே, தமது திருவிளையாடல்களை நடத்தத் தொடங்கியிருக்கின்றார் அவர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நாடாளுமன்றத்தை அது தெரிவு செய்யப்பட்ட நாளிலிருந்து ஒரு வருட காலத்துக்குள் கலைத்து, புதிய தேர்தலுக்கு ஜனாதிபதி உத்தரவிடமுடியாதென அரசமைபபுக் கூறுகின்றது.

தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தது தொடர்பான தேர்தல்கள் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 10ஆம் திகதி நடைபெற்றன. எனவே எதிர்வரும் ஒக்ரோபர் 10ஆம் திகதிவரை இந்த நாடாளுமன்றத்தை ஜனாதிபதியால் கலைக்க முடியாது.

அடுத்த நாடாளுமன்றக் கூட்டம் எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெற இருக்கின்றது. அன்றிலிருந்து 25 நாள்களுக்கு - அதாவது ஓகஸ்ட் 10ஆம் திகதிவரை - இந்த நாடாளுமன்றத்தில் தமது தற்போதைய அரசைத் தாக்குப்பிடிக்க வைத்தால் போதும் என ஜனாதிபதி குமாரதுங்க கருதுகின்றார்.

ஒரு நாடாளுமன்ற கூட்டத் தொடரை இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைக்கும் அதிகாரம் அரசமைப்பின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. ஓகஸ்ட் 10 வரை இந்த அரசைத் தக்கவைத்தால் அந்தத் திகதியிலிருந்து அடுத்த இரண்டு மாதங்களுக்குத் தற்போதைய நாடாளுமன்றத்தின் கூட்டத்தைத் தமக்கிருக்கும் அதிகாரத்தை வைத்தே ஒத்திபோட்டு, ஒக்ரோபர் 10 வரை காலத்தைக் கடத்தி, அதனையடுத்து இந்த நாடாளுமன்றத்தையே கலைத்துவிட முடியும் என்பது ஜனாதிபதி சந்திரிகாவின் கணக்கு.

இந்தக் கணக்குகளையெல்லாம் மீறி - இந்த 24 நாள்களுக்குள - நாடாளுமன்றத்தில் தங்கள் கரப்பில் இருக்கும் பெரும்பான்மை மூலம், தற்போதைய அரசைக் கவிழ்த்து, எதிரணி ஆட்சிக் கட்டில் ஏறிவிட்டாலோ ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு சங்கடம்தான். அடுத்த ஒரு வருடத்துக்கு எதிர்க்கட்சிகளின் பிடியிலிருக்கும் அரசை - நாடாளுமன்றை - கலைக்கும் வாய்ப்பு ஜனாதிபதியின் கையிலிருந்து கோட்டைபோனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஜனாதிபதிக்கு எதிராக ஒரு குற்றவிசாரணைப் பிரேரணை சபாநாயகரிடம் முறைப்படி சமர்ப்பிக்கப்பட்டால் அதன் மீதான தொடர் நடவடிக்கைகள் முற்றுப்பெறும் வரை நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்க முடியாது என்று அரசமைப்பின் 70 ஆவது ஷரத்துக் கூறுகின்றது.

ஆட்சிப்பீடம் ஏறக் கூடிய மாற்றுக் கட்சிகள் இந்த ஷரத்தை வைத்துக்கொண்டே, தமது ஆட்சிக்காலத்தை அடுத்த ஓரிரு வருடங்களுக்கு உறுதிப்படுத்தி விட முயலலாம்.

அப்படி நடந்தால் -

தலையிடி தரும் தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, ஆறுதலாகப் புதிய தேர்தல் முடிந்து, புதிய அரசு தேர்ந்தெடுக்கப்படும் வரை சிக்கலின்றிக் காலத்தை ஓட்டலாம் என்ற சந்திரிகாவின் ஆசையில் மண் விழுந்துவிடும்.

# டாக்டர்களுக்கு வழங்கப்பட்ட உணவில் நஞ்சு கலப்பு?

## கொழும்பு ஹோட்டேல் 'சீல்' வைப்பு

கொழும்பு,ஜூலை8

கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபததுக்கு உணவு வகைகளை வழங்கிவந்த உணவு விடுதி ஒன்று 'சீல்' வைத்து மூடப்பட்டது.

நேற்று முன்தினம் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற மருத்துவர்களின் நிகழ்ச்சி ஒன்றின்போது அவர்களுக்கு வழங்கப்பட்ட உணவில் நச்சுத்தன்மையுள்ள பொருள்கள் கலந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே அந்த உணவு விடுதியைச் 'சீல்' வைத்து மூடுமாறு சுகாதாரத் திணைக்களத்தின் பிரதம மருத்துவ அதிகாரி டாக்டர் பிரதீப் காரியவாசம் உத்தரவிட்டிருக்கிறார்.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் அரச மருத்துவர் சங்கம் நடத்திய விருந்தின்போதே நஞ்சுத்தன்மையான உணவுகள் மருத்துவர்களுக்குப் பரிமாறப்பட்டன. இதனால் பாதிக்கப்பட்ட மருத்துவர்களில் 10 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். இதனால் கொழும்பின் சில பிரபல மருத்துவமனைகளில் சத்திரசிகிச்சைகள் பிற்போடப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பிரஸ்தாப உணவு விடுதியின் சமையலறைப் பகுதியும், குளிரூட்டப்பட்ட அறைகளும் சுகாதாரக் கேடான நிலையில் இருந்ததாக சுகாதார மருத்துவ அதிகாரி டாக்டர் நிஹால் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்துக்காக அந்த உணவு விடுதியின் அதிகாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாக அரச மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)



புத்தூர் வே.இளையகுட்டி அவர்களின் 'ஆண்பாவம்' என்னும் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் நடைபெற்றது. கோப்பாய் சிவம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா வெளியீட்டுரையும், கவிஞர் சோ.பத்மநாதன் அவர்கள் ஆய்வுரையையும் வழங்கினர். நூலின் முதற்பிரதியை நூலாசிரியரிடமிருந்து யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இரட்ணம் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

# சிறந்த தமிழ் நூல்களுக்கு விருது வழங்க ஏற்பாடு

## நூலாசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜூலை8

சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசில் வழங்குவதற்காக நூல்களின் ஆசிரியர்களிடம் இருந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

2000ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் டிசெம்பர் 31ஆம் திகதிவரை (இரு தினங்கள் உட்பட) வெளிவந்த நூல்களின் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நூல் ஆசிரியர் இலங்கையராக இருத்தல் வேண்டும்.

நூல்களை அனுப்பவிரும்பும் ஆசிரியர் இதற்கான விண்ணப்பத்தை நேரில் அல்லது சுயமுகவரியிட்ட தபாலுறை ஒன்றைச் 'செயலாளர், தமிழ் இலக்கியக் குழு, கலாசார அலுவல்கள் திணைக்களம், 8ஆவது மாடி, செத்சிரிபாய, பத்தரமுல்லை' என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் -

பரிசுத் தேர்வில் பங்குகொள்ள விரும்புவோர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் நூலின் ஐந்து பிரதிகளை அஞ்சல் மூலம் அனுப்பி வைக்குமாறும் அல்லது நேரடியாகக் கையளிக்குமாறும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜூலை மாதம் 6ஆம் திகதி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் கடைசித் திகதி என்றும் -

விண்ணப்பங்களுடன் நூல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் ஜூலை 30 எனவும் - கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

### நாளை

ஆனி 25
திங்கட்கிழமை
திதி: சதுர்த்தி
பின்னிரவு 3.43 வரை.
நட்சத்திரம் : அவிட்டம்
மாலை 5.49 வரை.
சங்கடஹர சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 11.58 - 1.28
ராகுகாலம் : 7.28 - 8.58
(பழைய நேரப்படி)

## கடலில் மீன்பிடிப் பயிற்சி

குருநகர்,ஜூலை8

யாழ்.பிராந்திய கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியில் மீன்பிடிப் பயிற்சி நெறியைக் கற்றுவரும் பயிற்சியாளர்களுக்கு நாவாந்துறைக் கடலில் வைத்து கடல்முன் பயிற்சி, கடலில் முதலுதவிப் பயிற்சி, மீன்பிடித் தொழில்நுட்ப செயல்முறைப் பயிற்சி ஆகியவை கடந்த ஜூன் மாதம் தொடக்கம் வழங்கப்பட்டு வருவதாக இக் கல்லூரி அதிபர் இ.செபஸ்ரியாம்பிள்ளை தெரிவித்தார்.

இப்பயிற்சியைக் கடலில் வைத்து வழங்குவதற்கு யாழ்.அரச அதிபர் மற்றும் பாதுகாப்புப் பிரிவினரது அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் -

மாறிவரும் மீன்பிடித் தொழில்நுட்ப முறைகளுக்கு ஏற்ப யாழ். பாடசாலைகளில் மீன்பிடிக் கற்கைநெறியைக் கற்றுவருபவர்களுக்கும் இப் பயிற்சியை விரிவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### உதயவாக்கு

நற்பெயரைப் பெறுவதற்கு வாழ்நாள் முழுவதும் தேவைப்படுகிறது. ஆனால் அதனை இழந்துவிடவோ ஒரே ஒரு கணம் போதுமானதாகும்.

## நாட்டு நடப்பு

ரியூட்டறி - X

ஐந்தாம் வகுப்பில் அரவிந்தன்
அழுது அழுது கும்பிட்டான்.
பத்தாம் வகுப்பிற்கு வந்தவுடன்
பாட்டி கடவுளைக் காட்டென்றான்.
முத்தம்மா பல சொல்லிடவே
மூடு வாயைக் கிழடு என்றான்.
நித்தம் ஜோதிகா படம் முன்பு
நேரில் நின்று வழிகின்றான்.

- விகடகவி -

# யாழ். மேலதிக நீதிபதியாக சறோஜினி இளங்கோவன்

பிரபல சட்டத்தரணி திருமதி சறோஜினி இளங்கோவன் யாழ். மாவட்ட மேலதிக நீதிபதியாகவும், மேலதிக நீதிவானாகவும் கடந்த முதலாம் திகதி தொடக்கம் நீதிச் சேவை ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

நாளை திங்கட்கிழமை யாழ்.நீதிமன்றத்தில் தனது கடமையைப் பொறுப்பேற்கும் இவர் மேலதிக ஆரம்ப நீதிமன்ற நீதிபதியாகவும் மேலதிக குடும்ப நீதிபதியாகவும் கடமையாற்றவுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண்களின் நலன்களைக் கவனிக்கும்பொருட்டு மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் இலவச சட்ட ஆலோசனை வழங்கிவரும் இவரது சேவைகளை கௌரவித்து அண்மையில் கொழும்பிலுள்ள கனேடிய இல்லத்தில் வைத்துக் கனேடியத் தூதுவரினால் 'சக்தி' விருது இவருக்கு வழங்கப்பட்டது தெரிந்ததே.

அண்மையில் நேபாளத்தில் நடைபெற்ற பெண்களின் உரிமை தொடர்பான மாநாட்டிலும் கலந்துகொண்ட இவர் தீவக லயன்ஸ் கழகத்தின் உப தலைவராகவும், தீவக சென்.ஜோன் அம்புலன்ஸ் படையின் ஆலோசகராகவும், செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளை உறுப்பினராகவும், சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஆலோசகராகவும் கடமையாற்றி வருகிறார். (ஐ-5)

# 40 ஆயிரம் தேங்காய் நாற்றுகள் தென்பகுதியில் இருந்து தருவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை8

யாழ்.மாவட்டத்தில் அழிவுற்று வருகின்ற தென்னை வளத்துக்கு புத்துயிர் அளிக்கும் வகையில் அம்பேகல தென்னை ஆராய்ச்சி நிலையத்தின் பண்ணையிலிருந்து 40 ஆயிரம் நாற்றுத் தேங்காய்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களமும், வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையும் இணைந்து கப்பலில் எடுத்து வந்த இந்த நாற்றுத் தேங்காய்களில் இரு வகையான இனங்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

3 வருட உயரிய இனமான டி.ரி. இனத்தில் 15 ஆயிரம் நாற்றுத் தேங்காய்களும், 5 வருட உயரிய இனமான ரி.ரி. இனத்தில் 25 ஆயிரம் தேங்காய்களும் எடுத்துவரப்பட்டு அவை நாற்றுக்கள் உற்பத்தி மையத்தில் இடப்பட்டுள்ளன.

புத்தூர் கமநல கேந்திர நிலையத்தின் நாற்றுக்கள் உற்பத்தி மையத்தில் 18 ஆயிரம் தேங்காய்களும் -

உரும்பிராய் கமநல கேந்திர நிலையத்தின் மையத்தில் 12 ஆயிரம் தேங்காய்களும் -

நல்லூர் கமநல கேந்திர நிலையதின் மையத்தில் 8 ஆயிரம் தேங்காய்களும் -

புலோலி கமநல கேந்திர நிலையத்தின் மையத்தில் 2 ஆயிரம் தேங்காய்களும் இடப்பட்டுள்ளன.

இவற்றை டிசெம்பர் மாதத்தில் தேவையானவர்களுக்கு விநியோகிக்க முடியும் என்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் கே.சுந்தரேசன் தெரிவித்தார். தேவையானவர்கள் தமது பகுதி கமநல கேந்திர நிலையங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

2002ஆம் ஆண்டுக்கென ஒரு லட்சம் நாற்றுத் தேங்காய்களை இங்கு எடுத்துவருவதற்கான ஏற்பாடுகளும் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-10-9)

## ஆண்டுவிழா

சாவகச்சேரி பாரதி பாலர் கழகத்தின் 36ஆவது ஆண்டு நிறைவையொட்டிய விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பாலர் கல்விக் கழகச் சிறார்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.


கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!

விஷப்பாம்பை மிதித்தாலும் தப்பும் - தப்பாது மிதிவெடியை மிதித்த கால்!



# சின்னஞ்சிறு விளம்பரம்

### தோட்டக்காணி விற்பனைக்கு

சுமார் 50 பரப்புத் தோட்ட நிலம் நவக்கிரி, புத்தூர் வீதியில் நவக்கிரியல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- விளம்பர இல.1317, மே/பா, உதயன். (89681)

### மணமகள்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 32, கொழும்பில் பிரபல தனியார் நிறுவனத்தில் பணி புரியும், இலக்கணத்தில் செவ்வாய் உள்ள மணமகனுக்கும், U.K இல் வசிக்கும் 30 வயது தோஷங்களற்ற மணமகனுக்கும், 27 வயதுக்குட்பட்ட மணமகள்கள தேவை. தொடர்பு:- 078- 688126, கொழும்பு. (89440)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரசாங்க திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகம் பார்க்கும்,1970ஆம் ஆண்டில் பிறந்த செவ்வாய் தோஷமற்ற மணமகனுக்கு அழகான மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது) தொடர்பு:- விளம்பர இல.1319 மே/பா உதயன் (89840)

### வணிகக்கல்வி A/L

வணிகக் கல்விக்கான பகுதி II முழுப்பாடத்திட்டமும், பாகம் I, பாகம் II என இரு பகுதியாக வெளியிடப்பட்டுள்ளன. புத்தகசாலைகளில பெற்றுக்கொள்ளலாம். இ. இரட்ணம், சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைககழகம். (89768)

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள RX100 YAMAHA மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 36,சோமசுந்தரம் அவெனியூ, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். T.P. 2472,3078. (89812)

### CD விற்பனைக்கு

எம்மிடம் கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட ஆங்கிலப்பட CDக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: N. கஜன், புதிய செம்மணி வீதி, (வயல்வெளி கந்தசாமி கோயிலுக்கு அருகில்), கல்வியங்காடு. (89822)

### தவறிவிட்டது

இல.42/1, அத்தியடி, புதுவீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த ராஜரட்ணம் அனித்தா என்பவரது தே.அ.அ.(இல.788603029V) விசேட அ.அ(இல.0901004007) ஆகியன அத்தியடிப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்துதவவும். (89826)

செல்லப்பா தம்பிராஜா என்பவருடைய தே.அ.அ. (இல.271510403V), வி.அ.அ. (இல.09102612) என்பன இணுவிலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் T.வதனா, 120, கோயில் றோட், I.C.R.C, யாழ்ப்பாணம் என்னும முகவரியில் ஒப்படைத்துதவவும். (89835)

ஏலாளசிங்கம் ஜெயரூபன் என்பவருடைய விசேட அ.அட்டை (இல. 0902041960) பாடசாலை அ.அ. என்பன கோப்பாய் முதியோர் இல்லத்துக்கு முன்பாகத் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.42, லோட்டஸ் றோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (89840)

### வியாழ மாற்ற பலாபலன்கள்

எங்கும் விற்பனையாகின்றன ரூபா 10/=. கணிப்பு: சத்யா. அரசுத் தலைமை - அவிட்டம் முதலாம் பாதம் மகரராசிக்கு, 5இல் சனிதோஷம், 6இல் வியாழன் மறைவு (வியாழ சுகயீனம்) அரசை ஆட்டங்காணச் செய்யும். (89837)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் ஒரு kg - 140/-, சேவல், கல்பேட்ஸ் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்தல் இலவசம். 31,மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (89582)

BROILER இறைச்சிக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. விலை ரூ.145/= சுத்தம் செய்யப்பட்டது ரூ.220/= வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும். தொடர்பு:- ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P. 3529, 2867. (89810)

இறைச்சிக்கோழி (BROILERS), கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:-இல.15, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (89596)

இறைச்சிக் கோழி BROILERS, கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:-40, கோயில வீதி, யாழ்ப்பாணம். (89834)

Broiler, Cullbirds, Cockerels, Soup Chicken இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழிகள் உட்பட) தினமும் காலை 6.30 மணி முதல் மாலை 6.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். இன்று விசேட சேவை 19,முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (89836)

புறொயிலர், சேவல், கல்பேட்ஸ் மொத்தமாகவும், சில்லறையாகவும் வேண்டிய நிறைகளில் தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- இல.68, பழைய பூங்கா வீதி, (OLD PARK ROAD) யாழ்ப்பாணம். (89891)

புறொயிலர் இறைச்சிக்கோழி மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்கப்படும். சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். தொடர்பு:- சங்கீத், 40, விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு (கல்வியங்காட்டுச் சந்தைக்கு அருகாக). (89808)

இறைச்சிக் கோழி Broilers, கல்பேட் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 334, கே.கே.எஸ். வீதி, சிவன் கோயிலடி, யாழ்ப்பாணம். (குணம் கொத்து ரொட்டிக் கடைக்கு அடுத்த வீட்டில்) (89845)

### கார் விற்பனைக்கு

இல.6ஸ்ரீ.3787 சுப்பர் மிஸ் கில்மன்ஸ் கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:- அ.இரவீந்திரதாசன், 18/4(66), சீனியர் லேன், யாழ்ப்பாணம். (89816)

### படிவம்

க.பொ.த (சா.தர) பரீட்சைப் படிவமும் அதன் விவரமும் விற்பனையாகின்றன. விண்ணப்ப முடிவு திகதி 31.07.2001 நாயகபாலன், மானிப்பாய் (89844)

---

## கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

இடம்: கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபம்
நாள்: 08-07-2001 ஞாயிற்றுக்கிழமை (இன்று)
நேரம்: காலை 10.00மணி

அங்கத்தவர்களை தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

இ.செல்வநாதன்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்,
*கொ.இ.கல்லூரி*

(C/17325)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது இயக்குநர்
D.அன்டோ டினேஸ் (3rd Dan)
அவர்களின் அன்புச் சகோதரி

**திருமதி சாந்தினி திருஞானதீபன்**

அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம.

SHOTOKAN KARATE ACCADEMY
(I.V.M.A & U.T.K.F)
மாணவர்கள்.

*18, மாட்டீன் றோட், யாழ்ப்பாணம்.* (89838)

---

## மரண அறிவித்தல்

### கந்தையா இளையபிள்ளை

மருதங்கேணியைப் பிறப்பிடமாகவும், நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இளையபிள்ளை 06-07-2001 அன்று காலமானார். இவர் காலஞ் சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், தங்கம்மா, குணரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும், வேலுப்பிள்ளை கந்தையா, குணரத்தினம் யோகாம்பிகை ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜெயதாஸ்(லண்டன்), சக்திதாஸ்(லண்டன்), இதயசிவதாஸ்(ஆசிரியர் உருத்திரபுரம்), விஜிதா (லண்டன்), சுஜிதா(லண்டன்), கோமதி (லண்டன்), கீதா(ஆசிரியை அம்பன் அ.மி.த.க.பாடசாலை), கண்ணன் (ஜேர்மனி), கோபாலன்(லண்டன்), யசோதா (மாணவி வடஇந்து மகளிர் கல்லூரி), ரவிசங்கர்(மாணவன் ஹாட்லிக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 07-07-2001 சனிக்கிழமை நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை கடற்கரை இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:-
*வல்லிபுரப்பாரியாரியார் ஒழுங்கை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை.*

தகவல்:-
க. குணரத்தினம் (மகன்)

(C/17326)

---

## ஆலயத்தில் விக்கிரகம் பிரதிஷ்டை

சுழிபுரம்,ஜூலை8

பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் ஆலயத்தில் புதிதாகக் கட்டப்படும் எண்கோண அமைப்புக் கோயில் பூர்த்தியாகும் நிலமையில் உள்ளது.

புதிதாக பிரதிஷ்டை செய்யப்படவுள்ள கிருஷ்ணர் விக்கிரகம் இப்புதிய கட்டடத்தில் வைக்கப்படவுள்ளது.

ஆலய உள்பிரகார மேற்குப் பக்கத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. (ஐ-28)

## மஹோற்சவத்துக்கு ஏற்பாடு

கோப்பாய்,ஜூலை8

கோப்பாய் மத்தி முத்துமாரி அம்பாள் கோயிலில் இந்த ஆண்டு தொடக்கம் மஹோற்சவம் நடைபெற உள்ளது.

இதுவரை காலமும் அலங்கார உற்சவம் நடைபெற்று வந்த இந்த ஆலயத்தில், புதிதாக கொடித்தம்பம், அழகிய சித்திரத்தேர் மற்றும் தீர்த்தக்கேணி என்பன அமைக்கப்பட்டுள்ளன. (ஐ-72)

---

## இந்து வாலிபர் சங்கம்

சங்கரத்தை

75

1926 - 2001

*Anniversary*

## பவள விழா அழைப்பு

***காலம்:*** இன்று (08-07-2001) ஞாயிற்றுக்கிழமை

***இடம் :*** சங்கரத்தை திறந்தவெளியரங்கு

### இன்றைய நிகழ்வுகள்

இன்று (08-07-2001) ஞாயிற்றுக்கிழமை
மாலை 3.00 மணி

தலைவர் :- செல்வன் இ.குமரேஸ்
பிரதம விருந்தினர் :- திரு.ந.திரிலோகநாதன் (JPUM)
*(தலைவர், வலி.மேற்குப் பிரதேச சபை)*
சிறப்பு விருந்தினர் :- திரு.கா.சந்திரராசா
*(ஓய்வு பெற்ற பிரதேச செயலர்)*

**நிகழ்ச்சி நிரல்**

- சங்கக் கொடியேற்றல்
- மங்கள விளக்கேற்றல்
- இறை வணக்கம்
- மங்கள இசை
- வரவேற்பு நடனம் (வட்டு. மத்திய கல்லூரி மாணவிகள்)
- வரவேற்புரை :- செல்வன் தி.லிங்கதாஸ்
- ஆசியுரை:- சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள் *(பீடாதிபதி சர்வதேச இந்துமத குருபீடம்)*
- வாழ்த்துரை:- திரு.சி.சபாநாதன்
- தலைமையுரை :- செல்வன் இ.குமரேஸ்
- செயலாளர் அறிக்கை சமர்ப்பித்தல் :- செல்வன் வி.சுஜிதரன்
- கௌரவிப்பு நிகழ்வு:- கௌரவிக்கப்படுவோர்
  திரு.வி.சிவஞானபோதன் *(அதிபர், வட்டு.மத்திய கல்லூரி)*
  திரு.க.நடராசா *(ஓய்வுபெற்ற உபதபாலதிபர்)*
- பரிசில் வழங்கும் நிகழ்வு
- சிறப்பு விருந்தினர் உரை :-
- பிரதம விருந்தினர் உரை:-

**சிறப்பு நிகழ்ச்சிகள்**

❖ *மயில் நடனம்:* செல்வி த.சிறிகௌசிகா

**கவியரங்கம் நாளை நமதே..!**

தலைவர்:
தமிழன்பர் மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்
*(ஆசிரியர், ஸ்ரான்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம்)*

பங்கேற்போர்:
கிராமத்துக்குயில் ஓவியர் கு.றெஜீபன் — கவிஞர் எஸ்.ஐங்கரன்
அருண் மொழிச்செல்வன் த.ஜெதிதன் — செல்வி எஸ்.நந்தினி
கவிஞர் கு.புரந்தரன் — செல்வி ரி.தர்மினி

- சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்ச்சி
- இராமநாதன் சுயந்தினியின் மாணவிகள் (அம்பிகை கல்வி நிலையம்) வழங்கும் நடன நிகழ்ச்சி

**சங்க அங்கத்தவர்களின் நடிப்பில்**
**அரியாலையூர் சந்திரகுமாரின்** தயாரிப்பில் உருவான
**'கண்டறியாத கல்யாணம்'** (நகைச்சுவை நாடகம்)
**நகைச்சுவைக் கதம்பம்** மூளாயூர் நா.நாகசெல்வம்
ஈழநல்லூர் ராகம்ஸ் இசைக் குழுவினர் வழங்கும்
***ராகம்ஸின் இதய ராகங்கள்***

- நன்றியுரை :- செல்வன் ச.பரந்தாமன்
- கொடியிறக்கல்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

வி.சுஜிதரன் — *செயலாளர்*
வெ.மகிந்தன் — *தலைவர்*

**பவளவிழாச் சிறப்புற வாழ்த்துவோர்**

| | |
|---|---|
| **சுப்பஸோ வீடியோ**<br>149, கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம். | **ஓடியோ சென்ரர்**<br>No.:- 198/5, நாவலர் வீதி,<br>யாழ்ப்பாணம். |
| **சந்தியா பான்சி பலஸ்**<br>1) 02, GRAND BAZAAR JAFFNA.<br>2) பிரதான வீதி, பண்டத்தரிப்பு.<br>3) 531, பருத்தித்துறை வீதி நல்லூர். | **E.S.P & CO.**<br>இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்<br>50, 52,54 கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம். |
| **வேல் மிக்சர்**<br>குளப்பிட்டி வீதி,<br>ஆனைக்கோட்டை. | 960, K.K.S. வீதி, நாச்சிமார் கோயிலடி,<br>யாழ்ப்பாணம். |
| **விநாயகர் தொலைத் தொடர்பு நிலையம்**<br>பிரதான வீதி, சித்தன்கேணி. | **ஒளிக்கதிர் அழகு மாடம்**<br>சங்கரத்தை சந்தி,<br>வட்டுக்கோட்டை. |
| **K.J.தொலைத் தொடர்பகம்**<br>தெல்லிப்பளை வீதி,<br>சித்தன்கேணி. | **ஹரணி ஹாட்வெயர்**<br>164,ஸ்ரான்லி வீதி,<br>யாழ்ப்பாணம். |
| **கணேசா தொலைத் தொடர்பகம்,**<br>முருகமூர்த்தி கோவில்வீதி,<br>சங்கரத்தை வட்டுகோட்டை. | **ரவி மோட்டார் சைக்கிள் கராஜ்**<br>பிரதான வீதி, சங்கானை. |

(C/17321)

# 'வியட்கொங்' பாணியில் குடாநாட்டை கைப்பற்ற விடுதலைப் புலிகள் திட்டமாம்!

தென் இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் சூறாவளிக்கு மத்தியில், யாழ்.குடாநாட்டைக் கைப்பற்றுவதற்கான ஆயத்தங்களை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மேற்கொண்டு வருவதாகத் தேசிய பாதுகாப்பை மையமாகக் கொண்டும் தனது சொந்தக் கருத்துக்களை முன்வைத்தும் இருக்கிறார் கட்டுரையாளர் கீர்த்தி வர்ணகுலசூரியா. 'திவயின' சிங்கள வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

"அரசியலைவிட நான் எனது நாட்டை மதிக்கிறேன்" என முன்னாள் இஸ்ரேலியப் பிரதமர் திருமதி கோல்டா மியர் தெரிவித்திருந்தார். அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவி வகித்த தியடோர் ரூஸ்வெல்ட் "அமெரிக்காவில் 50 சதவீதமான அமெரிக்கர்கள் இல்லை. அங்கு 100 சதவீதமான அமெரிக்கர்களே உள்ளனர்" எனத் தெரிவித்தார். ஆனால் எங்கள் நாட்டிலோ அரசியல்வாதிகள் தேசியப் பாதுகாப்பை ஒருபுறம் தள்ளி விட்டு, அதிகார ஆவலுடன் செயற்படுகின்றனர்.

கொழும்பிலிருந்து 250 கி.மீ. தூரத்தில் - வன்னியிலுள்ள - பிரபாகரன் இந்த அதிகாரப் போராட்டங்களுக்கிடையில், தனது நோக்கத்தை நிறைவேற்ற எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார். யுத்தம் நடைபெறும்போது காட்டிக் கொடுத்தலும், தாரை வார்த்தலும் இடம்பெறுகின்றன என்பதை வரலாற்றில் காணமுடிகிறது. தற்போது நாட்டிலிடம்பெறும் சம்பவங்களும் அவையே.

ஜூன் மாதமானது ஒருபோதும் மறக்கமுடியாத மாதமாகும். 1990 ஜூன் 11ஆம் திகதி கிழக்கு மாகாணத்தில் பொலீஸ் நிலையங்களில் பணியாற்றிய பொலீஸ்காரர்களை விடுதலைப் புலிகளுக்கு அடிபணியுமாறு, அப்போது ஆட்சியில் இருந்த ஐ.தே.கட்சி அரசு கட்டளையிட்டது. இரு கைகளும் கட்டப்பட்ட நிலையில் 'ட்ரக்' வாகனங்களில் ஏற்றப்பட்டுத் திருக்கோயில் காட்டுக்குக் கொண்டு செல்லப்பட்ட 600 பொலீசார் கொல்லப்பட்டனர். இது இந்த நாட்டில் இடம்பெற்ற மிகப் பெரிய காட்டிக் கொடுத்தல் சம்பவமாகும். இந்தக் காட்டிக் கொடுக்கும் சம்பவத்திற்கு முன்னர் பொதுமக்கள் மற்றும் பாதுகாப்புப் படையினருக்குத் தெரியாத விதத்தில் பயங்கரவாதிகளுக்கு பெருமளவு நிதியை அரசு வழங்கியது. 1990 ஜூன் 8ஆம் திகதியில் இருந்து செப்ரம்பர் 27ஆம் திகதி வரையான காலத்தில் முறைக்கு 5 மில்லியன் ரூபா வீதம் அரசாங்கத்தால் புலிகளுக்கு மொத்தமாக 75 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. பிரேமதாசா ஜனாதிபதியாகப் பதவி வகித்த அந்தநேரம் திறைசேரியின் செயலாளரான, தமிழ் அதிகாரியின் சொந்தப் பெயருக்கு அந்தப் பணம் வழங்கப்பட்டது. இவ்வாறான துரோகச் சம்பவங்கள் இந்நாட்டு வரலாற்றில் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன. இவ்வாண்டு ஜூன் மாதத்தில் விடுதலைப் புலிகளுக்காக குரல் எழுப்பும் 'ரெலோ' அமைப்புக்கும் எதிர்க் கட்சிக்குமிடையில் ஒப்பந்தம் ஏற்பட்டது. விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குதல் மற்றும் வடபகுதிக்குப் பொருள்களை அனுப்ப இடமளிப்பது என்ற கோரிக்கைகளுக்கு எதிர்க் கட்சி உடன்பட்டுள்ளது என 'ரெலோ' அமைப்பினர் தெரிவித்தனர். இது நாட்டின் பாதுகாப்பைக் காட்டிக் கொடுத்தது ஆகாதா? எந்த அரசு ஆட்சி செய்தாலும் இந்த நாட்டின் பாதுகாப்பை அதிகார ஆசைக்காகக் காட்டிக் கொடுப்பவர்கள் நாட்டுப் பற்றாளர்கள் அல்லர்; அவர்கள் தேசத் துரோகிகள் ஆவர்.

யாழ்ப்பாணத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க கோட்டையில் தமிழீழக் கொடியை ஏற்ற இடமளித்தவர்கள் அப்போது ஆட்சிபீடத்திலிருந்த தற்போதைய எதிர்க்கட்சியினராவர். அற்பச் சலுகைகளுக்காக ஆங்கிலேயரிடம் ஸ்ரீ விக்கிரமராஜசிங்க மன்னனைக் காட்டிக்கொடுத்தவர்களும் நம்மவர்களே. இவ்வாறான சந்தர்ப்பங்களில் எமது அரசியல்வாதிகளின் காட்டிக்கொடுக்கும் முயற்சிகளில் ஈடுபடுவது புதுமையான நிகழ்வல்ல. இந்த நாட்டில் கொடுக்கும் சம்பவங்களும், அரசியல் இழுபறிகளும் அதிகரிக்கும் வரை காத்திருக்கும் பிரபாகரன் யாழ். குடாநாட்டைக் கைப்பற்றுவதற்காக அடிக்கடி தனது உளவாளிகளை அனுப்பியவண்ணமுள்ளார்.

## 'வியட்கொங்' பாணியில் தாக்கத்திட்டமாம்

கிளாலி, முகமாலை, நாகர் கோயில் ஆகிய பகுதிகள் ஊடாக, யாழ். குடா நாட்டிற்குள் ஊடுருவிய புலி உளவாளிகள் 'வியட்கொங்' பாணியில் தாக்குதலை மேற்கொள்ளவுள்ளனர் எனத்தெரியவருகிறது.

கடந்த மாதம் 24ஆம் திகதி இரவு இந்த உளவாளிகள் சங்குப்பிட்டி இறங்குதுறை ஊடாக, குடாநாட்டிற்குள் நுழைய மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. இந்தச் சம்பவங்கள் அனைத்தும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதில் பிரபாகரனுக்குள்ள தீராத அபிலாஷையையே எடுத்துக்காட்டுகின்றன. விடுதலைப் புலிகளின் தலைவரின் இந்தச் செயற்பாடுகளானவை "ஒரு கல்லால் இரு மாங்காய்களை வீழ்த்துவதற்கு ஒப்பானவையாகும்". எதிர்க் கட்சியைக் கொண்டு தமது அமைப்பு மீது விதிக்கப்பட்ட தடையை நீக்குவது, யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி ஈழக் கொடியை ஏற்றுவது ஆகிய இரு எதிர்பார்ப்புக்களைக் கொண்டதாகும். 2000ஆம் ஆண்டு இறுதிக்குள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவேன் எனவும் 2002ஆம் ஆண்டில் ஈழ இராஜ்ஜியத்தை அமைப்பேன் எனவும், புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களுக்கு பிரபாகரன் அறிவித்துள்ளதை நாம் மறந்துவிட முடியாது.

இருப்பினும் அது மிகவும் கடினமான விடயம் என்பதை அவர் அறிவார். தரையிலுள்ள பல்குழல் றொக்கட் லோஞ்சர்களும் வானில் இருந்து தாக்குதல்களை மேற்கொள்ளும் 'மிக் 27' ரக விமானங்களும் தனது திட்டங்களை மேற்கொள்ளத் தடையாயுள்ளன என்பதை உணர்ந்த புலிகளின் தலைவர் 'எஸ்.ஏ 16' "இக்லா" ரக விமான எதிர்ப்பு ஏவுகணைகளைப் பெறும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. முன்னாள் 'வோர்சோ' அமைப்பைச் சேர்ந்த நாடுகளிடம் இந்தரக விமான எதிர்ப்பு ஏவுகணைகள் உள்ளன. இந்த ஏவு கணைகளை பல்கேரியா போதை வஸ்துக் குழுக்களும் பயங்கரவாத அமைப்புகளுக்கு விற்பதாக சர்வதேசப் பொலீசாரும் அமெரிக்காவைச் சேர்ந்த எப்.பி.ஐ. (F.B.I) பொலீசாரும் தகவல் வெளியிட்டுள்ளனர். மேலும் பாரிசில் நடைபெற்ற "லேபர் ஜெட்" என்னும் விமானக் கண்காட்சியில் பிரான்சிலுள்ள விடுதலைப் புலிகளின் பணிமனையைச் சேர்ந்த உளவாளிகள் பங்குபற்றினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அவர்கள் 'மிஸ்டிறால்' ரக விமான எதிர்ப்பு ஏவுகணைகள் குறித்து (MISTRAL GROUND TO AIR MISSILE LAUNCHER) விசாரித்துள்ளனர் என பிரான்சில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த ஏவுகணைகள் மூலம் 6 கி.மீ. உயரத்தில் வானில் பறக்கும் விமானத்தைத் தாக்கி அழிக்க முடியும்.

'மிஸ்டிறால்' விமான எதிர்ப்பு ஏவுகணைகளை விடுதலைப் புலிகளால் பெறமுடியாவிடினும் கொசவோ கெரில்லாக்கள் மற்றும் அல்பேனியா போதைவஸ்துக் குழுக்கள் வசமுள்ள ஏவுகணைகள் மூலம், தமது தேவைகளை நிறைவேற்ற அவர்களால் முடியும். சேர்பியன் இராணுவத்திற்கு எதிராக ஜேர்மனி, பிரித்தானியா, பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகள் பெருமளவில் ஆயுதங்களை கொசவோ கெரில்லாக்களுக்கு வழங்கியுள்ளன.

அந்த ஆயுதங்களுள் டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளும் அடங்கும்.

விடுதலைப் புலிகள் இவ்வாறு யுத்தத்திற்குத் தயாராகிவரும் வேளையில் 'அக்கினிச் சுவாலை' இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் இதுவரை அரச படைகள் எந்தவொரு இராணுவ நடவடிக்கையையும் ஆரம்பிக்கவில்லை. விடுதலைப் புலிகளுக்கு மூச்சுவிட, பாதுகாப்புப் படையினர் கால அவகாசம் வழங்கியுள்ளனர் போலும். விடுதலைப் புலிகள் கொழும்பில் இருந்து வடக்கே செல்லும் போலிச் சமாதானக் குழுக்களுடன் பேச்சுக்களை நடத்துகின்றனர். புலிகளுக்கு எதிராக யுத்தத்தை மேற்கொள்ள எத்தகைய யுத்த உபகரணங்களையாவது பெறுங்கள் என அறிவித்த ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுகளுக்குப் போதிய நிதியை வழங்கினார். புலிகள் யாழ்ப்பாணத்தின் நுழைவாசல் வரை வந்தபின்னர் அவசரயுத்த உபகரணங்களைப் பெறுவதற்காக, ஜனாதிபதி கோடிக் கணக்கான நிதியை வழங்கினார். நிதியைச் செலவிட்டு பெரும் எண்ணிக்கையில் யுத்த உபகரணங்களைப் பெற்றுக்கொண்டபோதிலும் வன்னியில் குறிப்பிட்ட ஒரு சிறு நிலப்பரப்பில் மறைந்திருக்கும் நபர் ஒருவரைக் கைது செய்ய அல்லது அழித்தொழிக்க இராணுவத்திற்கு ஏன் முடியாதுள்ளது?

## மகேஸ்வரனின் அறிக்கை

இவ்வாறான நிலைமைகளின் மத்தியில் விடுதலைப் புலிகளின் மீதான தடை நீக்கப்பட வேண்டும் என ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற கட்சிகள் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களிற்குச் சென்று வேண்டுகோள் விடுத்தன. ஐ.தே. கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரி.மகேஸ்வரன் கூட விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும் எனக்

**தமிழில்: கஜனி**

கோரிக்கை விடுத்துள்ளது மல்லாமல் 'உதயன்' என்ற புலிகளுக்குச் சார்பான பத்திரிகையில் விடுத்த மேதினச் செய்தியில் மே தினத்தை நினைவு கூருவதிலும் பார்க்க எழுதுமட்டுவாள் சமரில் உயிர் நீர்த்த புலிப் போராளிகளை நினைவு கூரவேண்டும் எனத் தெரிவித்து அறிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் தேசியப் பாதுகாப்புடன் எதிர்க்கட்சி விளையாடும் இந்த விளையாட்டின் அர்த்தம் அதிகாரப் பேராசையே தவிர வேறேதுவுமில்லை.

1990 இல் அப்போது வெளிநாட்டு அமைச்சராகவிருந்த ஏ.சீ.எஸ்.ஹமீட் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை மேற்கொண்ட வேளையில் புலிகள் காரைதீவு, மற்றும் கல்முனை இராணுவ முகாம்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டனர். கொல்லப்பட்ட படையினரின் சடலங்களை அப்புறப்படுத்துவதே கஷ்டமாகவிருந்தது. இராணுவ முகாம்கள் பொலீஸ் நிலையங்களில், இருந்த பெருமளவு ஆயுதங்களையும், 24 லட்ச ரூபாவையும் புலிகள் அபகரித்தனர். ஜூன் 13ஆம் திகதி அம்பாறை - மட்டக்களப்பு - கிரான் - கல்குடா ஆகிய இராணுவ முகாம்கள் மீதும் புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டனர். இருப்பினும் அனைத்து அழிவுகள் யாவும் இடம்பெற்று முடிவடைந்த பின்னரே மேலதிகப் படையணிகள் அனுப்பி வைக்கப்பட்டன.

இகுஜீன் ஓ நீல் என்பவர் தனது நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:-

"இதில் நிகழ்காலம் இல்லை. எதிர்காலமும் இல்லை. கடந்தகால நிகழ்வுகளே நிரந்தரமாக உள்ளன"

ஆனால் பிரபாகரன் நிகழ்காலம் மற்றும் எதிர்காலம், ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டு திட்டங்களைத் தீட்டுகின்றார். யாழ்ப்பாணத்தில் முகமாலைப் பகுதிக்குப் புலிகளின் குழுவை அனுப்பி இராணுவத்தினரின் 'ட்ரக்' வாகனத்தை வெடிக்க வைத்துத் தகர்த்த சம்பவமானது தனக்குத் திடீர்த் தாக்குதலை மேற்கொள்ளும் ஆற்றல் உண்டு என்பதை எடுத்துக் காட்டுவதற்கேயாகும். இந்தச் சம்பவங்களில் இருந்து இராணுவ அதிகாரிகள் பாடம் எதையும் பயிலவில்லை. இவற்றிற்கு மாற்று வழி எதையும் காணவுமில்லை. வானொலித் தொலைபேசிக் கருவிகளைத் தமது சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்தும் - மக்களின் வரிப் பணத்தைக் கணக்கின்றிச் செலவிடும் - இராணுவ அதிகாரிகள் உள்ள நாடொன்றில் சிப்பாய்கள் 'டாடா' டிறக் மற்றும் உழவு இயந்திரங்களில் பயணஞ்செய்வது புதுமையான விடயமல்ல. கடந்த காலங்களில் பஸ் மற்றும் டிறக் வாகனங் களில் பயணஞ்செய்த வேளையிலேயே சிப்பாய்கள் பெரும் எண்ணிக்கையில் உயிரிழந்துள்ளனர். சிப்பாய்களின் உயிர்களைப் பாதுகாக்க துருப்புக் காவிகளோ அல்லது நிலக்கண்ணி எதிர்ப்பு வாகனங்களோ ஏன் பயன்படுத்தப்படவில்லை? இந்தக் குண்டு வெடிப்பு இடம்பெற்ற இடம் (முகமாலை) இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ளது. செச்னியப் பயங்கரவாதிகளிடம் இருந்து விடுவித்த பிரதேசங்களுக்குக் கூட, ரஷ்ய இராணுவம் நிலக்கண்ணிகளை அகற்றும் யுத்த டாங்கிகளை அனுப்பி, அவதானித்த பின்னரே சிப்பாய்கள் செல்ல அனுமதித்தது. ஆனால் எமது நாட்டில் சிப்பாய்களை ஏற்றிச்செல் லும் வாகனங்கள் அடிக்கடி நிலக் கண்ணிகளுக்கு இலக்காகின்றன.

வடக்கில் உள்ள படையினர் கூட போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பழுதடைந்த பஸ்களையே அன்று தொட்டு இன்றுவரை போக்கவரத்துக்குப் பயன்படுத்தி வருகின்றனர். ஒரு முறை செய்தியாளர்களை ஏற்றிச்சென்ற பஸ் கூட பழுதடைந்தது. இத்தகைய அனுபவங்களைச் சிப்பாய்களும் பெற்றுள்ளனர். ஆனால் கொழும்பு நகரில் இராணுவ அதிகாரிகள் தங்கள் மனைவிமாருடன் சொகுசு வாகனங்களில் பயணம் செய்வதைக் காணமுடிகிறது. மூத்த இராணுவ அதிகாரிகள் சொகுசான கட்டடங்களில் பணியாற்றும் இந்த நாட்டில், சாதாரண சிப்பாய்களின் பயணங்களுக்குப் பாதுகாப்பற்ற வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இது மிகவும் கவலை தரும் விடயமாகும். இந்நிலையிலும் நாம் தொடர்ந்தும் பாதுகாப்பு வரியைச் செலுத்திவருகிறோம்.

இதற்கிடையில் 'நாய் வீழ்ந்தது நரிக்கு வேட்டை' என்பது போல் எதிர்வரும் மாதத்தில் பாரிய தாக்குதலை மேற்கொள்ள புலிகளின் தலைவர் தயாராகி வருகின்றார். இந்தத் தாக்குதலில் ஈடுபடவுள்ள புலிகளுக்கு பூநகரியில் திவீரப்பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

வியட்நாமில் 'டியென்பியென்புகு' இராணுவ முகாம் கைப்பற்றப்பட்ட பாணியில், தாக்குதல்களை மேற்கொள்ள பிரபாகரன்திட்டமிட்டுள்ளார். ஒரே நேரத்தில் 9 இடங்களில் தரையிறங்கி - யாழ்.நகருக்குள் நுழைந்து - அதைக் கைப்பற்றி - ஈழக்கொடியை ஏற்றுவதே பிரபாகரனின திட்டமாகும். இதைவிட ஜனாதிபதி மற்றும் வெளிநாட்டு அமைச்சர் ஆகியோரைக் கொன்றொழிக்கும் தனது நோக்கத்தை நிறைவேற்றுமாறு, தனது உளவாளிகளுக்கு பிரபாகரன் கட்டளையிட்டுள்ளார். கடந்த மாதம் நாட்டின் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற நிகழ்ச்சிகளில் ஜனாதிபதி பங்குபற்றியதால் ஜனாதிபதிக்கான பாதுகாப்பில் மீண்டும் தொய்வு ஏற்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள புலிகளின் உளவாளிகள் பிரபாகரனுக்குத் தெரிவித்துள்ளனர் என வடபகுதித் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதேபோல வெளிநாட்டு அமைச்சரும் கொழும்பில் பல மாநாடுகளில் பங்குபற்றி வருகின்றார் என புலிகளின் உளவாளிகள் தெரிவித்துள்ளனர். ஊடகத்துறையிலிருந்து பாதுகாப்புத் துறை வரை, புலிகளின் உளவாளிகள் இருப்பதாலும், 'தமிழ் நெற்' இணையத்தளத்தை நடத்தி வருபவர் புலிகளின் உளவாளியாக இருப்பதாலும் புலிகளுக்கு தங்கள் பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொள்ள வசதியாயுள்ளது.

புலிகளின் இந்த இணையத் தளத்துடன் தொடர்புடைய சிவராம் அல்லது தராகி என அழைக்கப்படும் முன்னாள் புளொட் அமைப்புப் பயங்கரவாதியும் 'தமிழ் கார்டியன்' என்னும் பத்திரிகையை நடத்தி வரும் வசந்தராஜா ஆகியோர் குறித்துக் குழப்பமடைந்த புலிகளின் ஆதரவாளர்கள் ஆர்.எஸ்.எவ். என்னும் சர்வதேச அமைப்புக்கு இவ்விடயம் குறித்து தெரிவித்த போது, தமிழ் ஊடகவியலாளர்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் விதத்தில் அவர்கள்மீது பொய்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன என அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந் நாட்டுப் பாதுகாப்புத் துறையினர்மீது துவேசக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்திப் புலிகளின் முகவர்களாகச் செயற்படும் இந்த இரு துரோகிகளைக் காப்பற்றுவதற்காக வெளிநாட்டு அமைப்பு ஒன்று அவர்களது தவறுகளை மூடி மறைக்கிறது.

இதற்கிடையில் கொழும்பில் புலிகளின் பணிமனை ஒன்றை அமைக்க, இடமளிக்க வேண்டும் எனக் குரலெழுப்பிய சீவகன் என்பவர் லண்டனில் புலிகளின் அச்சுறுத்தல்களை எதிர்நோக்க நேர்ந்துள்ளது. இந்த நாட்டில் செய்திச் சுதந்திரம் இல்லை எனக் கூறி லண்டன்சென்று அவர் ஆரம்பித்த 'வான்முரசு' என்ற பத்திரிகைக்கும் புலிகளின் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும், அவர் அதுபற்றி அன்ரன் பாலசிங்கத்திடம் முறையிட்டார் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இருப்பினும் அந்த முறைப்பாடு வீசி எறியப்பட்டதுடன், பிரபாகரனின் எச்சரிக்கையை அடுத்து சீவகன் தற்போது மௌனத்தைக் கடைப்பிடிப்பதாகவும் தெரியவருகிறது. வீரகேசரிப் பத்திரிகையில் பணியாற்றி கனடாவில் 'மஞ்சரி' பத்திரிகையை ஆரம்பித்த ஒருவருக்கும் இந்த நிலைமையே ஏற்பட்டது.

பிரபாகரனை எதிர்த்துக் குரலெழுப்பும் தமிழர் எவரையும் மரணம் அரவணைக்கும். நிலமைகள் இவ்வாறு இருக்கையில் புலிகள் மீதான தடையை அகற்றுமாறு தமிழ் அரசியல்வாதிகள் குரலெழுப்புகின்றனர். புலிகள் பல தமிழ்க்கட்சிகள் மீது தடைவிதித்துள்ளனர். வன்னியிலுள்ள மக்கள அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குச் செல்லாமல் வீதிகளைத் தடைசெய்துள்ளனர். ஆனால் அவர்கள் மீதான தடை நீக்கப்பட வேண்டும் எனக் கோருவது முரண்பட்ட கருத்து அல்லவா?

இதைவிட விடுதலைப் புலிகளும், ரெலோ அமைப்பும் தமிழ் மக்களிடமிருந்து தொடர்ந்து கப்பம் பெற்று வருகின்றனர். இருப்பினும் அவர்களே தமிழ் மக்களின் இரட்சகர்கள் என டொலர்களில் சுகபோகம் அனுபவிக்கும் அமைப்புக்கள் வெளிநாடுகளுக்கு பறைசாற்றுகின்றன.

நிலமைகள் இவ்வாறு இருக்கையில், இராணுவத்தைச் சேர்ந்த ஒரு சில பிரிவுகள் தங்கள் அதிகாரத்திற்கு மீறிய செயல்களில் ஈடுபடுவதானது பேராபத்தில் முடியக்கூடும். மூத்த இராணுவ அதிகாரிகள் 122 மி.மீ.ஆட்லறிகளைக் கூட முகாம்களில் கைவிட்டுத் தப்பி ஓடும் போது சில பிஸ்டல்கள் காணாமல் போன சம்பவத்தில் கைது செய்யப்பட்ட படைவீரர் ஒருவர் தாக்கிக் கொல்லப்பட்டுள்ளார். இராணுவப் பொலீஸார் மேற்கொண்ட தூரதர்ஷனமற்ற இந்தச் செயலால், சிறிலங்காவில் இராணுவம் தனது ஆட்களையே கொல்லுகிறது என சர்வதேச மட்டத்தில் பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து புலிகள் பிரச்சாரம் மேற்கொண்டு வரும் வேளையில், மருதானையில் தமிழ் பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு ஆளான செய்தி வெளிவந்துள்ளது. 'தமிழ் நெற்' என்ற இணையத்தளம் இந்தச் சம்பவம் குறித்து அதி உச்ச பிரச்சாரத்தை மேற்கொண்டது. கறுப்பு உடையணியும் கொழும்பிலுள்ள மகளிர் அமைப்பு இந்தச் சம்பவம் குறித்து எதிர்ப்பைத் தெரிவிக்கத் தயாராகி வருகிறது.

## சமாதானக் கைத்தொழில்

செய்திகள் இவ்வாறு வெளிவந்து கொண்டிருக்கும் வேளையில் சமாதானக் கைத்தொழிலும் (PEACE INDUSTRY) தீவிரமாக அபிவிருத்தியடைந்து வருகின்றது. சமாதான முன்னணியும் கூட்டு அமைப்பும் இணைந்து புலிகளின் மீதான தடையை நீக்கும் "கொந்திராத்தை"

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூலை8

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்வ தற்கான பயண அனுமதிக்கு விண் ணப்பித்தவர்களில் இம் மாதம் முத லாம் திகதிவரையும் அனுமதி வழங் கப்பட்டோரின் விவரம் பிரதேச செய லர் பிரிவு ரீதியாக வருமாறு:-

**யாழ்ப்பாணம்**

(169683ஏ) (179220ஏ) (182094ஏ)
(189653ஏ) (189653பி) (189653சி)
(189653டி) (189700ஏ) (189719ஏ)
(190801ஏ) (190823ஏ) (190823பி)
(190823சி) (190823டி) (190823ஈ)
(190823எவ்) (190858ஏ) (190923சி)
(191135ஏ) (191135பி) (191135சி)
(191135டி) (191205ஏ) (191205பி)
(193185ஏ) (193185பி) (193185சி)
(193223ஏ) (193359ஏ) (193359பி)
(193359சி) (193489ஏ) (195181ஏ)
(195216ஏ) (195216பி) (195293ஏ)
(195312ஏ) (195325ஏ) (195350ஏ)
(195350பி) (195351ஏ) (195351பி)
(195351சி) (195378ஏ) (195421ஏ)
(195453ஏ) (195453பி) (195453சி)
(195453டி) (195472ஏ) (195472பி)
(195475ஏ) (195475பி) (195475சி)
(195483ஏ) (195508ஏ) (195529பி)
(195555ஏ) (195564ஏ) (195717ஏ)
(195732ஏ) (195739ஏ) (195739பி)
(195739சி) (195739டி) (195740ஏ)
(195744ஏ) (195744பி) (195744சி)
(195744டி) (197248ஏ) (197248பி)
(197252ஏ) (197255ஏ) (197280ஏ)
(197288ஏ) (197288பி) (197288சி)
(197288டி) (197294ஏ) (197294பி)
(197309ஏ) (197313ஏ) (197325ஏ)
(197325பி) (197325சி) (197325டி)
(197325ஈ) (197330ஏ) (197367ஏ)
(197391ஏ) (197391பி) (197391சி)
(197405ஏ) (197414ஏ) (197414பி)
(197417ஏ) (197439ஏ) (197439பி)
(197439சி) (197456ஏ) (197456பி)
(197456சி) (197468ஏ) (197470ஏ)
(197471ஏ) (197474ஏ) (197474பி)
(197487ஏ) (197487பி) (197487சி)
(197487டி) (197487ஈ) (197487எவ்)
(197487ஜி) (197488ஏ) (197493ஏ)
(197508ஏ) (197508பி) (197510ஏ)
(197510சி) (197511ஏ) (197529ஏ)
(197532ஏ) (197533ஏ) (197535ஏ)
(197538ஏ) (197541ஏ) (197541பி)
(197541சி) (197541டி) (197541ஈ)
(197551ஏ) (197580ஏ) (197582ஏ)
(197582பி) (197604ஏ) (197612ஏ)
(197616ஏ) (197616பி) (197631ஏ)
(197631பி) (197631சி) (197631டி)
(197631ஈ) (197631எவ்)(197635ஏ)
(197649ஏ) (197650ஏ) (197651ஏ)
(197668ஏ) (197669ஏ) (197676ஏ)
(197676பி) (197676சி) (197700ஏ)
(197700பி) (197700சி) (197735ஏ)
(197735பி) (197751பி) (197751சி)
(199699ஏ) (199801ஏ) (199817ஏ)
(199864ஏ)

**கோப்பாய்**

(197284ஏ) (197284பி) (197284சி)
(197284டி) (197484ஏ) (197531ஏ)

**நல்லூர்**

(163081ஏ) (163081பி) (163081சி)
(163081டி) (184380ஏ) (186190ஏ)
(186190பி) (186190சி) (186190டி)
(189049ஏ) (189095ஏ) (189726ஏ)
(189727ஏ) (189727பி) (189729ஏ)
(193161ஏ) (193161பி) (193165ஏ)
(193165பி) (193392ஏ) (193744ஏ)
(195372ஏ) (195484ஏ) (195599ஏ)
(197202ஏ) (197210ஏ) (197210பி)
(197210சி) (197229ஏ) (197229பி)
(197229சி) (197305சி) (197361ஏ)
(197375ஏ) (197379ஏ) (197379பி)
(197380ஏ) (197381ஏ) (197398ஏ)
(197400ஏ) (197400பி) (197431ஏ)
(197431பி) (197452ஏ) (197491ஏ)
(197507ஏ) (197510பி) (197565ஏ)
(197566ஏ) (197566பி) (197625ஏ)

இம்மாதம் 3ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் விவரம் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

**யாழ்ப்பாணம்**

(107462ஏ) (107462பி) (107462சி)
(120019ஏ) (120027ஏ) (120027பி)
(120027சி) (120027டி) (120027ஈ)
(120027எவ்) (120027ஜி)(120027எச்)
(120027ஐ) (120027ஜே)(120027கே)
(120027எல்) (120027எம்)(120027என்)
(120027ஓ) (120027பீ)(120027கியூ)
(120027ஆர்) (120027எஸ்) (120061ஏ)
(184427ஏ) (184427பி) (188717பி)
(189006ஏ) (189006பி) (189006சி)
(189037ஏ) (189260பி) (189710ஏ)
(189715ஏ) (189715பி) (189715சி)
(189717ஏ) (189720ஏ) (189720பி)
(189723ஏ) (189734ஏ) (189737ஏ)
(189743ஏ) (189747ஏ) (189747பி)
(190097ஏ) (191024ஏ) (191024பி)
(191024சி) (191087ஏ) (192994ஏ)
(192994பி) (192994சி) (192994டி)
(192994ஈ) (193053ஏ) (193053பி)
(193053சி) (193054ஏ) (193214ஏ)
(193214பி) (193332ஏ) (193333ஏ)
(193550ஏ) (193374ஏ) (193740ஏ)
(195213ஏ) (195296ஏ) (195390ஏ)
(195440ஏ) (195476ஏ) (195479ஏ)
(195479பி) (195479சி) (195496ஏ)
(195497ஏ) (195497பி) (195507ஏ)
(195507பி) (195549ஏ) (195549பி)
(195549டி) (195549ஈ) (195549எவ்)
(195734ஏ) (197230ஏ) (197232ஏ)
(197232பி) (197236ஏ) (197257ஏ)
(197283ஏ) (197293ஏ) (197298பி)
(197353ஏ) (197353பி) (197364ஏ)
(197364பி) (197375ஏ) (197376பி)
(197378ஏ) (197386ஏ) (197387ஏ)
(197399ஏ) (197399பி) (197409ஏ)
(197410ஏ) (197420ஏ) (197421ஏ)
(197439ஏ) (197440ஏ) (197440பி)
(197440சி) (197440டி) (197447ஏ)
(197447பி) (197448ஏ) (197448பி)
(197457ஏ) (197459பி) (197459ஏ)
(197467ஏ) (197467பி) (197467சி)
(197467டி) (197467ஈ) (197476ஏ)
(197476பி) (197482பி) (197483ஏ)
(197485ஏ) (197485பி) (197485சி)
(197486ஏ) (197497ஏ) (197504ஏ)
(197504பி) (197505ஏ) (197516ஏ)
(197516பி) (197516சி) (197518ஏ)
(197518பி) (197518சி) (197532ஏ)
(197542ஏ) (197542பி) (197543ஏ)
(197543பி) (197544ஏ) (197545ஏ)
(197552ஏ) (197560ஏ) (197571ஏ)
(197581ஏ) (197581பி) (197594ஏ)
(197597ஏ) (197609ஏ) (197611ஏ)
(197611பி) (197611சி) (197617ஏ)
(197619ஏ) (197634ஏ) (197640ஏ)
(197653ஏ) (197653பி) (197653சி)
(197653டி) (197654ஏ) (197665ஏ)
(197689ஏ) (197689பி) (197695ஏ)
(197699ஏ) (198260ஏ) (199233ஏ)
(199261ஏ) (199716ஏ) (199716பி)
(199716சி) (199718பி) (199718ஏ)
(199724ஏ) (199724பி) (199802ஏ)
(199806ஏ) (199843ஏ) (199845ஏ)
(199850ஏ) (199860ஏ) (199868ஏ)
(199869ஏ) (199871ஏ) (199871பி)
(199871சி) (199875ஏ) (199875பி)
(199875சி) (199881பி) (199882ஏ)
(199883ஏ) (199883பி) (199883சி)
(199896ஏ) (199896பி) (199896சி)
(199896டி) (199896ஈ) (199896எவ்)
(199896ஜி) (199905ஏ) (199907ஏ)
(199926ஏ) (199935ஏ) (199935பி)
(199935சி) (199935டி) (199935ஈ)
(199938ஏ) (199948ஏ) (199967ஏ)
(199973ஏ)

**கோப்பாய்**

(184344ஏ) (191059ஏ) (191059பி)
(194344பி) (197558ஏ) (197670ஏ)
(197670பி) (197670சி) (197670டி)

**நல்லூர்**

(184472ஏ) (184787ஏ) (184787பி)
(189266ஏ) (189266பி) (189266சி)
(189749ஏ) (190947ஏ) (190947பி)
(191069ஏ) (193119ஏ) (193119பி)
(193119சி) (193371ஏ) (193371பி)
(193371சி) (193379ஏ) (193426ஏ)
(193750ஏ) (195383எவ்) (195383ஜி)
(195389ஏ) (195389பி) (195389சி)
(195389டி) (195389ஈ) (195574ஏ)
(195733ஏ) (197111ஏ) (197111பி)
(197111சி) (197321ஏ) (197340ஏ)
(197402ஏ) (197402பி) (197406ஏ)
(197406பி) (197426ஏ) (197426பி)
(197426சி) (197426டி) (197430ஏ)
(197472ஏ) (197472பி) (197472சி)
(197472டி) (197480ஏ) (197480பி)
(197482ஏ) (197482சி) (197506ஏ)
(197530ஏ) (197530பி) (197530சி)
(197530டி) (197601ஏ) (197656ஏ)
(197667ஏ) (197691ஏ) (199174ஏ)
(199838ஏ) (199874ஏ) (199874பி)
(199874சி) (199874டி) (199932ஏ)
(199976ஏ) (199979ஏ) (199979பி)
(199993ஏ) (க-10)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 - 07 - 1922



மறைவு 08 - 07 - 2000

### அமரர் பிரகாசம் இராசேந்திரம்

நீண்ட நினைவுகள் நிலைத்து நிற்குது.
மாண்ட உங்கள் ஆத்ம தரிசனம் வேண்டி
உம்பாதம் வணங்கி நிற்கிறோம்.

நாளை (09-07-2001) திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்கு நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*சென்பீற்றறேர்ஸ் லேன்,*
*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.*
(89818)

## பன்னிரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணரங்கில் 11 - 02 - 1924



விண்ணரங்கில் 08 - 07 - 1989

### நடிகமணி
### வி.வி.வைரமுத்து அவர்கள்.

அரங்கினிலே ஒலித்த குரல் அடங்கினதோ அவனியிலே
ஆதரித்த எம் தெய்வம் அகன்றதுவோ எமைவிடுத்து
பார்தனிலே பலவாண்டுகள் சென்றிடினும் உங்கள்
பேர்புகழும் நினைவுகளும் பிரியாது என்றும்!

நினைவுகளில் வாழும்
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள், பெறாமக்கள்.**

*பிரதான வீதி,*
*காங்கேசன்துறை.*
(89753)

## முத்திரைகள் வந்தன

யாழ்ப்பாணம், ஜூலை8

யாழ்.குடாநாட்டில் உள்ள சில தபால் நிலையங்களுக்கு கொழும் பில் இருந்து சாதாரண முத்திரை வகைகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

வடமராட்சிப் பகுதியின் சில தபால் நிலையங்களுக்கும் காரை நகர் மற்றும் சுழிபுரம் பகுதி தபால் நிலையங்களுக்குமே முத்திரை எடுத்து வரப்பட்டதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

நேற்று முதல் முத்திரைகள் உரிய தபால் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதாக யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஜ-10-9)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 1947 - 08 - 24



மறைவு 2001 - 06 - 08

### அமரர் கதிர்காமு அப்பையா

*(கலைவல்லுநர் குண்டுமணி)*

திதி:- துதியை

நமக்காக மெய்வருந்தினீரே! ஐயா - கிணற்றில்
அவலமாகியுன் தளிர்மேனி முறிந்து போனீரோ! - எம்
அன்புருவைப் பறித்தது ஏன் இந்த விதி?
எமக்குதவியின்றி நினைத்து ஏங்க வைத்தீரே! ஐயா
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

நிரந்தர முகவரி:-
*கரம்பகம், மிருசுவில்.*
தற்காலிக முகவரி:-
*ஏழாலை மேற்கு,*
*ஏழாலை.*

*பிரிவால் துயருறும்*
மனைவி, பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
நண்பர்கள்.

(89817)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மண்ணில் 21 . 06 . 1917

விண்ணில் 08 . 06 . 2001

அமரர்

### கார்த்திகேசு தம்பு செல்லத்துரை

(சடாசிவம், போமன்)

(இளைப்பாறிய உதவிப் பணிப்பாளர்,
அரசாங்க சிறுகைத் தொழில் கூட்டுத்தாபனம், கொழும்பு)

கடந்த (08-06-2001)இல் இறைபதமடைந்த எமது அன்புத் தந்தையின் மரணச் செய்தி கேட்டு எமக்கு அனுதாபங்களைத் தெரிவித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, நாளை (09-07-2001) திங்கட்கிழமை அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றுக்காகத், தாவடியில் உள்ள இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனர்கள்.

தற்காலிக முகவரி:
*காளி கோயிலடி,*
*தாவடி வடக்கு,*
*கொக்குவில்.*

(89781)

நிரந்தர முகவரி:
*மீனாட்சி அம்மன் கோயிலடி,*
*சங்கத்தானை,*
*சாவகச்சேரி*

## குடாநாட்டில் இடைநிறுத்தப்பட்டிருந்த

# குடிசன மதிப்பீட்டுப் பணியை மீள ஆரம்பிக்குமாறு உத்தரவு!

யாழ்ப்பாணம்,ஜூலை8

குடாநாட்டில் இடைநிறுத்தப்பட்டிருந்த குடிசன மதிப்பீட்டுப் பணிகளைத் தொடர்ந்துமேற்கொள்ளுமாறு தலைமை புள்ளிவிவரத் திணைக்களம் யாழ்.செயலக அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருப்பதாக அறியவருகிறது.

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் இந்த உத்தரவு விடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

குடாநாட்டில் குடிசன மதிப்பீட்டுப் பணிக்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்தன. இது தொடர்பாக வெளிக்கள அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டுவந்தன.

ஆனால் குடிசன மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடவேண்டாம் என்று கோரி தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாக சேவைப் பிரிவின் பெயரில் அரச அதிகாரிகளுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டதை அடுத்து இந்தப் பணிகள் அனைத்தும் கடந்த மாதம் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

தற்போதைய யுத்த சூழ்நிலையில் தமிழ்ப் பிரதேசங்களில் குடிசன மதிப்பீட்டை நடத்துவது பொருத்தமற்றது; அது தமிழர் தரவுகளைப் பூரணமாக மதிப்பிட உதவப்போவதில்லை என்று தெரிவித்து, குடிசனமதிப்பீட்டுப் பணியை நிறுத்துமாறு ஈ.பி.டி.பி. அமைப்பு உட்படத் தமிழ் அரசியல் கட்சிகள் பலவும்கூட அரசிடம் வற்புறுத்திக் கேட்டிருந்தன. ஆனால் குடிசன மதிப்பீட்டுப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு, தற்போது அரசு உத்தரவிட்டிருக்கிறது.

எதிர்வரும் 19 ஆம் திகதி நாடு முழுவதும் குடிசன மதிப்பீட்டுப் பணி நடைபெறவிருப்பது தெரிந்ததே.

வடக்கு - கிழக்கில் குடிசன மதிப்பீட்டை நடத்தத் தவறினால், அரசுக்கு எதிராக சிங்கள தேசிய இனவாத அமைப்புகள் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக எச்சரித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (ஐ-86)

## சிறுவர்களுக்கு இராணுவப் பயிற்சியா?

# மன்னிப்புச் சபை குற்றச்சாட்டை மறுக்கின்றார் சித்தார்த்தன்

கொழும்பு,ஜூலை8

வவுனியாவில் சிறுவர்களை இராணுவப் பயிற்சிக்காக புளொட் அமைப்பு ஆள்சேர்ப்பதற்காக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்த குற்றச்சாட்டுக்களை, அந்த அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் அடியோடு மறுத்துள்ளார்.

சர்வதேச மன்னிப்புச்சபை தமது அமைப்பின் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் ஆதாரமற்றவை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் த.சித்தார்த்தன் மேலும் தெரிவித்துள்ளதாவது:-


யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுத் துன்பப்படும் மக்களின் மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளிலேயே புளொட் உறுப்பினர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையங்களில், வறுமையில் வாடும் பல சிறுவர்களுக்கு எமது அமைப்பு உணவு, கல்வி ஆகிய வசதிகளை வழங்கி வருகின்றது. ஆனால் அந்தச் சிறுவர்களுக்கும் எமது கட்சிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை.

மேற்படி முகாமில் பல்வேறு வசதியீனத்தின் மத்தியில் வாழும் சிறுவர்கள் மீது, சர்வதேச மன்னிப்புச் சபையோ அல்லது இவ்வாறான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தும் மனித உரிமை அமைப்புக்களோ கவனம் செலுத்துவதில்லை.

படையினரால் கைது செய்யப்படும் எவரும் எமது அமைப்பின் முகாம்களில் ஒப்படைக்கப்படுவதும் இல்லை. இவ்வாறான நடைமுறை நாட்டின் எந்தப்பாகத்திலும் இல்லை.

வவுனியாவிலோ அல்லது வடக்கு - கிழக்கின் எந்தவொரு பகுதியலும் எமது உறுப்பினர்கள் பொதுமக்களுக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதை விடுத்து, பாதிக்கப்பட்டவர்களின் பெயர் விவரங்களை வெளியிட வேண்டும்- என்று சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.



தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனாரின் 35 ஆவது நினைவு தினவிழா அண்மையில் நடைபெற்றது.

பருத்தித்துறைப் பிரதேச செயலக நிர்வாக அதிகாரி ஆர்.விக்னேஸ்வரமூர்த்தி மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். *(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)*




**சுன்னாகம் றோட்டரக்ட் கழகத்தினரால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிகளும் பரிசளிப்பு நிகழ்வும் இணுவில் மத்திய சந்தை விளையாட்டு மைதானத்தில் நடை பெற்றது.**

**இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி எவ்.ஜே.எல்.ரூபசிங்க உரையாற்றுவதையும், கழகத்தலைவர் அ.செல்வேந்திரதாஸ் மற்றும் றோட்டறிக் கழக உறுப்பினர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.** *(படம்: வலி.தெற்குச் செய்தியாளர். (ஐ-152)*

## ஆள்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்காக

# சர்வதேச அபிப்பிராயங்களுக்கு அஞ்சாது இலங்கை அரசு

## அமைச்சர் கதிர்காமர் கூறுகிறார்

ஆள்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் விடயத்தில் இலங்கை அரசு சர்வதேச அபிப்பிராயங்கள் எதற்கும் அஞ்சமாட்டாது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்.

கடந்த சனியன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற விமானத் தாக்குதலை அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகள் கண்டித்திருந்தன.

இது தொடர்பாகச் செய்தி நிறுவனம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இனங்காணப்பட்ட புலிகளின் நிலைகள் மீதே விமானத்தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலைப் படையினர் நடத்தியிருக்காவிட்டால் யாழ்ப்பாணக் குடாநாடு புலிகளின் கைகளில் வீழ்ச்சியடைந்திருக்கும்.

இந்த விமானத்தாக்குதல்கள் அனைத்தும் தேசிய நலன்கருதியே நடத்தப்பட்டன. இவற்றில் அரசியல் நோக்கம் எதுவுமில்லை - என்று அமைச்சர் கதிர்காமர் மேலும் தெரிவித்தார். (க-7)

## காணாமற்போனோர் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை8

வடபகுதியில் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை இராசாவின் தோட்டத்தில் அமைந்துள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் முன்னாள் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் வடபகுதியில் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பான பல முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளதனால் அங்கத்தவர்களைத் தவறாது வருகை தரும்படி சங்கத் தலைவர் ப.செல்வராசா கேட்டுள்ளார். (ஐ-9)

# பச்சிலைப்பள்ளி மக்களுக்கு விசேட நிவாரண கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஜூலை8

பச்சிலைப்பள்ளி மக்களில் இடப்பெயர்வு காரணமாக 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்கான நிவாரணத்தை பெறத் தவறியவர்களுக்கு அந்த மாதத்துக்கான நிவாரணத்தை வழங்க விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே பச்சிலைப்பள்ளியிலிருந்து இடம்பெயர்ந்துள்ள - மேற்படி நிவாரணத்தைப் பெறத் தகுதி உடையவர்களில் -

வடமராட்சியில் தங்கியுள்ளவர்கள் நாளை 9 ஆம் திகதி முதல் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை புலோலியில் இயங்கும் பளை பிரதேச செயலகத்திலும் -

வலிகாமத்தில் தங்கியுள்ளவர்கள், எதிர்வரும் 12, 13, 14 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் பளைப் பிரதேச செயலக உப அலுவலகத்திலும் -

நிவாரண அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் - என்றும் -

குடும்பத் தலைவர்கள் அடையாள அட்டை, புதிய, பழைய உள் உணவு அட்டைகள் ஆகியவற்றுடன் வருகை தந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் -

பளைப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஒ)

# ஹர்த்தாலுக்குப் பங்களிப்புச் செய்த மறத் தமிழருக்கு நன்றி தெரிவிப்பு

## கட்சிகள், அமைப்புக்கள் அறிக்கை

குடாநாட்டில் ஹர்த்தால் போராட்டத்துக்கு உணர்வுபூர்வமான பங்களிப்புச் செய்த மறத் தமிழர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து, மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் மற்றும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் பத்திரிகைச் செய்திக் குறிப்புக்களை விடுத்துள்ளனர்.

**மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம்**

காவல்துறையினரும், அரச படையினரும் தமிழ்ப் பெண்கள் மீது தொடர்ந்து நடத்திவரும் பாலியல் வன்முறைக் கொடுமைகளைக் கண்டித்து, ஹர்த்தாலுக்கு தமிழக் கட்சிகளுடன், எமது அமைப்பு உட்பட வேறு பல அமைப்புகள் விடுத்த அழைப்பை ஏற்று சகல தமிழ் மக்களும் பூரணமான ஒத்துழைப்பை வழங்கியமைக்கு நன்றி கூறுகின்றோம்.

தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளை எதிர்த்து தாங்கள் மானம் உள்ள தமிழர் என்பதை அரசுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் நிரூபித்துக் காட்டியமைக்காக எமது மனமார்ந்த நன்றிகளைத், தெரிவிக்கின்றோம்.

அடக்குமுறைக்கு எதிராக எம்மிடம் உள்ள பலம் ஒற்றுமைதான். எமது ஒற்றுமையை எதிர்காலத்திலும் மேலும் வலுப்படுத்திச் செயற்படுவோம் என்று யாழ்.மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

**மாவை சேனாதிராஜா**

தமிழ் மாநிலங்கள், மலையகம், கொழும்பு போன்ற இடங்களில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்கள், கடையடைப்புக்கள் நடத்தப்பட்டு ஒரே குரலில் எமது எதிர்ப்பு வெளிக்காட்டப்பட்டுள்ளது.

ஹர்த்தாலும் ஆர்ப்பாட்டங்களும் சிங்களவர், சர்வதேச மக்கள் மற்றும் சர்வதேச ரீதியாக மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட அனைவரதும் மனச்சாட்சியைத் தட்டியுள்ளதென்று கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கூறியுள்ளார்.

**மேயர் ரவிராஜ்**

தமிழ் மக்கள் மீதான இன ஒடுக்கல் நடவடிக்கைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் அனைத்துக்கும் அமைதியான முறையில் எதிர்ப்புக் காட்டப்பட்டுள்ளது.

குடாநாட்டில் ஹர்த்தால் முழுமை பெற பங்களிப்புச் செய்த மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் உட்பட அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள மற்றும் அனைவரும் நன்றி கூறப்பட வேண்டியவர்கள்.

இதேவேளை -

கத்தோலிக்க மறைமாவட்ட நீதி, சமாதான ஆணைக்குழுவும் மக்களுக்கு நன்றி தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. (க-7-3)

# இரண்டு மனங்கள் ஒன்றுபட அமைவதே அன்பின் வழிவந்த திருமணம் ஆகும்!

**இலக்கியச் சோலை**

**சந்திரமௌலி**

திருமணங்கள் எப்போதும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. ஆனால் எத்தனை திருமணங்கள் வெற்றியில் முடிகின்றன என்பது ஆராய்சசிக்குரியதே! திருமணத்தன்று ஏற்பட்ட அன்பும் மகிழ்ச்சியும் முதுமை வரை தொடருமானால் அதனை அன்புத் திருமணம் என்று சொல்லலாம். அன்பில்லாமலே தொடங்கும் திருமணங்களையோ, அன்புடன் தொடங்கி இடையில் முறிவுபடும் திருமணங்களையோ பொருந்தா மணம் என்று சொல்லலாம். பெற்றோர் நிச்சயிக்கும் திருமணங்களிற் சில பொருந்தாமணங்கள் ஆவதும் உணடு. அதே போல் தலைவன், தலைவி தாமே நிச்சயிக்கும் திருமணங்களிற் சில பொருந்தா மணங்கள் ஆவதும் உண்டு.

பொருந்தா மணத்தால் பெரிதும் பாதிப்படைபவர்கள் பெண்கள். பெண் கல்வி, பெண்கள் முன்னேற்றம், பெண்கள் நல்வாழ்வு என்று பெண் உலகின் முன்னேற்றத்துக்குக் கவிதை படைத்த பாரதிதாசன் பொருந்தா மணத்தைச் சாடும் போது

*"மண்ணாய்ப் போக!*
*மண்ணாய்ப் போக! மனம் பொருந்தாமணம்.*
*மண்ணாய்ப் போக!"* என்று திட்டினார். பாரதிதாசன் சினங்கொண்டு திட்டியதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. இந்தியாவில் பொருந்தாமணங்களால் பெண்கள் நரகவாழ்வு வாழ்வதைக் கண்ட பாரதிதாசன் சிறுமை கண்டு பொங்கினார். பொருந்தா மணத்தைத் திட்டினார்.

சங்க காலம் தொடக்கம் இக்காலம் வரையும் இலக்கியங்கள் பொருந்தா மணத்தைக் கண்டிக்கின்றன. அன்பின் வழிவந்த அன்பு மணத்தையே போற்றுகின்றன.

அன்பு வழிவந்த அன்பு மணத்தை ஔவையார் *"காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்"* என்றார். அன்புள்ளம் கொண்ட கருத்தொற்றுமை உடையவர் இருவர் காண்பதே இன்பம்! அதுவே அன்பு வாழ்வு என்றார்.

இல்லறத்துக்கு இன்றியமையாத அன்பைப் பொருட்படுத்தாது, பொருளையோ, சமூக அந்தஸ்தையோ, சிலரைத் திருப்திப்படுத்தவோ செய்யும் திருமணங்கள் பொருந்தா மணங்களே! ஆணும் பெண்ணும் விரும்பிச் செய்யும் திருமணத்திலேயே அன்பும் அறனும் உண்டாகும்; பண்பும் பயனும் விளையும். பெண்கள் முன்னேற்றத்தையும் பெண்கள் நல்வாழ்வையும் பெரிதும் விரும்பும் பாரதிதாசன் திருமணத்தைதட தீர்மானிப்பதில் பெண்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று தமது கவிதையில் அறிவுரை கூறுகின்றார்.

*"வல்லமை பேசியுன் வீட்டில் - பெண்*
*வாங்கவே வந்திடுவார் சிலபேர்கள்*
*நல்லவிலை பேசுவார்கள் - உன்னை*
*நாளும் நலிந்து சுமந்து பெற்றோர்கள்*
*கல்லென உன்னை மதிப்பார் - கண்ணிற்*
*கல்யாண மாப்பிள்ளை தன்னையும் காட்டார்*
*வல்லி உனக்கொரு நீதி - இந்த*
*வஞ்சகத் தரகர்க்குநீ அஞ்ச வேண்டாம்"*

*"பெற்றவருக்கெ சமானர் - எதிர்*
*பேசவொண்ணாதவர் ஊரினில் துஷ்ட*
*மற்றும் கடன் கொடுத்தோர்கள் - நல்ல*
*வழியென்று ஜாதியென்றே உரைப்பார்கள்*
*சுற்றத்திலே முதியோர்கள் - இவர்*
*சொற்படி உன்னைத் தொலைத்திடப் பார்ப்பார்*
*கற்றவளே ஒன்று சொல்வேன் - உன்*
*கண்ணைக்கருத்தைக் கவர்ந்தவன் நாதன்"* ★

# சாதிப் பெயர்கள் இனியும் தேவைதானா?

கடந்த 27.06.2001 அன்று உதயனில் 'மக்கள் மன்றம்' பகுதியில் வெளியான 'வீதிகள், குளங்களின் பெயர்களில் தமிழ் மக்களின் சரித்திரம் பொதிந்துள்ளது' என்ற சட்டத்தரணி கள்ளியூர் கனக நடராஜாவின் கட்டுரையைப் படித்ததும் 'உதயன்' பத்திரிகை மீது அதிருப்தி ஏற்பட்டது.

தமிழ் மக்களின் குரலாக வெளிவரும் 'உதயன்' பத்திரிகை விருதுகள் பலவற்றைத் தட்டிக்கொண்டு சர்வதேச ரீதியில் பிரபல்யம் வாய்ந்த ஒரு பிராந்தியப் பத்திரிகை. அது எவ்வாறு இப்படிப்பட்ட ஒரு கட்டுரையைப் பிரசுரித்தது என்பதே எனக்குள் எழுகின்ற வினா. மேற்படி கட்டுரையைப் பிரசுரித்த 'உதயன்' எனது கருத்தையும் திருத்தம் செய்யாமல் அப்படியே பிரசுரிப்பான் என நம்புகிறேன்.

ஈழத்தமிழ் மக்களுக்கு ஒரு வரலாறு உண்டு என்பதை யாரும் மறுக்கவில்லை; மறுக்கவும் முடியாது. ஆனால் கல்தோன்றி மண் தோன்றாக காலத்தே வாளொடு தோன்றிய மூத்த குடி தமிழ்க் குடி என்பதையும் சுய அறிவு படைத்த எந்த ஒரு சாதாரணக் குடிமகனும் ஏற்றுக் கொள்ள மாட்டான்.




இந்து மதத்தை விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்தவர் சுவாமி விவேகானந்தர். இதேபோல் ஈழத்தமிழர் வரலாற்றை விஞ்ஞான ரீதியில் ஆய்வுசெய்தவர் முதலியார் இராசநாயகம். அவருடைய 'Ancient Jaffna' என்ற நூலைப் படித்தவர்களுக்கு இது நன்கு புரியும். முதலியார் இராசநாயகத்திற்குப் பின்னர்கூட அவரைப் போல் ஈழத்தமிழர் வரலாற்றை வெரும் விஞ்ஞான ரீதியில் ஆய்வு செய்யவில்லை - இரகுபதி போன்ற ஒரு சிலரைத் தவிர.

யாழ்பாடி யாழ் வாசித்ததற்காக அவனுக்கு சிங்கள அரசன் பரிசாகக் கொடுத்த மணற்றியில் அவன் தனது உறவினரை அழைத்து வந்து குடியேறிய இடமே யாழ்ப்பாணம் என்ற சிங்கள வரலாற்றாசிரியர்களின் கட்டுக் கதையை சட்டத்தரணி கனக நடராஜா ஏற்றுக்கொள்கிறார் போல் தெரிகிறது. முதலியார் முத்துத்தம்பி எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரத்தில் அவரும் இதையே கூறுகிறார். அப்படியானால் இலங்கையின் பூர்வீகக் குடிகள் சிங்களவர்களே தமிழர்கள் வந்தேறு குடிகள்தான் என்ற சிங்கள இனவாதிகளின் கூற்றைச் சட்டத்தரணி நடராஜா ஏற்றுக்கொள்கிறாரா?

'யாழ்ப்பாணக் குடியேற்றம்' என்ற நூலில் இங்கு குடியேற்றம் சாதிகளின் அடிப்படையில் உருவானது என்று முத்துக்குமாரசாமிப்பிள்ளை கூறியுள்ளார். இதில் ஓரளவு உண்மை உண்டு என கள்ளியூர் கனக நடராஜா கூறியுள்ளார். குடியேற்றம் என்பது மக்கள் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்குச் சென்று குடியேறுவது. அப்படியானால் யாழ்ப்பாணத்தவர்கள் அனைவரும் வந்தேறு குடிகள் என்பதைச் சட்டத்தரணி கனக நடராஜா ஏற்றுக்கொள்கிறார்ா?

முற்காலத்தில் ஒவ்வொரு சாதியினரும் கூட்டம் கூட்டமாகவே வாழ்ந்து வந்தனர். ஒவ்வொரு சாதியினரும் வாழ்ந்த பிரதேசம் அந்த அந்தச் சாதியின் பெயரால் அழைக்கப்பட்டு வந்தது. வெள்ளாந்தெரு, செட்டித்தெரு, தட்டார்தெரு, வண்ணார் பண்ணை, தச்சன்தோப்பு, சிவியர் தெரு, சேணியர்தெரு, இடைக்குறிச்சி, ஆயர்கடவை, நளவகடவை, பறையனாலங்குளம், பண்டாரக்குளம், பிரமணாலங்குளம் இவை சாதியின் பெயரால் அழைக்கப்பட்டு வந்த இடப்பெயர்கள்.

இவ்வாறு சாதிப் பெயர்களைக் குறிப்பிட்ட பிரதேசங்களுக்குச் சூட்டுவதன் மூலம் குறிப்பிட்ட பிரதேசங்களில் வாழ்பவர்கள் என்ன சாதியினர் என்பதை அடையாளம் கண்டு கொள்ளக்கூடியதாகவிருந்தது.

தாங்கள் உயர் சாதியினர் என்று காட்டுவதற்காக வெள்ளாந்தெருவில் வீடு வாங்கிக் குடியிருந்த குறைந்த சாதியினரையும் எனக்குத் தெரியும்.

இதைவிட ஒருவருடைய பெயரை வைத்தே அவரது சாதியை அடையாளம் காணக்கூடியதாகவே முற்காலத்தில் பெயர்கள் சூட்டப்பட்டு வந்தன. உ+ம்: கந்தசாமி உயர் சாதி, கந்தையா - இடைச்சாதி, கந்தன் - கீழ்சாதி.

சாதிகளின் பெயர்கள் தொடர்ந்தும் இருக்க வேண்டும் என வலியுறுத்தும் சட்டத்தரணி கள்ளியூர் கனக நடராஜா எந்தப் பிரதேசத்தில்; என்ன சாதியினர் வாழ்கின்றனர் என்பதை இலகுவாக அறிந்து கொள்வதற்காகத் தான் இவ்வாறு வலியுறுத்துகிறாரா?

வரலாறு எப்போதும் நிலைத்திருப்பதில்லை. காலதிற்குக்காலம் மாறுவதுதான் வரலாறு. அது பிரித்தானிய வரலாறாக இருந்தாலென்ன, அமெரிக்க வரலாறாக இருந்தாலென்ன, யாழ்ப்பாண வரலாறாக இருந்தாலென்ன மாறிக்கொண்டே இருக்கும்.

ஒரு காலத்தில் ஐரோப்பிய நாடுகளிடையே ஆபிரிக்காவைக் கைபற்றுவதற்குக் கடும்போட்டி நிலவியது. காரணம் ஆபிரிககாவிலிருந்து அடிமைகள் ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டார்கள். இதனால் அடிமைகளின் தேசம் என்று ஆபிரிக்காவை ஐரோப்பியர்களோ ஆபிரிக்கர்களோ அழைக்கவில்லை.

யாழ்ப்பாண வரலாற்றை எடுத்துப் பார்த்தாலும் யாழ்ப்பாணத்தை முதலில் தமிழர்கள் ஆண்டார்கள். பின்னர் போர்த்துக்கீசர், பின்னர் ஒல்லாந்தார், பின்னர் ஆங்கிலேயர், பின்னர் இலங்கை அரசு, பின்னர் புலிகள், பின்னர் இலங்கை அரசு இவ்வாறு காலத்திற்குக் காலம் வரலாறு மாறிக் கொண்டே போகிறது.

உலகம் முழுவதிலும் அனைத்து மதங்களிலும் சாதி உண்டு என்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதே. ஆனால் அதற்காக வரலாறு என்று சொல்லிக் கொண்டு பிற்போக்குத்தனமான காரியங்களில் ஈடுபடலாமா?

வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலில் தாசியாகவிருந்த (தமிழ் நாட்டிலிருந்து செட்டிமார்களால் அழைத்து வரப்பட்ட தேவதாசி) கனகியிடம் யாழ்ப்பாணத்து முதலியார்மார், உடையார்மார் போன்ற பிரபுக்கள் அடிமையாகவிருந்ததாகவும் இவர்களில் பலர் பிற்காலத்தில் பால்வினை நோய்களால் அவஸ்தைப் பட்டதாகவும் கனகிபுராணம் கூறுகிறது; இது வரலாறு. வரலாறு என்று சொல்லிக் கொண்டு இப்போதும் சிவன்கோயில் வீதியில் இரவு விடுதி ஒன்றை ஆரம்பிக்கலாமா? சட்டத்தரணி தான் பதில் கூறவேண்டும்.

மேலும் யாழ்ப்பாண வரலாற்றை எடுத்துப் பார்த்தால் தாழ்த்தப்பட்ட மக்களைக் கோயிலுக்குள் அனுமதிக்கக்கூடாது எனக் கூறியுள்ளார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகம். (இவர் ஆறுமுக நாவலர் எனப் பரவலாக அழைக்கப் படுகிறார்) அல்வாயைச் சேர்ந்த பள்ளர் சாதியைச் சேர்ந்த முருகேசுவுக்கு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் அனுமதியளிக்கக் கூடாது என்று ஆங்கிலேய கவர்னருடன் (ஆளுநர்) கூட வாதாடியவர் இராமநாதன் துரை. முருகேசு உபாத்தியாயர் இப்போதும் உயிருடன் இருக்கிறார். தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவன் மீசை வைத்து விட்டான் என்பதற்காக அவனைத் தெருவில் படுக்க வைத்துவிட்டு அவனுக்கு மேல் ஏறியிருந்து அவனது மீசையை ஒவ்வொரு மயிராகப் பிடுங்கியவர் அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம். இவர்கள் யார்? தமிழர்களின் தலைவர்களாக இருந்தவர்கள்.

இதுவும் வரலாறுதானே. எமது தலைவர்களின் வழியை நாங்களும் பின்பற்றத்தானா வேண்டும்? ஸ்ரீமான உயர் வேளாண்குல திலகர் சட்டத்தரணி கள்ளியூர் கனக நடராஜா அவர்களே! நீங்களும் இவர்களின் வழித்தோன்றல்தான் என்பதில் எள்ளளவும சந்தேகமில்லை.

சாதி ஒழியக்கூடாது என்பதில் உங்களுக்கு உள்ள ஆதங்கம் உங்களது கட்டுரையின் மூலமாகத் தெளிவாக விளங்குகிறது. சர்வசன வாக்குரிமை, இலவசக்கல்வி முறை போன்றவற்றால் சாதிக்கட்டமைப்புக் குலைந்து விட்டது என்று கவலைப்படுகிறீர்கள். தட்டானைப் பொற்கொல்லன் என அழைக்கலாம் என்கிறீர்கள். இது 'கண்டால் கட்டாடி காணாவிட்டால் வண்ணான்' என்பதுதான். உயர் சட்டத்தரணி அவர்களே! 'உதயன்' பத்திரிகைக்கோ மாநகர சபைக்கோ கடிதம் எழுதுவதால் பயனில்லை. ஜனாதிபதிக்கு மனுச்செய்யுங்கள் - வருணாச்சிரம தருமத்தை யாழ்ப்பாணத்தில் மீண்டும் அமுல் செய்யச் சொல்லி.

**ந.பரமேஸ்வரன்**

✦


## Fax Machines (Muratee)

### FOR SALE




மேற்குறிப்பிட்ட பக்ஸ் மெசின்கள் கையிருப்பில் உண்டு.

விலை 23,000/=

**S. J & B TRADE AGENCY**

எஸ். ஜே அன்ட் பி ரேட் ஏஜென்சி

39, 3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். T.P.2549

(89849)



## கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறை இறங்குதுறைப் பொறுப்பதிகாரி
திரு.இரா.சிவலிங்கம்
அவர்களின் பெறாமகனாகிய

**மயில்வாகனம் ஜெயக்குமார்**

(உடுப்பிட்டித் தொகுதி சுதந்திரக் கட்சி அமைப்பாளரும் சமாதான நீதிவானும்)

அவர்கள் அகால மரணமடைந்ததையிட்டு மனங்கலங்கி நிற்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள்,
இறங்குதுறை, பருத்தித்துறை.

(89853)


# 'வியட்கொங்' பாணியில்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பேற்று புலிகளின் மீதான தடையை நீக்குவதற்கு பல்வேறு பகுதிகளில் பொதுக்கூட்டங்கள், ஆய்வரங்குகள், சமாதான யாத்திரைகள் ஆகியவற்றை மேற்கொண்டு வருகின்றன. இந்த நாட்டு மக்கள் புலிகள் மீதான தடையை நீக்க விருப்பம் கொண்டுள்ளனர் என்னும் போலி மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்து வெளிநாடுகளுக்கு அனுப்பத் தயாராகி வருகின்றனர் எனத் தகவல்கள்தெரிவிக்கின்றன. புலிகள் மீதான தடை நீக்கப்பட்டால் அதன் மூலம் உண்மையான வெற்றி கிட்டப்போவது இந்தப் போலிச் சமாதானக் கொந்திராத்துக்காரர்களுக்கே ஆகும். அதாவது தேசியப் பாதுகாப்புக்கு எதிராகச் செயற்படும் துரோகிகளுக்காகும். இவ்வாறான நடவடிக்கைகளுக்காக அவர்களுக்கு டொலர் கணக்கான வெகுமதிகள் கிடைக்கும்.

இதற்கிடையில் எரிக் சொல்ஹெய்ம் என்னும் நோர்வே நாட்டவரின் செயற்பாடுகள் குறித்து தகவல்கள் வெளியாகியுள்ளன. சிறிலங்கா அரசின் அங்கீகாரத்தைப் பெறாமல் அமெரிக்கா சென்ற அவர் அமெரிக்க உதவி ராஜாங்கச் செயலாளர் றிச்சட் ஆம் டேஜ்யைச் சந்தித்து "சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்தத்தை ஏற்கவில்லை; சிறிலங்கா அரசு தொடர்ந்து யுத்தத்தை மேற்கொள்வதால் சமாதான முயற்சிகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது" எனத் தெரிவித்துள்ளார். இந்தக் கருத்தைப் புலிகளின் 'தமிழ்க் கார்டியன்' பத்திரிகையும் உறுதிப்படுத்தியுள்ளது.

சொல்ஹெய்முக்கு நற்சான்றுப் பத்திரம் வழங்கும் அளவிற்கு அந்தப் பத்திரிகையின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. ஜனாதிபதி சந்திரிகாவும் வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் பதவியில் இருக்கும் வரை எந்தவொரு சமாதானமும் கிட்டாது என அந்தப் பத்திரிகையில் வெளியான கடிதத்தின் பின்னணி என்ன? அதாவது அவர்கள் இருவரும் படுகொலை செய்யப்பட வேண்டும் என்பதே அதன் அர்த்தமாகும்.

பிரபாகரன் தனது நோக்கங்களை நிறைவேற்ற முற்படுகையில் முன்னாள் கிளர்ச்சிக்காரர்கள் (ஜே.வி.பி.) நாட்டில் அராஜகத்தை உருவாக்குவதற்காகத் தங்களது முக்கிய எதிரியாகப் பிரதம நீதியரசரை உருவகப்படுத்திப் பொதுமக்களைத் தவறான வழியில் இட்டுச் செல்கின்றனர்.இந்த முன்னாள் கிளர்ச்சிக்காரர்கள கண்ணெதிரே உள்ள ஆபத்தை மறந்து - தேசிய பாதுகாப்புக் குறித்து அக்கறை கொள்ளாது - அரசியல் வாதிகளை அழித்தொழிக்கும் மார்க்கத்தைப் பின்பற்றுகின்றனர். இத்தகைய நிலைமைகளையே பிரபாகரன் எதிர்நோக்கியவண்ணமுள்ளார். இந்த நாட்டில் நிலையற்ற தன்மையை உருவாக்க வெளிநாட்டு உளவாளிகளும் காத்திருக்கின்றனர். நோர்வே நாட்டு உளவாளிகள் இதில் முதலிடம் வகிக்கின்றார்கள். ★


### தையலுக்கு ஆள் தேவை

யாழ்நகரில் உள்ள நிறுவனம் ஒன்றுக்குத் தையலில் அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை. மாநகரசபை எல்லைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

விளம்பர இல.
1320,
மே/பா. உதயன்,
யாழ்ப்பாணம்.

(89850)


## விவசாயக் கிணறு அமைக்க மானிய உதவி

வலி.வடக்கு,ஜூலை8

யாழ்.மாவட்டத்தில் தேசிய இடர் முகாமை நிறுவனத்தால் எட்டு விவசாயக் கிணறுகள் அமைப்பதற்கு மானியம் வழங்கப்படவுள்ளது.

தலா 20 ஆயிரம் ரூபா வீதம் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள - சொந்தக் காணி உடைய - எட்டுப் பேருக்கு இத்தொகை வழங்கப்படவுள்ளது.

இது பற்றிய விவரங்கள் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

(ஐ-86)

## பொலீஸ் நிலையத்தை அகற்றக் கோரிக்கை

கொழும்பு,ஜூலை8

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி வீதியில் அமைந்துள்ள 'பி-2' பொலீஸ் காவல் நிலையத்தை அங்கிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அப்பகுதியின் இந்து ஆலயங்களின் சார்பில் அமைச்சருக்கு மகஜர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## கரும்புலிகள் நினைவாக பாலர் பாடசாலைகள்

மட்டக்களப்பு,ஜூலை8

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத மூதூர் கிழக்குப் பகுதியில் கரும்புலிகள் நினைவாக விடுதலைப் புலிகள் பாலர் பாடசாலைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடற்கரும்புலி மேஜர் ரூபன் நினைவாக சம்பூர் கிராமத்தில் முதலாவது பாலர் பாடசாலை திறந்து வைக்கப்பட்டது.

இதேபோல் வீரமாநகர் கிராமத்தில் கடற்கரும்புலி மேஜர் மதுஷாவின் பெயரில் மற்றொரு பாடசாலை திறந்து வைக்கப்பட்டிருக்கிறது,

(ஐ)


## கண்ணீர் அஞ்சலி

நெல்லண்டையைச் சேர்ந்த
**கணபதிப்பிள்ளை நடராசா** அவர்கள்
(ஓய்வு பெற்ற இலிகிதர்)

06-07-2001 அன்று கொழும்பில் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நெல்லண்டை
பருத்தித்துறை.
- நமிலாஸ் நிறுவனத்தினர்.

(89848)

## போக்குவரத்து ஒழுங்கைப் பேணும்

# பொலீஸ் உதவியாளர் சேவைக்கு யாழ். இளைஞர்கள் ஆள்சேர்ப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 8

வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சால் குடாநாட்டில் வீதிப்போக்குவரத்துகளை ஒழுங்குபடுத்துவதற்காக போக்குவரத்துக் கண்காணிப்பு பொலீஸ் உதவியாளர்களாக 25 இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இளைஞர்களுக்கான பயிற்சிகளை போக்குவரத்துக் கண்காணிப்புப்பொலீஸ் பிரிவு வழங்குகின்றது. இவர்களுக்கான 10 நாள் பயிற்சி வகுப்புகள் கடந்த வாரம் யாழ். பொலீஸ் நிலையத்தில் ஆரம்பமாகின.

ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். பொலீஸ் நிலைய பிரதம இன்ஸ்பெக்ரர் கொலுஹுரே கூறியதாவது.

யாழ். நகரில் பெரிய வாகன சாரதிகள் தொடக்கம், சைக்கிள் ஓட்டுநர்கள் வரை போக்குவரத்து விதிகள் தெரிந்திருந்தும் அவற்றை உதாசீனப்படுத்திவிட்டு தமது இஷ்டம் போல் செயல்படுகின்றனர். இதனால் நகரில் நெருக்கடி அதிகரிக்கின்றது. இந்தச் சூழ் நிலையை இல்லாமல் செய்யவே உங்களுக்குப் பயிற்சி வழங்கவுள்ளோம். இலங்கையில் வீதிப் போக்குவரத்து விதிகள் உள்ளன. இவற்றை உதாசீனப்படுத்தும் போது நகரில் விபத்துக்கள் அதிகரிக்கின்றன.

இந்த நிலைமைகளைக் கவனத்தில் எடுத்தே நாம் வீதிப் போக்குவரத்து விதிகளை அனுசரிக்காதவர்களுக்கு தண்டப்பணம் அறவிடுகின்றோம். அத்துடன் அவர்களுக்கு வீதி விதிகளையும் விளக்கமாக எடுத்துரைத்து வருகிறோம். இவற்றையெல்லாம் அவதானித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இன்று உங்களுக்கு பயிற்சியளித்து எம்முடன் இணைந்து எமக்கு உதவியாகக் கடமையாற்றுமாறு கூறியுள்ளார்.

10 நாள்கள் உங்களுக்கு வழங்கப்படும் பயிற்சியின் போது, பொலீஸாருக்கு வழங்கப்படும் தரங்கள், மற்றும் போக்குவரத்து விதிகள் தொடர்பான வகுப்புகளும், உடற்பயிற்சி, அணிவகுப்புப் பயிற்சிகளும் வழங்கப்படும்.

வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சால் உங்களுக்கான சீருடைகளும், சம்பளமும் வழங்கப்படும். பயிற்சி முடிந்ததும் போக்குவரத்துப் பொலீஸாருடன் இணைந்து நீங்கள் கடமையாற்ற வேண்டும்— என்று தெரிவித்தார்

கடந்த செவ்வாயன்று ஆரம்பமான பயிற்சிக்கு 15 இளைஞர்கள் சமுகமளித்திருந்தனர், மேலும் 10 பேர் இணைந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்தும் இந்தப் பிரிவுக்கு இளைஞர்கள் கட்டம் கட்டமாக இணைத்துக் கொள்ளப்படுவர் என்று ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை—

இந்தப் பயிற்சியைப் பெறும் இளைஞர்கள் இலங்கைப் பொலீஸ் சேவையில் இணைந்து கொள்ள முன்னுரிமை வழங்கப்படும் என்றும் பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டப் போக்குவரத்துப் பொலீஸ் உதவியாளர்களுக்குப் பொறுப்பாக கே. துசியந்தன் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (ஐ–6)

## விவாதத்தை நடத்தும் திகதியை தலைவர்கள் கூடித்தீர்மானிப்பர்

கொழும்பு, ஜூலை 8

நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் நடத்தப்படும் திகதி குறித்துத் தீர்மானிப்பதற்காக எதிர்வரும் 12 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் கூடவுள்ளனர்.

அதே சமயம், நேற்று முன்தினம் நாடாளுமன்ற வளாகத்தில் இடம் பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில், எதிர்வரும் 18, 19 ஆம் திகதிகளில் நாடாளுமன்ற அமர்வுகளை நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. எதிர்வரும் 17 ஆம் திகதி குடிசன மதிப்பீடு இடம்பெறவிருப்பதால் 18ஆம் திகதியே அமர்வை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதே வேளை, அடுத்த நாடாளுமன்ற அமர்வில் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எடுக்குமாறு சபாநாயகர் அநுரா பண்டாரநாயக்காவை எதிரணியிலுள்ள 115 எம்.பி.க்களும் இணைந்து கடித மூலம் கேட்டுக்கொள்ளவிருப்பதாக எதிரணிகள் தெரிவித்தன.

இது இவ்வாறிருக்க, பயங்கரவாதத் தடைச் சட்டம், பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரகடனப் படுத்தப்பட்ட அறிவிப்புகளுக்கு நாடாளுமன்ற அங்கீகாரம் தேவையென சட்டவல்லுநர்கள் கூறுகின்றனர். அவசரகாலச் சட்ட விதிகளுக்குப் போன்று மாதாந்தம் நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய அவசியமில்லாவிடினும் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டவற்றுக்கு நாடாளுமன்ற அங்கீகாரம் தேவையென்ற அபிப்பிராயத்தை இவர்கள் முன்வைத்துள்ளனர். (ஐ)

## நாட்டில் ஸ்திரமற்ற நிலை தோன்றும் என்கிறார் ஹக்கீம்!

கொழும்பு, ஜூலை 8

நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரத்தில் அரசாங்கமும், எதிர்க்கட்சிகளும் முரண்பட்டுக் கொண்டிருப்பதால் நாட்டில் ஸ்திரமற்றதொரு நிலை உருவாகக் கூடிய அபாயம் ஏற்பட்டிருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று கொண்டுவரப்பட்டால், அரசு அதிலிருந்து ஒதுங்கிவிடமுடியாது. அதற்கு முகங்கொடுத்தே ஆகவேண்டும்.

இதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமானால் அரசும், எதிர்க்கட்சியும் ஒரு கருத்தொருமைப்பாட்டுக்கு வரவேண்டும். தற்போதைய சூழ்நிலையில் அது சாத்தியமானதொன்றாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் விவாதத்துக்கு அரசு முகங் கொடுத்தே ஆகவேண்டும். பிரேரணை விவாதத்துக்கு வந்தபின்னர் அந்த நேரத்தில் நிலைமைகளை அவதானித்த பின்னரே முஸ்லிம காங்கிரஸின் முடிவு எவ்வாறாக அமையும் என்பதை அறிவிப்போம்.

அரசின் செயற்பாடுகள் மீது முழுநாடுமே இன்று அதிருப்தி கொண்டுள்ளது அராஜகத்தனமான போக்கையே அரசு முன்னெடுத்து வருகிறது. இதனைப் பார்க்கும்போது அரசு மிக விரைவில் வீழ்வது தவிர்க்கமுடியாததாகும்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸ் எத்தகைய முடிவை எடுக்கவேண்டுமென்பதைக் கட்சியின் நாடாளுமன்றக் குழு கூடித் தீர்மானிக்கும் என்றும் ரவூப் ஹக்கீம் கூறினார்.

அரசுடன் மீண்டும் இணைவது பற்றிய செய்திகள் குறித்து அவரிடம் கேட்டபோது—

''அரசுடன் மீண்டும் இணைவது என்ற பேச்சுக்கே இடமில்லை. முஸ்லிம் சமூகத்துக்குத் துரோகமிழைத்த, கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத அரசுடன் எத்தகைய உறவையும் முஸ்லிம் காங்கிரஸ் வைத்துக் கொள்ளாது'' என்று பதிலளித்தார். (ஐ)

## 120 பேருக்கு கண் பரிசோதனை

வலிகாமம் தெற்கு, ஜூலை 8

இளவாலை பங்குத்தந்தை அருட்திரு. அன்ரனி பாலா, அருட்திரு. கலாநிதி ஞானப்பிரகாசம் அடிகளார் ஆகியோரின் அனுசரணையுடன் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்பட்ட, விழி வெண்படலத்தால் பாதிப்புற்றோருக்கான இலவச கண் பரிசோதனை முகாமில் 120 பேர் கண்பரிசோதனை மேற்கொண்டனர்,

கண்பரிசோதனையை யாழ் போதனா வைத்தியசாலை கண் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி எஸ். குகதாசன் மேற்கொண்டார்.

பரிசோதனை முகாமுக்கான சகல ஏற்பாடுகளையும் லயன்ஸ் சேவைத் திட்டத் தலைவர் லயன் எஸ். எஸ். தங்கராஜா செய்திருந்தார்.

இளவாலை, மயிலங்கூடல், சித்திரமேழி, மாரிசன்கூடல், போயிட்டி, பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல் போன்ற இடங்களில் இருந்து பல வயோதிபர்களும், வறுமைக் கோட்டுக்குட்பட்டவர்களும் கண் பரிசோதனைகளுக்காக வருகை தந்திருந்தனர். (க–152)

## மீள்பதிவு

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ். மாவட்டத்தில் உள்ள 256 விவசாய சம்மேளனங்களையும் மீளப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை கமநல அபிவிருத்தித் திணைக்களம் விரைவில்மேற்கொள்ளவுள்ளது.

2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்துக்கு அமையவே இவை மீளப் பதிவு செய்யப்படவுள்ளதாக கமநல அபிவிருத்தித்திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்தார். (ஐ–16–9)

## முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர் வீடு மீது கிரனேட் வீச்சு

மட்டக்களப்பு, ஜூன் 8

மட்டக்களப்பு மாவட்டம் கல்முனையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் யூ. எம். சலீமின் வீட்டின் மீது கடந்த வியாழன் இரவு இனந்தெரியாத சிலர் கிரனேட் தாக்குதலை நடத்தினர்.

அதிர்ஷ்டவசமாக உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படாதபோதிலும் வீடு சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமது அரசியல் எதிரிகளே இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பு என்று அவர் தெரிவித்துள்ளார். (க–4)

# கிறிஸ்துவின் உயிர்ப்பும் விடுதலையும்

**ஞாயிறு நற்பிரசாதம்**

**அருட்சகோ. சா. ஜஸ்ரின்**

''கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றும் நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்''
(1 கொரி. 15:14).

மனிதன் வெறுமனே நிகழ்காலத்தில் வாழ்பவனல்லன். மாறாகக் கடந்த கால அனுபவங்களுடன் எதிர்காலத்தை தன் நோக்காகக் கொண்டு நிகழ்காலத்தில் வாழ்பவன் மனிதன். இவ்வாறு எதிர்கொள்ளப்போவதைத் தன் கண்முன் கொண்டு அதையே தன் வாழ்வின் மையமாக்கி அதையே அடைய முயற்சிக்கிறான் மனிதன். இந்த முயற்சியில் குறுக்கிடும் உடல், உள, ஆன்மீக, பொருளாதார கலாசார முட்டுக்கட்டைகளை, தடைகளை இனங்கண்டு அவற்றில் இருந்து விடுதலை பெற்று தனது இலக்கை நிச்சிதமாகப் பற்றிக் கொள்ள ஆசைப்படுகின்றான் மனிதன். அவன் தனது இருப்பைக் கேள்விக்குறியாக்கும் அனைத்துவிதமான கட்டுக்களையும் தகர்த்தெறிந்து முற்றிலும் விடுதலை பெற ஆசிக்கின்றான். இந்த விடுதலைக்கான ஆசையானது முழுப்பொருளாகிய முடிவற்றவராகிய இறைவனில் நிறைவைக் காணுகின்றது. மனிதன் என்றும் எங்கும் தேடி அலையும் இந்த முழு மனித விடுதலைக்கு ஊற்றும், உறைவிடமும் இறைவன் ஒருவரே. இவர்தான் கிறிஸ்து இயேசுவாக மனுவுரு எடுத்து மனுக்குலம் அனைத்துக்காகவும், அதன் முழு மனித விடுதலைக்காகவும் பாடுகள் பல பட்டு, இறந்து, இறுதியில் உயிர்தெழுந்தவர். இவரில் தான் மனிதன் தேடி அலையும் முழுமனித விடுதலையைக்காண முடியும் என்பதை, எவராலும் மறுக்க முடியாது.

உயிர்ப்பு என்பது அனைவரும் விரும்பும் ஒன்று. உயிர்ப்பை நாட அனைவருக்கும் பெரும்பாலும் விருப்பம் உண்டு. இந்த உயிர்ப்பு அனைவருடைய வாழ்விலும் உயரியதொரு குறிக்கோளாகவும் அமைந்துள்ளது என்று குறிப்பிடத்தக்கது. கிறிஸ்தவர்களாகிய எம்முடைய வாழ்வில் இது கிறிஸ்துவுடைய உயிர்ப்பில் பொருள் பெறுகின்றது. ஏனெனில் கிறிஸ்துவுடைய உயிர்த்தெழுதலானது சாவின் பிடியிலிருந்து விடுதலை கொடுக்கும் ஒரு விடுதலை மட்டுமன்றி முழுமனித விடுதலைக்குமான ஓர் உயிர்த்தெழுதல் ஆகும்.

இவ்வுயிர்ப்பானது ஒரு முழுமையான முழு மனித உருமாற்றம். உடலும் ஆன்மீகமும் கொண்ட ஓர் உருமாற்றம். இதையே புனித பவுல் 1 கொரி. 15:35–53 வரையான வாக்கியங்களில் சுட்டிக் காட்டுகிறார். இந்த உயிர்த்தெழுதலானது எம்மை ஒரு வகையான வெறுமைக்கு இட்டுச் செல்ல வேண்டும். எமது சுயநலன்கள், ஆசாபாசங்கள், தீயசெயல்கள், தீயஎண்ணங்கள் என்பவற்றிலிருந்து வெறுமையடைய எம்மை இட்டுச் செல்கிறது. அப்போதுதான் கிறிஸ்துவின் உயிர்ப்பு எம் வாழ்விற்கு புது அர்த்தம் கொடுத்து, முழு மனித விடுதலைக்கு எம்மைத் தகுதியுடையவர்களாக்க முடியும். நாம் ஓர் உள்ளார்ந்த உயிர்ப்பை அனுபவிக்கும் கிறிஸ்தவர்களாக இருப்போம். இந்த உள்ளார்ந்த உயிர்ப்புத்தான் எம் உள்ளங்களில் என்றும் இழையோட வேண்டும். இது கிறிஸ்துவின் உயிர்ப்பில் பிரதிபலிப்பதையும் நாம் காண முடிகின்றது. திருவிவிலியத்தில் இறைவன் தம் மகன் இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பி எமக்காகப் பாடுகள் பல படவைத்து சிலுவையில் உயிர் துறக்க வைத்தது எல்லாம் இந்த உள்ளார்ந்த உயிர்ப்பை அனைவரும் பெற வேண்டும் என்பதற்காகவே என்பது புலனாகின்றது. அதுமட்டுமன்றி கிறிஸ்து இயேசுவின் உயிர்ப்பின் ஊடாக அவரில் விசுவாசம் கொள்ளும் அனைவருக்கும் உயிர்ப்பு உண்டு என்றும் திருவிவிலியம் சான்று பகர்கின்றது. ''ஆனால் இப்போதோ, இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார். அவரே முதலில் உயிருடன் எழுப்பப்பட்டார். இது அனைவரும் உயிருடன் எழுப்பப்படுவர் என்பதை உறுதிப்படுத்துகின்றது'' (1 கொரி. 15:20).

கிறிஸ்துவின் உயிர்ப்பினால் சாவு, பகைமை, பாவம் போன்ற அனைத்துத் தீமைகளும் தவிடு பொடியாக்கப்பட்டன. அத்துடன் இறைவனின் அன்பு எத்தகையது என்பதும் தெளிவாக்கப்பட்டது. இந்த அன்பு கிறிஸ்து வடிவில் இவ்வுலக மாந்தர் அனைவரையும் முழு மனித உள்ளார்ந்த விடுதலைக்கு அழைத்தது. இந்த விடுதலை தான் கிறிஸ்து மூலம் அவரது உயிர்ப்பு வழியாக எமக்குத் தரப்பட்டது. ஆகவே அவரில் விசுவாசம் கொள்ளும் அனைவரும் இறுதி நாளில் உயிர்ப்பிக்கப்படுவர். இதுவே எமது நம்பிக்கை. நாம் இவ்வாறு நம்பிக்கை கொண்டால் தொடர்ந்தும் சாவின் பிடியிலும், எம்மை உள்ளார்ந்த உயிர்ப்புக்குத் தடைசெய்யும் இருளின் செயல்களிலும் தொடர்ந்தும் வாழ்ந்து கொண்டிருக்க முடியாது. ஏனெனில் சாவு எம்மை ஆட்கொள்ள முடியாது. ''நீங்கள் எல்லோரும் ஒளியைச் சார்ந்தவர்கள் பகலில் நடப்பவர்கள். நாம் இரவையோ இருளையோ சார்ந்தோரல்லர்''. (1 தெச. 5:5) ஆகவே இருளில் இருந்து ஒளிக்கு விடுதலை பெற நாம் உழைக்க வேண்டும். இதுவே உள்ளார்ந்த உயிர்ப்பு.

★

(நன்றி: பாதுகாவலன்)

# தமிழ் மக்களின் பிரச்சினை மீது தீவிர அக்கறை செலுத்துகிறோம்!

## அமலமரித் தியாகிகளின் தலைவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஜூலை8

கத்தோலிக்கத் திருச்சபை என்ற வகையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நாம் என்ன செய்ய முடியும் என்பது தொடர்பாகச் சிந்தித்து வருகின்றோம். எங்களிடம் ஆயுத பலம் இல்லை. ஆனால் றோமாபுரியில் மனித உரிமைகளுக்கான தலைமையகத்தை உருவாக்கியுள்ளோம். ஐக்கிய நாடுகள் சபையிலும் மனித உரிமைகள் அவதானிப்பு ஸ்தாபனத்தை ஆரம்பிப்பது தொடர்பாகவும் சிந்தித்து வருகிறோம். இவற்றின் மூலம் இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண எம்மாலான உதவிகளை சகல வழிகளிலும் மேற்கொண்டு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முயற்சி எடுப்போம்.

யாழ்ப்பாணம் வந்துள்ள அமலமரித் தியாகிகளின் உலகத் தலைவர் பேரருட்திரு.வில்ஹெய்ம் ஸ்ரெக்ளிங் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் யாழ்.ஆயர் இல்லத்தில் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான ஆணைக் குழுப் பிரதிநிதிகளைச சந்தித்து உரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களுக்கு எதிராக நாட்டில் நடைபெற்றுவரும் யுத்தத்தால் மக்கள் அனைவரும் சிதறடிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் இங்கு வாழும் தமிழர்களுக்கும், அவர்களுககுச் சேவையாற்றிக் கொண்டிருக்கும் தலைவர்களுக்கும் நான் பாராட்டுத் தெரிவிக்கின்றேன். வெளியிடங்களுக்குச் செல்லக்கூடிய சூழ்நிலை இருந்தும் நீங்கள் மக்களுடன் இருந்து அவர்களுக்காக சேவையாற்றுவது எனக்கு மன மகிழ்வைத்தருகிறது. மதங்களுக்கு அப்பால் நீங்கள் ஒற்றுமையுடன் செய்யப்படுவது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

இங்கு தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்டுவந்த பல அநீதிகளையும் மனித உரிமை மீறல்களையும் வரலாற்று ரீதியில் குறிப்பிட்டீர்கள். அவற்றில் மிக முக்கியமானது மொழியும் கலாசாரமும் ஆகும்.

இந்தப்பிரச்சினை பல்வேறு நாடுகளிலும் அவதானிக்கப்பட்டுள்ளது. கனடாவின் கியூபெக்கில் பிரெஞ்சு மொழியும், கலாசாரமும் உணர்ச்சி பூர்வமாகப் போற்றப்பட்டு வருகின்றன. அங்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு ஜனநாயக வழியில்தான் தீர்வுகள் காணப்படுகின்றன.

மற்றைய பிரச்சினை கல்வி வாய்ப்பில் இளைஞர், யுவதிகளுக்கு நீதியான முறையில் சம வாய்ப்புகள் வழங்கப்படாத நிலைமையாகும். இதனால் விரக்தி அடைந்த இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவதற்குத் தூண்டப்படுகின்றனர்.

இதே போன்று உலகில் பலநாடுகளிலும் பிரச்சினைகள் வெடித்துள்ளன. மெக்சிக்கோவிலும் இந்தப் பிரசசினை உள்ளது.

இன ரீதியிலும் இங்கு மக்களுக்கு அநீதிகள் இழைக்கப்பட்டு வருகின்றன. தென்னாபிரிக்காவில் இன ரீதியில் மக்கள் அடக்கப்பட்டதைப் போன்றே இங்கும் தமிழ் மக்கள் இன ரீதியில் பாகுபடுத்தப்பட்டு அடக்கப்படுவதைக காணக்கூடியதாக உள்ளது.

ரஷ்யா, ஜேர்மன் போன்ற நாடுகளில் இன ஒழிப்பு நடவடிக்கைகள் பல நிகழ்ந்த வரலாறுகள் உள்ளன. ஆனால் இன்றைய காலகட்டத்தில் அதற்கு அங்கு சந்தர்ப்பமே இல்லை.

அரசியல் தலைவர்களுடன் தொடர்பு கொள்வதற்காக அமெரிக்காவில் எமது சபையின் தொடர்பகம் ஒன்று உள்ளது. உங்களின் பிரச்சினைகளை - மனித உரிமை மீறல்களை - அவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

திருச்சபைப் பிரதிநிதி என்ற வகையில் உங்களின் பிரச்சினைகளுக்கு எந்த வழிகளில் உதவி செய்யமுடியுமோ அந்த வகையில் உதவி செய்வேன் என்று - அவர் தெரிவித்தார்.

சமாதானத்துக்கும் நல்லெண்ணதத்துக்குமான மக்கள் குழுவின் தலைவர் டி.ஆர்.அருமைநாயகம் தனது உரையில் -

எமது மாணவர்கள் எதிர்வரும் ஓகஸ்டிலும், டிசெம்பரிலும் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்குத் தயாராகி வருகின்றனர். ஆனால் அவர்களுக்கு இன்றுவரை அரசாங்கத்தால் வழங்கப்படும் இலவச பாடநூல்கள் எவையும் ஒழுங்காக வழங்கப்படவில்லை. இந்நிலைமையில்தான் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் பரீட்சைக்கு முகம் கொடுக்கவுள்ளனர். கொழும்பு பத்திரிகை ஒன்றில் யாழ்ப்பாண மக்களுக்கு 24 மணிநேர மின் விநியோகம் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் எமக்கு இங்கு தினந்தோறும் 4மணி நேரமே சீராக மின் விநியோகிக்கப்படுகிறது. இப்படி இங்கு வாழும் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலேயே வாழ்ந்து வருகிறார்கள் - என்றார்.

அருட்தந்தை ஏ.ஐ.பேர்னாட் உரையாற்றும் போது -

பாதுகாப்புப் படையினர் பல்வேறு பகுதிகளிலும் தமிழ்ப் பெண்கள் மீது கோரத்தனமாக நிகழ்த்திய பாலியல வல்லுறவுச் சம்பவங்களைக் கண்டித்து நேற்று குடாநாட்டில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவதற்கு அடிப்படைக்காரணமாக அமைந்தது பல்கலைக்கழக அனுமதி விடயத்தில் சிங்கள அரசாங்கம் காட்டிய பாரபட்சமேயாகும்.

இப்படி பல்வேறு வகையிலும் தமிழ் மக்கள் மீது சிங்கள அரசுகள் காலம் காலமாக மேற்கொண்டு வந்த மனித உரிமைமீறல் சம்பவங்களாலேயே இன்று தமிழ் இளைஞர்கள் தமது உரிமைகளை மீளப்பெறுவதற்காக ஆயுதம் ஏந்திப் போராடி வருகின்றனர் - என்று தெரிவித்தார்.

### தனிச்சிங்களச் சட்டம்

ஓய்வு பெற்ற அரசாங்க அதிபர் எஸ்.செபநாயகம் உரையாற்றும் போது கூறியதாவது:-

1956இல் தனிச் சிங்களச் சட்டம் அமுலாக்கப்பட்டது. இதனால் கொழும்பில் இருந்த தமிழ் ஊழியர்கள் எல்லோரும் ஒரே இரவில் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்தனர்.

அன்றில் இருந்தே தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகளும் சண்டைகளும் ஆரம்பமாகிவிட்டன.

கட்டம் கட்டமாக சிங்கள அரசாங்கங்கள் தமிழர்களின் உரிமைகளைப பறித்து வந்தன. இவற்றையெல்லாம் அவதானித்து வந்த தமிழ் இளைஞர்கள் இறுதியில் தமது உரிமைகளை மீளப் பெறுவதற்காக ஆயுதம் ஏந்திப் போராட ஆரம்பித்தனர்.

### புலிகள் சமாதானத்தில் ஈடுபாடு

இது அவர்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்காக நடத்துகின்ற யுத்தம். விடுதலைப் புலிகள் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதில் அக்கறையுடனேயே இருக்கின்றனர்.

கடந்த வருடம் டிசம்பர் 24ஆம் திகதியில் இருந்து 4மாதம் அவர்கள் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்த போதிலும் அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க முன்வரவில்லை.

வடக்கு - கிழக்கில் பொதுமக்கள் படும் அவலங்களை துன்ப துயரங்களை - யுத்தத்தின் அழிவுகளை நேரில் பார்வையிட நீங்கள் விரும்பினால் குடாநாட்டை சிறிது சுற்றிப் பார்க்க வேண்டும். என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அருட்தந்தை ஈ.செல்வராஜா உரையாற்றும் போது-

1996ஆம் ஆண்டில் படையினரால் பல்வேறு பகுதிகளிலும் சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்பட்ட 600 இளைஞர், யுவதிகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பாக படையினரிடம் கேட்டபோது தமக்கு எதுவும் தெரியாது என்று கூறிவிட்டார்கள்.

யாழ். மக்களின் போக்குவரத்தில பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. கொழும்புக்கு பொதுமக்கள் செல்வதானால் பல்வேறு பிரச்சினைகளை, நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர். தமிழர்கள்படும் துயரங்கள் நாளுக்கு நாள் அதிகரித்தே செல்கின்றன என்று அவர் தெரிவித்தார். (ஐ-6-4)


அறிவித்தல்

தயவு செய்து கவனிக்கவும் ஜப்பானைச் சேர்ந்த Nippon Antenna Company, Nippon America Boosterகளைத் தயாரிப்பதில்லை.
KOBE Antenna Boosterகளைத் தயாரிக்கும் SHOWA Company Limited ம் நிப்போன்அமெரிக்கா பூஸ்டர்களைத் தயாரிப்பதில்லை.

KOBE Booster பெட்டிகளில் வரும் இந்தப் போலி பூஸ்டர்களுக்கு நாம் எந்த பொறுப்பையும் ஏற்கமுடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

3 வருட உத்தரவாதம் (ட்ரான்ஸ்போமரைத் தவிர்த்து)

அசல் முதல் தர விற்பனைச் சாதனை கொண்ட

கோபே அன்டெனா பூஸ்டர்

என்று கேட்டு வாங்குங்கள்

LANKA NIPPON
No.18, Keyzer St, Colombo-11.Tel:437735.
No.10, Trelawny Place, (Behind Milk Bar), BambalapitiyaJunc,Colombo-04.Tel:589992.
AVAILABLE ISLAND WIDE


## நாட்டில் மீண்டும் 'டெங்கு' காய்ச்சல்

கொழும்பு.ஜூலை8

கொழும்பு உட்பட நாட்டின் முக்கிய பிரதேசங்கள் பலவற்றில் 'டெங்கு' காய்ச்சல் மீளத் தலைதூக்கியுள்ளதால் அதனைக் கட்டுப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு மருத்தவ நிபுணர்கள் அரசிடம் கேட்டிருக்கின்றனர்.

கொழும்பிலும் அதன் சுற்றுப் பிரதேசங்களிலும் 'டெங்கு'காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகின்றது.

இந்நிலைமை தொடரும் பட்சத்தில் நாட்டில் மோசமான நிலை உருவாகும் என்று அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ஐ)



நேற்று முன்தினம் ஹர்த்தாலால் வெறிச்சோடிய நிலையில் திருகோணமலை நகரம்.


உ

ஓம் விராட் விஷ்வப் பிரம்மனே நமஹ

சபிண்டிகரணக் கிரியை அழைப்பு

தோற்றம் 1992 - 12 - 07



மறைவு 2001 - 04 - 09

செல்வன் த.கார்த்தீபன்

பாடுங்குயில் ஒன்று பாட மறந்ததுவோ?
ஆடும் மயிலொன்று அசையாது நின்றதுவோ?
வீடும் இருண்டதுவோ வித்தகன் கார்த்தீபன்
மண்ணகன்ற சேதி கேட்டு வானும் இருண்டதம்மா!
சீரிய நற்றிருநாளில் சீருடன் அலங்கரிக்க
ஆர்வமாய் அப்பாவுடன் அமைதியாய்ச் சென்ற மலர்
பூர்வ ஜென்மப் பலனதுவோ கண்மூடித்திறக்குமுன்
கர்மவிதி தீண்டியதோ? கதியிழந்து போனதுவோ?
கூடிக்குலவியவுன் பள்ளிநண்பர் தேடிடவே
வாடிவருந்தும் அன்னை கருவறையும் வாடிடவே
ஈடிலா எழிழரசை இழந்த தந்தை கலங்கிடவே
ஓடி மறைந்தவொரு ஒப்பிலா ஓவியமே!
ஆசையுடன் கீதமிசை வீணையொன்று புவிமீது
ஓசையின்றிப் போனதுவோ? ஒளியிழந்து மங்கியதோ?
பாசமுறு நெஞ்சங்கள் பரிதவிக்க வைத்ததுவோ?
வாசமலர் வாடியதோ? வண்ணமுகம் கூம்பியதோ?

அகால மரணமடைந்த எமது புத்திரனின் 90ஆம் நாள் சபிண்டிகரணக் கிரியைகள் இன்று(08-07-2001) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம் பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சந்தை வீதி,
இளையாணன்,
உடுப்பிட்டி.

(89842)

அ.தவேந்திரன் (அப்பா),
கமலேஸ்வரி (அம்மா),
சகோதரர்கள்.



மரண அறிவித்தல்

பெரியதம்பி கணபதிப்பிள்ளை

கைதடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி கணபதிப்பிள்ளை (முன்னாள் வர்த்தகர், கைதடி) நேற்று (07.07.2001) சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி தம்பதியரின் அன்பு மகனும், கொல்லன்கலட்டியைச் சேர்ந்த திரு.திருமதி கதிரிப்பிள்ளையின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், ஸ்ரீ சிவஈஸ்வரி (சுவிஸ்), ஸ்ரீ சிவஞானேஸ்வரி (சுவிஸ்), ஸ்ரீ சிவசக்திஈஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவராஜாராஜா (சுவிஸ்), சண்முகராஜா (சுவிஸ்), மகேந்திரன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், சாஜின் (சுவிஸ்), வாகீசன் (சுவிஸ்), வாசகன் (சுவிஸ்), சாமினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2001) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பி.ப.2.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கல்கிசை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8/16, 1/2, சொய்சாபுர,
மொறட்டுவ.

(C/17329)

தகவல்:
S.மகேந்திரன்
(மருமகன்)

## நினைவஞ்சலி கூட்டம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் அ.அமிர்தலிங்கத்தினதும் முன்னாள் யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் வெ. யோகேஸ்வரனதும் 12 ஆவது ஆண்டு நினைவு தினம் எதிர்வரும் 13 ஆம் திகதி நினைவு கூரப்படவுள்ளது.

இதனையொட்டி 13 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.தலைமைச் செயலகத்தின் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெறவுள்ளதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாநகரசபை உறுப்பினர் செ. விஜயரட்ணம் தெரிவித்துள்ளார்.(ம-6)

## நாளை அடையாள அணி வகுப்பு

கொழும்பு.ஜூலை8

மருதானைச் சோதனை நிலையத்தில் மலையகத் தமிழ் பெண் மீதான பாலியல் வல்லுறவுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் ஆறு சந்தேகநபர்களின் அடையாள அணிவகுப்பு நாளை திங்கட்கிழமை நடைபெறும்.

சந்தேக நபர்களில் மூன்று பொலீஸாரும், மூன்று படையினரும் அடங்கியுள்ளனர்.

திங்கட்கிழமை வரை இவர்கள் 6 பேருக்கும் விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

(ம)

## இதய அஞ்சலி

இலங்கை மின்சார சபை, சுன்னாகம் மத்திய மின் நிலையப் பணியாளர்கள் திரு.ந.நாகேந்திரம் அவர்களின் பாசமிகு துணைவியாரும் திரு.செ.பகீரதனின் அன்புச் சகோதரியுமான

**திருமதி நாகேந்திரம் பத்மலோஜினி**

அவர்களின் மறைவினால் வேதனை அடையும் கணவர், பிள்ளைகள், சகோதரர் யாவர்க்கும் எமது இதயபூர்வமான அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

*மத்திய மின் நிலையம், சுன்னாகம்.* (89862)

**மின் பொறியியலாளர், அதிகாரிகள், அலுவலர், பணியாளர்கள்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில் 05 - 01 - 1950



ஆண்டவன் அடியில் 08 - 06 - 2001

### அமரர் சின்னத்தம்பி கனகசபை

**அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த எமது அன்புத் தெய்வமே!**
**உங்கள் நினைவு எம் நெஞ்சைவிட்டு என்றும் அகலாது!**
**சிரிப்பான பேச்சும் புன்முறுவல் பூத்த முகமும் இனி எங்கே?**
**ஆண்டவன் திருப்பாதத்தில் சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.**

அன்னாரின் அந்தியேட்டி ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று (08-07-2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இவற்றில் கலந்து மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
**மனைவி, மக்கள்.**

*புத்தூர் வடக்கு.* (89857)

# கிளிநொச்சியில் அடுத்த ஜனவரி முதல் தொழில்நுட்பக் கல்லூரி இயங்கும்

யாழ்ப்பாணம்,ஜூலை8

கிளிநொச்சி மாவட்டத்தில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் தொழில்நுட்பக் கல்லூரி ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான அனுமதியை தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஜி.பிறேமசிறி வழங்கியுள்ளார்.

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் வடக்கு-கிழக்கு மாகாண பிரதிப் பிராந்தியப் பணிப்பாளர் என்.யோகராஜன் நேற்று செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :-

வன்னிப் பகுதியில் ஜி.சி.ஈ சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் தோற்றிய பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தமது பாடசாலைக் கல்வியின் பின்பு வேறு துறைகளில், பயிற்சி நெறிகளில் ஈடுபடுவதற்கான போதிய வாய்ப்புகள் இல்லை. இதனால் அந்த மாணவர்களின் நலன் கருதி தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று கிளிநொச்சி மாவட்டத்தில் நிறுவப்படவேண்டும் என்று பணிப்பாளர் நாயகத்திடம் கேட்டுக் கொண்டபோது அவர் இந்த அனுமதியைத் தந்தார். இதற்காக அவரை நாங்கள் பாராட்ட வேண்டும்.

உடனடியாகத் தொழில்நுட்பக் கல்லூரிக்கென அங்கு கட்டடம் ஒன்றை அமைக்க முடியாமையால் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருடன் தொடர்புகொண்டு கட்டடம் ஒன்றைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யுமாறும் அதற்குரிய ஆளணியை யாழ்ப்பாணத்தில் இருந்து அனுப்பி வைக்குமாறும் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விரைவில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைக்கவுள்ளேன். கட்டடம் கிடைத்ததும் தொழில்நுட்பக் கல்லூரியை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க வேலைகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

கல்லூரியை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு இங்கிருந்து சில உத்தியோகத்தர்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளனர். அந்த உத்தியோகத்தர்கள் வன்னிப் பகுதி மாணவர்களின் நலன் கருதி சேவை மனப்பான்மையுடன் அங்கு பணியாற்ற வேண்டும். இலங்கையின் ஒவ்வொரு பகுதியும் சகலதுறைகளிலும் இன்று முன்னேறிச் செல்கின்றன. அங்கெல்லாம் எவ்வளவோ வசதி வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால் எமது பிரதேசத்தில் ஒரு பகுதியில் மாணவர் முன்னேற வேண்டும். அவர்களின் திறமையும் வெளிப்பட வேண்டும். அவர்களும் பல பயிற்சிநெறிகளைக் கற்கவேண்டும். இதற்காக முழுமனதுடன் அங்கு சென்று பணியாற்ற எல்லோரும் தயாராக இருக்கவேண்டும்.

மாணவர்களுக்குப் பயிற்சி நெறிகளைக் கற்பிப்பதற்குரிய வருகை விரிவுரையாளர்கள் வன்னிப் பகுதியிலேயே அமர்த்தப்படுவார்கள். இதன்மூலம் அங்குள்ள கல்வியியலாளர்களின் திறமைகளும் வெளிக்கொணரப்படும். அத்துடன் தொழில்நுட்பவியலாளர் தரப் பரீட்சையை வன்னிப் பகுதியில் நடத்துவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது பற்றி தேசிய தொழில்பயிற்சி அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு கேட்டதையடுத்து அவர் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார். இந்த வருட இறுதியில் பரீட்சை நடைபெறும். இதற்கான விண்ணப்பப் படிவங்கள் விரைவில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. பரீட்சையில் தோற்றவுள்ளோர் பரீட்சைக் கட்டணத்தை அங்கு செலுத்தி விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைக்கான ஏற்பாடுகளை அரசாங்க அதிபருடன் இணைந்து மேற்கொள்ளுமாறு எனக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. பரீட்சை நடத்துவதற்கு கொழும்பிலிருந்து 5 பேர் கொண்ட குழுவொன்று அங்கு செல்லும்.

மோட்டார் எந்திரவியல், மின்னியலாளர், மரவேலை, குழாய்பொருத்துநர், மேசன் ஆகிய பயிற்சி நெறிகளுக்கே அங்கு பரீட்சை நடத்தப்படவுள்ளது. மேற்படித் துறைகளில் ஒரு வருட அனுபவம் இருத்தல் வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ஐ-10)

## நல்லூர் லயன்ஸ் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு

யாழ்ப்பாணம்,ஜூலை8

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் - வி.மாணிக்கம் தலைமையிலான - புதிய நிர்வாகிகள் பதவியேற்கும் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் உள்ள யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்க அரங்கத்தில் நடைபெறும். (உ)


**ராஜா** யாழ்ப்பாணம்

3ஆவது வெற்றி வாரமாக
9வேடங்களில் நடித்த
அஜித்,
வசுந்துராதாஸ், நக்மா, மீனா
மற்றும் டாலர் நடிப்பில்

CITIZEN சிட்டிசன்

தினசரி 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00(பு.நே.)

(C/17286)

**நாகம்ஸ்** சுன்னாகம்

சுப்பர்ஸ்ரார் விஜயசாந்தி,
சரத்குமார், வெங்கடேஸ்
நடித்த
முதலமைச்சர் ஜெயந்தி
(ரீல்ஸ் வெளியீடு)
தினசரி: 11.00, 2.30(புதிய நேரம்)
சனி, ஞாயிறுகளில் 6.30 காட்சியும் உண்டு
11.07.2001 முதல்
மாயி

(89843)


## மரண அறிவித்தல்கள்

### மாசில் தியாகராசா (அத்தார்)

நாரந்தனை தெற்கைப் பிறப்பிடமாகவும், யாழ். கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அத்தார் எனச் செல்லமாக அழைக்கப்படும் மாசில் தியாகராசா அவர்கள் நேற்று (07-07-2001) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மதிலேனா தம்பதிகளின் அன்பு மகனும் பொன்னு தம்பிராசா - நேசமணி மாசில் தம்பதிகளின் அன்பு மருமகனும், ஐறின் அஞ்சலாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தவராசா, செல்வம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், விமலராஜா (சுகந்தன்), விஜயராஜா (சிக்கு), அமலராணி(சுரேகா), நிந்தியராணி(யசோ) ஆகியோரின் பாசமிகு தந்தையும் டொமினிக்(பழக்கடை, சில்லறைக்கடை), காலஞ்சென்ற புஸ்பராஜா, பிறேமராஜா, ஜீவராஜா, (ஜீவா, ஜீவா பேக்கறி, புதுவீதி, கொய்யாத்தோட்டம்), டெய்சி, லவிநா, மல்லிகா, சகிலா, நிர்மலா ஆகியோரின் அன்பு மைத்துனரும், யமுனாராணி, சுதர்ஷினி, கருணாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுகன்ஜாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(08-07-2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு (புதிய நேரம்) நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*531, புது வீதி,*
*கொய்யாத்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.* (89863)

தகவல்:-
ஐறின் அஞ்சலா
(மனைவி)
ஜீவா (மைத்துனர்)

### விநாசித்தம்பி மாணிக்கம்

(உரிமையாளர், பிள்ளையார் களஞ்சியம்)

விடத்தற்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி மாணிக்கம் அவர்கள் நேற்று (07.07.2001) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திலகவதியின் அன்புக் கணவரும் பரமேஸ்வரனின் (பிள்ளையார் களஞ்சியம்) அருமைத் தந்தையும் தெய்வநிதியின் அன்பு மாமனாரும் பிரதீசன், பிரசன்னா, பிரியங்கன் ஆகியோரின் அன்புப் பேரனும் சின்னம்மாவின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றும் பூதவுடல் விடத்தற்பளை கம்பாவெளி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விடத்தற்பளை,*
*மிருசுவில்.* (89860)

தகவல்:
பா.பரமேஸ்வரன
(மகன்)

### நாகேந்திரம் ஞானேந்திரன்

(இளைப்பாறிய இயன் மருத்துவர், யாழ். 'போதனா வைத்தியசாலை')

மானிப்பாயைச் சேர்ந்த நாகேந்திரம் ஞானேந்திரன் நேற்று (07.07.2001) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், தாட்சாயினி (ராதா - ஆங்கிலநெறி முதலாம் வருட மாணவி, பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை) அவர்களின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (08.07.2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காகப் பிட்டிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*புளியடிச் சந்தை ஒழுங்கை,*
*மானிப்பாய் தெற்கு,*
*மானிப்பாய்.* (89861)

தகவல்:
மனைவி, மகள்.

## புதுமணத் தம்பதிகளை வாழ்த்தி நிற்கின்றோம்

நிகழும் ஆனித்திங்கள் 23ஆம் நாள் நேற்று(07.07.2001) சனிக்கிழமை மணற்காட்டு முருகன் திருவருள் துணைபெற்று தம்பதிகளாக (ஜேர்மனி) இணைந்துகொண்ட

திரு. திருமதி திருநாவுக்கரசு தம்பதிகளின் புத்திரன்
**அகிலேஸ்வரன்**
(அகிலன்)
அவர்களையும்



திரு.திருமதி சண்முகராஜா (காந்தி) தம்பதிகளின் புத்திரி
**பிறேமரஞ்சினி**
(சித்திரா)
அவர்களையும்

சகல சௌபாக்கியங்களும் குறைவறப் பெற்று, சிறப்புற்று வாழ எல்லாம் வல்ல பரம்பொருளின் இன்னருளை வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

தகவல்:
**ச.சண்முகராஜா (காந்தி - தகப்பன்)**
*பாதுகாப்பு சார்ஜன்ட்,*
*சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை.*

**திரு.திருமதி சண்முகராஜா குடும்பத்தினர்**
*தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.*
தற்காலிக முகவரி:
*ஒஸ்கா வீதி, உரும்பிராய் தெற்கு.* (C/17333)

# 'ராகிங்' தடை செய்யப்பட்டுள்ளதாக பல்கலை. மாணவர் ஒன்றியம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை8

யாழ்.பல்கலைக்கழக புகுமுக மாணவர்கள் மீது சிரேஷ்ட மாணவர்கள் 'ராகிங்' செய்வது தடைசெய்யப்பட்டுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

பகிடிவதை என்ற பெயரில் சிரேஷ்ட மாணவர்கள் புகுமுக மாணவர்களைத் தமது அறைகளுக்கு அழைத்துச் செல்வதும், பொது இடங்களில் தடுத்துவைத்து 'ராகிங்' செய்வதும் தண்டனைக்குரிய குற்றங்களாகக் கருதப்பட்டு நிர்வாகம் நடவடிக்கை எடுக்கும் போது அதற்கு எமது ஒன்றியம் ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், அனைத்துப் பீட மாணவர்களுக்கும், பீடாதிபதிகளுக்கும், துணைவேந்தருக்கும் அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளதுடன் மாணவர்களின் கவனத்துக்காக அந்த அறிக்கையை யாழ்.பல்கலைக்கழகத்தில் உள்ள விளம்பரப் பலகைகளிலும் ஒட்டியுள்ளது.

பல்கலைக்கழகங்களுக்குப் புகுமுக மாணவர்கள் தெரிவு செய்யப்படும் இந்தக் காலப்பகுதியில் மாணவர் ஒன்றியத்தால் வெளியிடப்பட்டிருக்கும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எதிர்வரும் காலங்களில் புதிதாக அனுமதி பெற்று யாழ்.பல்கலைக்கழகத்திற்கு கல்வி கற்க வரும் மாணவர்கள் மீது பகிடி வதைசெய்யும் சிரேஷ்ட மாணவர்கள் மீது கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதென யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய நிர்வாகக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அந்தத் தீர்மானத்தின் பிரகாரம்-

★ புகுமுக மாணவர்களை அறைகளுக்கு அழைத்துச் சென்று பகிடிவதை செய்தல்.

★ பல்கலைக்கழக வளாகத்தினுள் மாணவ, மாணவிகளை ஆங்காங்கே தடுத்துவைத்துப் பகிடிவதை செய்தல்.

★ பல்கலைக்கழகத்திற்கு வெளியிலும், பொது இடங்களிலும் புகுமுக மாணவர்களைத் தடுத்து வைத்துப் பகிடிவதை செய்தல்.

- என்பன போன்ற சம்பவங்களில் ஈடுபடுதல் தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

இவ்வறிவுறுத்தலைப் பொருட்படுத்தாது மேற்படி சம்பவங்களில் ஈடுபடும் மாணவர்கள் மீது நிர்வாகம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் போது மாணவர் ஒன்றியம் நிர்வாகத்தின் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எனவே மாணவர்கள் எவரும் புதிய மாணவர்களைத் துன்புறுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம் என அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-4-6-9)

# 30 கோடி இந்திய ரூபா பெறுமதியான ஹெரோயின் தமிழகத்தில் சிக்கியது

## இலங்கைக்கு கடத்தப்பட இருந்ததாம்

கொழும்பு,ஜூலை8

தமிழ்நாட்டில் இருந்து இலங்கைக்கு கடத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட 30கோடி 20 லட்சம் இந்திய ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருள்களை இந்தியப் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை திருநெல்வேலிக்கு அருகில் பாளையத்துப் பகுதியில் வேகமாக வந்த வாகனத்தை இடைமறித்துச் சோதனையிட்ட பொலீஸார் இந்த போதைப் பொருள்களை மீட்டனர்.

30 பிளாஸ்ரிக் பைகளில் நிரப்பப்பட்டு இந்த ஹெரோயின் வாகனத்தில் பொருள்களின் இடையே மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

தமிழ்நாட்டில் இவ்வளவு பெருந்தொகையான போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும். (ம-6)

## அதியுயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லக்கி கொடித்துவக்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியால் அதியுயர் பாதுகாப்புப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் ஐ.தே.கட்சியும் ஏனைய எதிர்க்கட்சிகளும் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தத் திட்டமிட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ம-6)




ஈழத்தமிழர்களுக்கு எதிரான அரச படையினரின் வன்முறைகளை- குறிப்பாக தமிழ்ப்பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுகளை - கண்டித்து பதினொரு தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது எடுக்கப்பட்ட படம் இது. ஆயிரக்கணக்கான மக்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர். (ம)

## ஸ்டாலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரின் பெரியதாய் வயிற்றுச் சகோதரரான மு.க.அழகிரி உட்பட பல்லாயிரக்கணக்கான ஆதரவாளர்கள் அங்கு கூடினர்.

அங்கு செய்தியாளர்களிடம் பேசிய ஸ்டாலின் -

தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை நீதிமன்றத்தில் சந்திக்கத் தான் தயாராக இருப்பதாகவும் -

முதுகுவலி மூட்டுப் பிடிப்பு போன்ற போலிக் காரணங்களைக் கூறி கைதையோ, வழக்கையோ தவிர்க்கப் போவதில்லை எனவும் - தெரிவித்தார்.

முதல்வர் ஜெயலலிதா, அவரது தோழி சசிகலா ஆகியோர் தி.மு.க. ஆட்சிக்காலத்தில் தம் மீதான ஊழல் வழக்குகளின் போது உடல் நிலையைக் காரணம் காட்டி நீதிமன்றங்களில் ஆஜராகாது தவிர்த்து வந்தது குறிப்பிடத்தக்கது. (உ-ஒ)

## சில அமைச்சர்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜயசேகர, பிரதி நிதியமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே, விவசாயத்துறை அமைச்சரும் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளருமான டி.எம். ஜெயரத்ன ஆகியோரே எதிர்க்கட்சிக்குத் தாவக்கூடும் என்று ஜனாதிபதி அஞ்சுகிறார்.

இவர்களில் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க மீது ஜனாதிபதிக்கு அதிக சந்தேகம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இந்த அமைச்சர்களின் நடவடிக்கைகளையும் இவர்கள் தொடர்புகளை வைத்திருக்கும் இடங்களையும் தீவிர கண்காணிப்பில் வைத்திருக்குமாறு புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரிக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்

- இப்படி அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (ம-6)

# நெல்லியடி மோதல் சம்பவத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முந்த பயங்கரவாதி ஒருவரின் சடலத்தைக் கண்டெடுத்தனர்.

*ஒரு சிப்பாய் உயிரிழந்தார்; மற்றொருவர் காயமடைந்தார்.*

*பயங்கரவாதியின் சடலம் மந்திகை ஆஸ்பத்திரியின் பிரேத அறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நெல்லியடிப் பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.*

- இவ்வாறு விசேட ஊடகத் தகவல் மையம் தனது நிலைவர அறிக்கையில் தெரிவித்துள்ளது.

**ஆசிரியர் குறிப்பு:-**

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்தவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் அல்லர். துன்னாலை வாசியான மயில்வாகனம் ஜெயக்குமார் (கடாபி, வயது - 30) என்பவரே இச்சம்பவத்தில் நெஞ்சில் சூடுபட்டு உயிரிழந்தவராவார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உடுப்பிட்டித் தொகுதி அமைப்பாளரான இவர், முன்னர் கரவெட்டிப் பிரதேச சபையில் புளொட் சார்பு உறுப்பினராக இருந்தவர்.

இந்த விடயம் நேற்றைய உதயனில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் உயிரிழந்தவர் பயங்கரவாதி என்று நேற்று நண்பகல் வெளியான விசேட ஊடகத் தகவல் மையத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

பூரண விசாரணை முடிவுற்று, உயிரிழந்தவர் யார் என்பது குறித்து தெளிவான தீர்மானம் ஒன்றை எடுக்கும் வரை உயிரிழந்தவர் 'பயங்கரவாதி' அல்லது 'சந்தேகநபர்' என்று படைத்தரப்பு கருதுவது அவர்களைப் பொறுத்தவரை தவறானதல்ல.

ஆனால், அதற்காகப் படையினர் நடத்தும் துப்பாக்கிப் பிரயோகத்தில் அல்லது படையினருடனான புலிகளின் மோதல்களில் உயிரிழக்கும் அனைவரும் 'புலிகள்' அல்லது 'பயங்கரவாதிகள்' என்ற சாரப்பட பத்திரிகைகள் செய்தி வெளியிட வேண்டும் என்று படைத்தரப்பு எதிர்பார்ப்பது தவறானதாகும்.

இது தொடர்பாக கடந்த 3ஆம் திகதி யாழ்.பாதுகாப்பு தலைமையகத்தின் கட்டளை அதிகாரிக்குப் பதிலாக கப்டன் பி.ரி.லியனகே ஒப்பமிட்டு 'செய்தி பிரசுரிப்பது தொடர்பாக' என்று தலைப்பிட்டு 'உதயன்' ஆசிரியருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் சாராம்சத்தை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

*1."யாழ்.குடாநாட்டில் சட்டவிரோதமான முறையில் ஊடுருவி அழிவுச் செயல்களை மேற்கொள்ள முயற்சி செய்துவரும் தமிழீழ விடுதலைப் புலிப் பயங்கரவாதிகள், சில சமயங்களில் படையினருடன் ஏற்படும் மோதல்களின்போது உயிரிழக்க நேரிடுகின்றது. ஆனால் இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்களின் உண்மை நிலைமை மூடிமறைக்கப்பட்டு, பாதுகாப்பு படையினரின் தாக்குதலில் அப்பாவி இளைஞர்களே உயிரிழந்து வருவதாகக் கடந்த சில தினங்களாகத் தங்களது பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டு வந்துள்ளமை தெரியவந்துள்ளது.*

*2."இவ்வாறான செய்திகளை வாசிக்கும் தமிழ் மக்கள் மத்தியில் படையினர் குறித்துத் தவறான அபிப்பிராயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் மோதல்களின்போது உயிரிழக்கும் நபர்கள் தொடர்பான சரியான தகவல்களைப் பெற்று தங்களது பத்திரிகையில் இனிவரும் காலங்களில் பிரசுரிக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்."*

- என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இக்கடிதத்தை அனுப்பிய படை அதிகாரிக்கு நெல்லியடிச் சம்பவம் தொடர்பான செய்திகள், சரியான நிலைமையைத் தெளிவுபடுத்தியிருக்கும் எனக் கருதுகின்றோம். மேலதிகமாகப் பின்வருவனவற்றையும் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

1. ஒரு மோதல் அல்லது தாக்குதல் சம்பவம் நடந்த பின்னர், தற்போதைய யாழ்ப்பாணச் சூழ்நிலையில் அது குறித்து நேரில் சென்று சுயமாகப் பூரண விசாரணை நடத்தித் தகவல் பெறுவதற்கான வாய்ப்போ, நேரமோ, சூழலோ, பாதுகாப்போ, தொடர்போ பத்திரிகையாளர்களுக்கு- குறிப்பாக யாழ். பத்திரிகையாளர்களுக்கு - இருப்பதில்லை.

2. அதற்காக தெரிந்த தகவல்களை - இயன்ற செய்திகளை - வாசகர்களுக்கு முன்வைக்கும் எமது பணியை நாம் தொடராமல் இருக்க முடியாது.

3. மோதல்களில் உயிரிழந்தவர் அல்லது காயமடைந்தவர் பயங்கரவாதியா அல்லது அப்பாவியா என்பதைத் தீர்மானிக்கக் கூடிய ஆற்றலோ, வசதி வாய்ப்போ, அதிகாரமோ, தகுதியோ, சாதாரண செய்தியாளனுக்கு உரியதும் அல்ல. எனவே கிடைத்த செய்தியை - தகவலை - செய்தியாளன் முன்வைக்கிறான்; அதைப்பத்திரிகைகள் பிரசுரிக்கின்றன.

உயிரிழந்தவர் அல்லது காயமடைந்தவர் பயங்கரவாதியா அல்லது அப்பாவியா என்பதை நாமாக முடிவு செய்து எப்போதும் அறிவிப்பதில்லை. "சண்டையில் உயிரிழந்ததாகத் தெரிவித்து ஓர் இளைஞனின் சடலம் ஆஸ்பத்திரியில் படையினரால் அல்லது பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்டது" என்று சாரப்பட மட்டுமே நாம் குறிப்பிடுவோம். இனி இல்லை என்று அத்தகையவர் அப்பாவி என உறுதிப்படுத்தப்பட்டால் மட்டும் அவரது அப்பாவி நிலைமையை வெளிப்படுத்தும் தகவல்களைச் செய்தியில் சேர்த்துக்கொள்வோம்.

இத்தகைய சம்பவங்களில் உயிரிழப்பவர் அல்லது காயமடைபவர் எவ்வாறு உயிரிழந்தார், அவரது முழு விவரங்கள், அவரைப் பயங்கரவாதி என்று படைத்தரப்புக் கருதுகின்றதா என்பது போன்ற - படைத்தரப்பின் பக்கத்து - தகவல்களை கேட்டறிவது கூட யாழ்.பத்திரிகையாளர்களுக்குக் கஷ்டமான ஒரு விடயமாகவே உள்ளது.

எனவே 'ஓர் இளைஞன் உயிரிழந்தான்' அல்லது 'மோதலில் உயிரிழந்த ஓர் இளைஞனின் சடலம் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது' என்று வெளியாகும் செய்தியைப் பார்த்து உயிரிழந்தவர் ஓர் அப்பாவியென உதயன் குறிப்பிடுவதாகவோ அல்லது அவர் பயங்கரவாதி என்பதை உதயன் மறைக்கின்றான் என்றோ தங்களுக்குள் அர்த்தம் கற்பிக்க வேண்டாம் என சம்பந்தப்பட்ட படை அதிகாரிகளை கேட்டுக்கொள்கின்றோம். (ஆ-ர்)

எமது புதிய வீடியோ CD
வெளியீடு
சரத்குமாரின்
★ தோஸ்த் ★
(பிரதிகள் உடன் பெறலாம்)
வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (C/17334)

# புலிகளைத் தடை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் 1979ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் 30ஆம் பிரிவின் கீழ் இந்தத் தடை நீக்கப்பட்டது.

இந்தத் தடையை நீக்குவதாக அந்தச் சட்டத்தின் 30ஆம் பிரிவு தெளிவாகக் கூற, அதே சட்டத்தின் 27ஆம் பிரிவின் கீழ் ஒரு பிரமாணத்தை விடுப்பதன் மூலம் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதாக ஜனாதிபதி அறிவிப்பது கேலிக்கூத்தாகும்; அது சட்ட வலுவற்ற பிரகடனமாகும். அந்தச் சட்டத்தின் அடிப்படைக்கே அது முரணானதாகும்.

இதே சட்டத்தின் கீழ் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதாயின் இச்சட்டத்தின் 30ஆவது பிரிவுக்கு ஒரு திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும். அந்தத் திருத்தத்தை நாடாளுமன்றம்தான் நிறைவேற்ற முடியும்.

எனவே நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை ஜனாதிபதி தன்னுடையதாக, தவறாகப் பயன்படுத்த முயல்கின்றார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் 27ஆம் பிரிவின் கீழ் பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் புலிகள் மீதான தடையை ஜனாதிபதி விதிப்பது சட்ட முரணானதும், செல்லுபடியற்றதும் என்பதால் புலிகள் இயக்கத்தை இப்போது தடைசெய்யப்பட்ட இயக்கமாகக் கருதமுடியாது.

ஜனாதிபதியின் இந்தப் பிரகடனம் சட்ட வலுவற்றது என்பதால் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்ட ஓர் அமைப்பு அல்ல என்பது பாதுகாப்புப் படைகளுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

சரியான முறையில் ஆலோசனை கூறப்படாததால் ஜனாதிபதி நாடாளுமன்றத்தின் அதிகாரத்தைத் தமது கையில் எடுக்கும் தவறான பாதைக்கு வழி நடத்தப்பட்டிருக்கின்றார்.

- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி சின்னத்தம்பி

**(பராசக்தி)**

விதானையார் வளவு, குரு வீதி, காங்கேசன்துறையைச் சேர்ந்த திருமதி புவனேஸ்வரி சின்னத்தம்பி அவர்கள் 02.07.2001 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் சிவபதமடைந்த விதானையார் ஆறுமுகம் சின்னத்தம்பி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் அருமை மகளும் சிவகாமசுந்தரி (U.K.), ஆறுமுகதாசன் (U.K.), பொன்னம்பலவாணர் (U.K.), அன்னலட்சுமி (U.K.), பரமகுருநாதன் (கொழும்பு), ஞானசரஸ்வதி (ஆசிரியை, நடேஸ்வரக்கல்லூரி/அருணோதயக்கல்லூரி), சக்திவேல் (U.K.), விக்கினேஸ்வரன் (U.K.), சிவானந்தன் (U.K.) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், சிவகுருநாதன் (கனடா) ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2001) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது தற்காலிக வதிவிடமாகிய "ரைப்பிங் வாசா", அம்பலவாணர் வீதி, உடுவிலில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காகப் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:

*"ரைப்பிங் வாசா",*
*அம்பலவாணர் வீதி, உடுவில்.*

ஞானசரஸ்வதி *(ஞானி - மகள்)*,
சகோதரர்கள். (89830)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.07.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.